Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

தினக்குறிப்பு
— 1960 —
மாணவர்களுக்கும், மற்றோருக்கும்
உபயோகமானது.
( அளவு 4″ × 6½″ )
விலை சதம் 75 தபால் செலவு சதம் 35
கலாநிலைய பதிப்பகம்
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, மார்கழி 11- ஆம் நாள். ஜமாதிஸானி பிறை 25 (26-12-59) சனிக்கிழமை இதழ் 47.

# இடதுசாரிப் பிளவுகள் : டட்லி அதிர்ஷ்டம்

## வருகிற பொதுத் தேர்தலில் யு. என். பி. யின் நம்பிக்கை

— நமது அரசியல் நிருபர் —

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் மூன்று இடதுசாரிக் கட்சிகளும், பல தொகுதிகளிலே தற்கொலைப் போட்டிகளில் ஈடுபட்டதால் யு. என். பி. கட்சி அதிக ஸ்தானங்களைப் பெறமுடிந்தது. இதே போல் வருகிற பொதுத் தேர்தலிலும் நடக்குமென்று அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இந்த உண்மையை உணர்ந்தும் கூட, வருகிற பொதுத் தேர்தல் விஷயமாக மூன்று இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜ், கொம்யூனிஸ்ட், எம். ஈ. பி. கட்சிகளுக்குள்ளாக எவ்வித பொதுவான ஒப்பந்தமும் ஏற்படமுடியவில்லை.

இடதுசாரி ஒற்றுமைக்காக பலத்த முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் பிலிப் குணவர்த்தன, தமது வகுப்பு வாத, மதவாதக் கொள்கையைப் பிடிவாதமாகப் பின்பற்றுகிறார். இலங்கை இந்தியர் பிரஜா உரிமை விஷயத்திலும் அவர் இதே மனப்பான்மையைக் காட்டுவதாகவும், மற்ற இடதுசாரிக் கட்சிகளுடன் ஒத்துப் போக முடியாதென்றும் மறுத்துவிட்டதாகவும் தெரிகிறது.

சமசமாஜிகளுக்கும் கொம்யூனிஸ்ட்களுக்கும் சமரசம் ஏற்பட முடியவில்லை. இதனால் இவ்விரு கட்சிகளும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்டு இலங்கையெங்கும் பல தொகுதிகளில் ஒன்றுக்கொன்று போட்டியிடுகின்றன.

பிலிப் குணவர்த்தனவின் எம். ஈ. பி. க்கும், மற்ற இடதுசாரிக் கட்சிகளுக்கும் இரத்தினபுரி முதலிய பகுதிகளில் எதிர்ப்பு உணர்ச்சிகள் அதிகரித்துள்ளனவாம். இதனால் சிற்சில இடங்களிலாவது ஒருவருக்கொருவர் போட்டியிடாமல், ஆங்காங்கே பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஏதாவது விசேஷ ஏற்பாடு செய்து கொள்ளலாமா என்பதுபற்றி பேச்சுகள் நடப்பதாக அறிகிறேன். இரண்டொரு இடங்களில் விட்டுக் கொடுத்ததாயும், பொதுவாகப் பல தொகுதிகளிலும் இம் மூன்று இடது சாரிக் கட்சிகளும் போட்டியிட்டு இடது சாரி வாக்குகள் பிளவுபடக்கூடும்.

இடது சாரிக் கட்சிகளுக்குள் இவ்விதம் பிளவுகள் ஏற்பட்டுள்ளது, யு. என். பி. க்கு விசேஷ மகிழ்ச்சி அளித்துள்ளது. கொழும்பு நகர சபைத் தேர்தல் முடிவுகள் அக் கட்சிக்குப் புதிய பலம் அளித்ததுடன், அடுத்த மந்திரி சபை டட்லியின் தலைமையிலே தங்கள் கட்சியே அமைக்குமென்ற நம்பிக்கையும் பலப் பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அக் கட்சியினர் போட்டி

[9 ஆம் பக்கம் பார்க்க]

# மன்னார், மலைநாடு தொகுதிகளில்

## ஜனநாயக காங்கிரஸ் போட்டியிடும்

—நமது அரசியல் நிருபர்—

கொழும்பு

மன்னாரிலும், மலைநாட்டில் சில தொகுதிகளிலும், கொழும்பு மத்திய தொகுதிகளிலும் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் கட்சி தனது அபேட்சகரை நிறுத்தி, வருகிற தேர்தலில் போட்டியிடுமென்று அறிகிறேன்.

அக்கட்சியைச் சேர்ந்த சில தலைவர்கள் இன்று யாழ்ப்பாணத்துக்குச் செல்வதாகச் சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது. ஆனால் அவர்கள் செல்லவில்லை.

இரு காங்கிரஸ்களும் இணைந்த பின் ஏற்பட்டுள்ள புதிய நிலையில், இது பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டியிருப்பதாகவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அது தேர்தலில் அநேகமாகப் போட்டியிடாதென்றும் தெரிகிறது.

இரு காங்கிரஸ் தலைவர்களுக்கும் வெகு நாட்களாக சம

[9ஆம் பக்கம் பார்க்க]



திருமதி மீனா இரத்தினம்

கொழும்பு நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய திருமதி மீனா இரத்தினம் இப்பத்திரிகைக்கு அளித்த பேட்டி 3-ம்பக்கத்தில் வெளியாகியுள்ளது.

# இதுதானா டட்லியின் ஜனநாயகம்?

## கொழும்பு நகரசபைத் தேர்தல் அலங்கோலம்

## டக்டர் என். எம். பெரேரா அளித்த பேட்டி

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

"அருவருப்பும் வெறுப்பும் என்னைக் கொழும்பை விட்டுப்போ என்று துரத்தின." இவ்வாறு கொழும்பு நகரசபைத் தேர்தல் முடிந்ததும் யாழ்ப்பாணம் வந்த சமசமாஜக் கட்சித் தலைவர் டக்டர் என். எம். பெரேரா நமது நிருபரிடம் கூறினார்.



"இப்படியா தேர்தல் நடாத்துவது? இது முறையான தேர்தலே அல்ல. இதுதானா டட்லியின் ஜனநாயகம்?. இது ஜனநாயகத்தின் எதிர்மறை. ஜனநாயகத்தின் பாதுகாவலனென்று வீம்பு பேசித் திரியும் டட்லி உடனே இராஜினாமா செய்துவிட வேண்டும். அவருடைய கட்சிக்கும் நேர்மையான அரசியலுக்கும் வெகு தூரம். கொழும்பு நகரசபைத் தேர்தலில் அவர்கள் நடந்துகொண்டவிதம் நாற்றமெடுக்கிறது. நான் நேரில் கண்ட காட்சிகளையே சொல்லுகிறேன். எத்தனையோ தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் காலை 8 மணிக்கும் 10 மணிக்குமிடையில் அந்தத்தொகுதிக்குச் சேர்மதியில்லாத எத்தனையோ நூற்றுக்கணக்கானவர்கள் கார்களில் கொண்டு வரப்பட்டு 'ஆள் மாறி' வாக்களித்தார்கள். இது கொட்டாஞ்சேனை தெற்கு வட்டாரத்தில் பிரத்தியேட்சமாக விருந்தது. இதைத் தடுப்பதற்கு சட்டபூர்வமானவழிவகைகள் இல்லை. இப்போதுள்ள தலதாபன தேர்தல் சட்டம் இப்படிப்பட்ட அருவருப்பான செயல்களைத் தடுக்கப் போதிய பலமில்லாதது. படை படையாக யு. என். பி.க் காரர் கொண்டு வந்த 'ஆள் மாறி'களை நாம் கண்டும் ஒன்றும் செய்ய முடியவில்லை. பொலிசாரும் இதில் ஒன்றும் செய்ய முடியாமற் போய்விட்டது. 2500 முஸ்லிம்களும் 1500 சிங்களவரும் தமிழரும் கொண்ட ஒரு தொகுதியில் ஒரு யு. என். பி. சிங்களவர் வெற்றிபெற்றது வியப்பிலும் வியப்பல்லவா? இரண்டாவதாக வந்தவர் ஒரு முஸ்லிம். தேர்தல்கள் நெறிதவறாமல் நடந்திருந்தால் இன்று


[9 ஆம் பக்கம் பார்க்க]

### இடதுசாரிகள் ஒற்றுமைப்பட்டிருந்தால்?

கொழும்பு முனிஸிப்பல் தேர்தலில், இடதுசாரிக்கட்சிகள் ஒற்றுமையாகப் போட்டியிட்டிருந்தால்,கட்சி நிலைமை பின்வருமாறு அமைந்திருக்கலாம்:

| | | |
|---|---|---|
| யு. என். பி. | — | 15 |
| எல். எஸ். எஸ். பி. | — | 12 |
| ஸி. பி. | — | 5 |
| சுயேச்சை | — | 3 |
| எம். ஈ. பி. | — | 1 |
| எஸ். எல். எவ். பி. —எம். பி. பி. | — | 1 |
| | | 37 |

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




BRIDGESTONE TIRES

பிரிட்ஜ்ஸ்டோன் டயர்கள்

*Distributors:*

**Tuckers Autodrome**

ஏகவினியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## "தியாகிகளின் தேவாலயம்"

இலங்கை 'டைம்ஸ்' பத்திரிகை 1-11-59 இதழில் மன்னார் சம்பந்தமாக வெளியான ஒரு கட்டுரையில், "தியாகிகளின் தேவாலயம்" என்ற தலைப்பிட்ட படத்தின் கீழ் பின்வரும் குறிப்புக் காணப்படுகிறது:

> "கத்தோலிக்க சமயத்தின் வரலாற்றில் அதன் தியாகிகளின் கதை போன்ற ஒரு சோகக் கதை வேறெதுவுமில்லை. அர்ச். பிரான்சிஸ் சேவியர் மன்னாருக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாண மன்னன் சங்கரராஜா ஒரு கொடிய ரத்தக்களரி எழுப்பினான்...."

இந்தச்சம்பவம்பற்றிப்போத்துக்கீசரும் அவர்களுடைய கத்தோலிக்க சீடர்களும் எழுதிய வரலாற்றுக் குறிப்புக்களேஎமக்குக் கிடைக்கக்கூடியனவாயிருக்கின்றன. யாழ்ப்பாண மன்னன் சங்கிலி (பரராசசேகரன்) யின் அபிப்பிராயத்தையும், மன்னாரில் கத்தோலிக்கத்தைத் தழுவியவர்கள் கொலையுண்ட சூழ்நிலையையும், நாம் இன்னும் பாரபட்சமற்ற நோக்குடன் பரிசீலனை செய்யவில்லை. உணர்ச்சியற்ற ஒரு நாட்டின் படைவீரரும் குருமாரும் சேர்ந்து தனது இராச்சியத்தையும், தனது மக்களின் மதத்தையும் கொள்ளையடிப்பதைக் கண்டு அக்கொடுமைகளைத் தடுக்கமுயன்ற ஓர் அரசன் அநியாயமாகத் தீராப் பழிக்குள்ளாகியிருக்கிறான்.

வாழையடிவாழையாகத் தங்கள் மன்னர்கள் கடைப்பிடித்து வந்த மதத்தையே தாங்களும் பின்பற்றி வந்த ஒரு மக்களிடையே போத்துக்கீசர் வில்லங்கமாகப் புகுந்து வியாபாரம் என்ற போர்வையில் மதமாற்றமும் நடாத்தினார்கள். பிரான்சிஸ் சேவியர் மன்னாருக்கு வந்து 600 பேருக்கு ஞானஸ்நானம் அளித்த செய்தியை, 'காட்டுமிராண்டிகள்' என்று வர்ணிக்கப்பட்ட உள்ளூர் மக்களின் மத குருக்கள்மார் சங்கிலி மன்னனிடம் சென்று முறையிட்டனர். அவன் உடனே பெரும் படையுடன் மன்னாருக்கு வந்து மதம் மாறிய தன்பிரஜைகளில் சிலரைத்தன் வாளுக்கு இரையாக்கினான். இந்த மதம் மாறும் நிகழ்ச்சி ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்றிருந்தால் ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் 'இராசத்துரோகம்' என்று அக்கணமே கண்டித்திருப்பார்கள். ஆனால் இங்கேபோர்த்துக்கீச கத்தோலிக்க சரித்திராசிரியர்கள் மதம் மாறியவர்களைத் 'தியாகிகள்' ஆக்கிவிட்டனர்!

கத்தோலிக்க சமயத்தைத்தழுவியது மதமாற்றம் மட்டுமன்று. சொந்த மன்னனுக்கெதிராக, அம்மதத்தைக் கற்பித்த தலைவர்களுக்கு அடிபணிந்து போகும் இராசத்துரோகமுமாகும்.

எஸ். ஜே. குணசேகரம்

கோப்பாய்.

## லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

லங்கா தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பதினைந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எட்டியாந்தோட்டையில் இன்று ஆரம்பமாகியது. பொதுக் கூட்டம் தொடர்ந்து நாளை மாலை வரை நடைபெறும். இக் கூட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சிப் பிரமுகர்களான டக்டர் என். எம். பெரேரா, டக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா, எட்மண்ட் சமரக்கொடி, திருமதி விவியன் குணவர்த்தன, ஏ. துரைராஜசிங்கம், ஏ. விஸ்வநாதன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

## காரைநகரில் மணிவாசகர் விழா நான்கு தினங்கள் நடைபெறும்

அடுத்த ஆண்டு முதல் வாரத்தில் காரைநகர்ச் சிவன் கோவில் மண்டபத்தில் மணிவாசகர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடக் காரைநகர் மணிவாசகர்சபை முடிவு செய்துள்ளது.

சனிக்கிழமை (9-1-60) அன்று ஆரம்பமாகும் இவ் விழா தொடர்ந்து செவ்வாய் (12-1-60) வரை நடைபெறும். விழாவைப் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் திறந்து வைப்பார்கள். இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள் சைவபரிபாலனசபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப் பிள்ளையினதும், மூன்றாவது நாள் நிகழ்ச்சிகள் காரைநகர் மணிவாசகர்சபைத் தலைவர் திரு. ஆ. கனகசபையினதும் தலைமையில் நடைபெறும். இத்தினங்களில் பல அறிஞர்கள் மணிவாசகரின் வாழ்க்கை, அவர் இயற்றிய திருவாசகம் இவை பற்றி விரிவுரையாற்றுவர். விழாவின் இறுதி நாளாகிய செவ்வாய்க் கிழமை இரவு, அளவையூர் திரு. சீ. விநாசித்தம்பி அவர்களின் சங்கீத கதாப்பிரசங்கம் இடம் பெறும்.

## மல்லாகம் இந்து சமய விருத்திச் சங்கம்

மல்லாகம் இந்து சமய விருத்திச் சங்கத்தின் வருடாந்த விழா இன்று மாலை ஆறு மணிக்கு மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் நடைபெறும். இவ்விழா, சங்கத் தலைவர் திரு. ம. செல்வத்துரை அவர்களின் தலைமையில் நடைபெறும்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF BATTICALOA.

*Testamentory Jurisdiction* No. 737.

In the matter of the intestate estate and effects of the late Sinniah Sathasivam of No. 155 Main Street Trincomalee.

Deceased

Annapuranam Sathasivam of Arasadi Junction Batticaloa.

Petitioner.

Vs.

1. Sathasivam Pathmanathan and 2. Sathasivam Inthiranathan of Arasadi Junction, Batticaloa. MINORS by their Guardian ad litem the 3rd respondent;
3. Kathiramathamby Nagarajah of Arasadi Junction Batticaloa as Guardian ad Litem over the minors the 1st and 2nd respondents abovenamed

........Respondents.

This matter coming on for disposal before D. S. L. P. Abeyasekara Esquire District Judge of Batticaloa on the 15th day of September 1959 in the presence of Mr. R. B. Kadramer Proctor on the part of the petitioner the petition and affidavit dated 21st March 1959 and 19th March 1959 respectively of the petitioner and the motion dated 15th September 1959 having been read. It is ordered that the 3rd respondent abovenamed be and he is hereby appointed as Guardian ad Litem over the minors the 1st and 2nd respondents that the petitioner as widow of the deceased declared entitled to have letters of administration to the intestate estate of the deceased and the same be issued to her accordingly unless the respondents or any person or persons shall on 29th October 1959 show sufficient cause to the contrary.

Sgd. D.S.L.P. ABEYASEKARA
District Judge.

Batticaloa,
15th September 1959.

The above Order Nisi is extended for showing cause to the contrary on the 1st December, 1959.

Sgd. D.S.L.P. Abeyasekara
District Judge.

29th October, 1959.

The above Order Nisi is extended for showing cause to the contrary on the 31st day of December, 1959.

Sgd. D.S.L.P. Abeyasekara
District Judge.

1st December, 1959.



கொழும்பு நகரசபைக்கு

# சிங்கள வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பெண்மணி

## 'வகுப்பு வெறிக் கூச்சல் இனிப் பலிக்காது' என்கிறார் திருமதி மீனா இரத்தினம்

— 'ஈழநாடு' பிரதிநிதி —

"எனது உணுப்பிட்டி வட்டாரத்திலே சுமார் 3000 வாக்காளர் சிங்களவர். 300 பேர் தான் தமிழர். மற்றவர்கள் முஸ்லிம்கள். இங்கு எனக்கெதிராகச்சிலர் இனத்துவேஷ கூச்சல்களை எழுப்பினர். ஏன் ஒரு தமிழ்ப் பெண்ணுக்குச் சிங்களவராகிய நீங்கள் வாக்களித்து மாநகரசபைக்குத் தெரிவு செய்து அனுப்பவேண்டும்? என்று கூறினார்கள். ஆயினும் இந்த வகுப்புவெறிக் கூச்சலுக்குச் செவிசாய்க்காமல், என்னைத் தெரிவு செய்துள்ளார்கள். மக்கள் வகுப்பு வெறிக்கு மீண்டும் தலை சாய்க்கமாட்டார்கள் என்பதற்கு இது தக்க சான்று" என்று கொழும்பு மாநகரசபை, உணுப்பிட்டி வட்டாரத்தின் புதிய அங்கத்தவரான திருமதி மீனா இரத்தினம் "ஈழநாடு" பிரதிநிதிக்கு அளித்த பேட்டியில் கூறினார். இத்தேர்தலில் அவர் 2169 வாக்குகளைப் பெற்று 525 அதிகப்படி வாக்குகளால் பெரிய வெற்றி பெற்றார்.

### ஒரு கசப்பான பாடம்

யு. என். பி. யின் வெற்றியைக்குறித்துப்பேசும்பொழுது, "சென்ற தேர்தலில் யு. என். பி. 19 தொகுதிகளைக் கைப்பற்றியது. இந்தத் தேர்தலில் 23 ஸ்தானங்களைக் கைப்பற்றினர். எனவே புதிய தொகுதிகளின் எண்ணிக்கைப்படி இதனை ஒரு வெற்றியாகக் கருதமுடியாது. ஏறக்குறைய வெற்றிபெற்ற எல்லாத் தொகுதிகளிலும் இவர்கள் மிகக் குறைந்த அதிகப்படி வாக்குகளாலேயே வெற்றியடைந்துள்ளனர். இடதுசாரிக் கட்சிகளுக்கு கிடைத்துள்ள வாக்குகளின் தொகை, இவர்களுக்கு எதிராக, இடதுசாரிக் கட்சிகளுக்கே நகரத்தில் செல்வாக்கு இருப்பதைக் காட்டுகின்றது. எனவே, இந்தத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தால் வலதுசாரிக் கட்சிகளை முறியடித்திருக்கலாம். இடதுசாரிக் கட்சிகள் கசப்பான ஒரு பாடம்படித்துக் கொண்டுவிட்டன. எனவே பொதுத்தேர்தலைப் பொறுத்த வரையிலே இது இடதுசாரிகளின் கண்களைத் திறக்க உதவும் என நம்புகின்றேன். மீண்டும் இந்தத் தவறைச் செய்தால் வலதுசாரிக் கட்சிகள் சிரமமின்றி உள்ளே நுழைந்துவிடும்" எனக் கூறினார்.

"நீங்கள் ஏன் சுயேச்சையாகப் போட்டியிடுகிறீர்கள்" என்று கேட்டதற்கு "நான் எப்பொழுதுமே சுயேச்சையாகத்தான் போட்டியிட்டு வந்திருக்கிறேன். இதனால் நான் எதுவிதக் கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாக எனது பணியைச் செய்ய முடிகின்றது" எனக் கூறினார்.

தனது வட்டாரத்திலே அநேக குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குச் செல்லாமல் இருக்கின்றனர் என்றும், இதற்குக் காரணம் பெற்றோரின் வறுமையும், கல்விகற்பதற்குத் தக்க வசதியின்மையுமே எனவும் கூறினார். உடனடியாக இப் பகுதியில் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவி இவர்களுக்குக் கல்வியறிவு பெறச் செய்வது தனது முக்கிய கடமையாகுமெனவும் அவர்தெரிவித்தார்.

### குடும்பக் கட்டுப்பாடு

இப் பகுதியிலுள்ள குடும்பக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை உணரச் செய்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார் அவர்.

அத் தொகுதியில் பலர் குடியிருக்க வசதியின்றிச் சேரிகளிலும், வீடுகள் என அழைக்கப்படும் ஒற்றையறைக் குடிசைகளிலும் வாழ்வதாகவும் மாநகரசபை புதிய வீடுகள் கட்டி இவர்கள் வாழ வழி செய்யும்வரையில் இவர்களுக்கு விமோசனம் ஏற்படாது எனவும் தெரிவித்தார்.

"பெண்கள் ஏன் அதிகமாக நகரசபைத் தேர்தலில் பங்கு கொள்ளவில்லை?" என்ற கேள்விக்கு அவர்களுக்குப் பலவழிகளிலும் இடைஞ்சல் ஏற்படுவதாகவும், காடையர்கள் பெண்களைப் பயமுறுத்தவும் இலகுவில் முடிகிறது என்றும் இதற்கு அஞ்சியே பெண்கள் தேர்தலில் வெகுவாகப் போட்டியிடத் தயங்குகின்றனர் என்றும் கூறினார்.

"அடுத்து வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் நோக்கம் உங்களுக்கு உண்டா?"

"பலர் என்னைப் போட்டியிடும்படி கேட்டுக்கொண்டனர். இருப்பினும் போட்டியிடும் நோக்கம் எனக்கு இல்லை."

"நாட்டின் முன்னேற்றத்திற்கு உடனடியாக என்ன தேவை?"

"நான் முன்பு கூறியதைப் போல், இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து வலதுசாரி, பிற்போக்குக் கட்சிகளை முறியடித்து, நாட்டிற்கு நல்லது செய்ய முன்வரவேண்டும்" என அவர் விடை பகர்ந்தார்.

# "உலக அனுபவமின்றி எழுத்துலகில் குதிக்காதீர்"

## இளம் எழுத்தாளருக்கு இராஜாஜி உபதேசம்

"இளம் எழுத்தாளர்கள் போதியளவு உலக அனுபவம் இருந்தாலன்றி எழுத்துலகில் குதிக்கப்படாது". சென்னையில் நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டில் பேசும்போது சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இந்த எச்சரிக்கையை விடுத்தார். இராஜாஜி மேலும் கூறியதாவது:

"வாலிபர்கள் பலர் வயது வந்தவுடனேயே எழுத ஆரம்பித்து விடுகிறார்கள். முதுமையுடன் கூடிய அனுபவம் பெற்ற பின் எழுதுவதையே நான் விரும்புகிறேன். எழுத்தாளர்கள் வாழ்க்கையில் தாங்கள் கண்ட அனுபவங்களையும் அவை தூண்டிவிட்ட சிந்தனைகளையும் எழுத்துருபத்தில் சித்திரிக்கவேண்டும். ஆகையால் அதற்கு வேண்டிய வயது முதிர்ச்சியும் அனுபவ பூரணமும் அவர்களுக்கு அவசியம் இருக்கவேண்டும். எதை எழுதினாலும் அதில் ஒரு அறிவுரை பொதிந்திருக்க வேண்டும். இன்றைய நாகரிக உலகத்திலும்கூட எழுத்துவகைகளை தர்மம், அர்த்தம், காமம் என்ற பழைய பிரிவுகளுக்குக் கொண்டுவரலாம். தர்மத்தை உணர்த்தும் நீதிநூல்களையும், அறிவை வளர்க்கும் அர்த்த சாஸ்திரங்களையும் எழுதலாம். காமம் என்பது இங்கே வெறும் உடலாசையைக் குறிப்பதல்ல. இன்ப உணர்ச்சியை உண்டுபண்ணும் எந்த எழுத்தையும் இந்த இனத்திற் சேர்க்கலாம். ஆனால் இவ்விதமான எழுத்துவகையில் தர்மத்தையும் எப்படியாவது புகுத்திவிட்டோமானால் அதுவே எழுத்துக் கலையின் சிகரமாகும். வாசகர்களின் ரசனையையும் அறிவையும் ஒருபோதும் குறைவாக நினைக்கக் கூடாது. ஆகையால் எதை எழுதினாலும் அதில் ஒரு பகுதியை வாசகர்களின் கற்பனைக்கு விட்டுவிடுவதே சிறந்த எழுத்துமுறை".

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

வழக்கமாகப் போய்வரும் பாதைக்கருகில் ஒரு கடை. ஊறுகாய், மோர், அப்பளம் உட்படப் பொடி வியாபாரமும் அக் கடையில் நடைபெறுவதுண்டு. ஒரு மூலையில் வெளிறிப்போன கடதாசி மாலைகள் தொங்கிக்கொண்டிருந்தன. கடைக்குச் சொந்தமானவர் அன்று வாட்ட சாட்டமாக இருந்துகொண்டு வர்ணக் கடதாசிகளை வெட்டிக் குவித்தார். 'என்ன கிறிஸ்மஸ் விழாவுக்குக் கடையைச்சோடிக்கப் போகின்றீரா?' என்று கேட்டேன். அதற்கு அவர் சிரித்துக்கொண்டே கூறினார்: 'தேர்தல் திருவிழா ஆரம்பமாகப் போகின்றது. அதற்காகத்தான் நிறக் கடதாசிகளை நேரகாலத்துடன் வாங்கியிருக்கிறேன்'.

'அட்டா கொடி கட்டிப் பறக்கவிடப் போகின்றீரோ' என்று கேட்டதற்கு அவர் தலையை அசைத்துவிட்டுச் சொன்னார்: 'இல்லை ஐயா, மாலைகள் செய்து கண்ணாடி அலமாரியில் வைக்கப்போகின்றேன். தேர்தல் காலத்தில் மாலைகளுக்குக் கிராக்கிஅதிகம். ஏதோ நாலு காசு சம்பாதிக்கிற வழியைப் பார்க்கவேண்டும் அல்லவா?

❀

### காமராஜர் போதனை

இதனைக் கேட்டபோது சென்னை முதலமைச்சர் காமராஜர் மாலை போடுவதைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. "பூமாலை சூட்டாதீர் கழுத்துத் தேய்ந்துவிட்டது" என அவர் கூறியிருப்பதைக் கேட்டு அரசியல் வாதிகள் ஏமாற்றமடையக் கூடும். தேர்தல் கூட்டங்களின்போது அபேட்சகர்களுக்குப் பெரு மதிப்பு அளிப்பன இந்த மாலைகள் தாம். மலர் மாலைகளை அவர்களே பணம் கொடுத்து வாங்கி ஊர்வலத்தின்போது தமக்குச் சூட்டுவதற்கான ஏற்பாடுகளைத் திட்டப்படி செய்துவிடுவார்கள். கழுத்து நிறைய மாலைகளைப் போட்டுக்கொண்டு அபேட்சகர்கள் கைகூப்பிச் செல்லுங் காட்சி மிக அற்புதமானது. இவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைப்பதை அரசியல் வாதிகள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். அதிலும் பாரமான பெரிய மாலைகளைப் போடுவதில் பெருமை அடித்துக்கொள்ளுபவர்கள் எங்கள் நாட்டில் பல்கிப் பெருகிவரும் போது, 'மாலை சூட்டாதீர் கழுத்துத் தேய்ந்துவிட்டது' எனச் சென்னை முதலமைச்சர் கூறியிருப்பதை இங்கு யார் காதிற் போட்டுக்கொள்ளப் போகிறார்கள். அத்துடன் மாலை செய்பவர்கள் திரு. காமராஜரின் உபதேசத்தைக் கேட்டுச் சீறிச் சினக்கின்றனர். 'போயும் போயும் இந்த மனுஷன் எங்கள் பிழைப்பிலே மண்ணைப் போடவேண்டுமா?' என அவர்கள் பிரலாபிக்கின்றனர்.

❀

### பூவில்லாமல் மாலை

பூமாலைபற்றி எழுதும்போது, பூவில்லாமல் மாலை தொடுக்கும் சாமர்த்தியத்தை நினைவூட்டாதிருக்க முடியவில்லை. அதுவும் பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் காதுகளுக்கு எட்டுகின்ற கதைகளைக் கேட்கும்போது, பூவில்லாமல் மாலை தொடுப்பவர்கள் எங்கள் நாட்டிலும் இருக்கின்றார்கள் என்பதை நம்பாதிருப்பது எப்படி? யாழ்ப்பாணத் தொகுதிக்குத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் போட்டியிடப்போகின்றார் என ஒருவர் அடித்துப் பேசும்போது அவர் பூவில்லாமல் அரசியல் முடிச்சுப் போடுகின்றார் என்று சொல்லாமல் வேறு என்னென்று கூறுவது?

❀

### தி. மு. க. அன்னாசி

மரம் வளர்ந்து பூத்துப் பிஞ்சு பிடித்துக் கனி தருவதை நாம் எல்லோரும் அறிவோம். தேர்தல்களை எடுத்துக்கொண்டாலும் பூவும், பிஞ்சும், பழமும் அவற்றில் உண்டு. இந்த வகையில் தேர்தல் சின்னங்களைச் சேர்த்துக்கொள்வதையும் எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள் என எண்ணுகின்றேன்.

அகில இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் புதிய பொதுத்தேர்தலிற் போட்டியிடுவதெனத் தீர்மானித்து அதன் சின்னமாக அன்னாசிப் பழத்தைத் தெரிந்தெடுத்திருக்கின்றது. படத்திலே பார்க்கும் போது அன்னாசிப்பழம் மிக அழகாகவிருக்கும். ஆனால் நிஜப்பழத்தைத் தொட்டுப் பார்த்தால் அது குத்தும்! அதற்காக அன்னாசியை எவரும் அப்பாலே தூக்கி எறிந்துவிடுவதில்லை. அதன் தோலை அகற்றிப் பழத்தை அறுத்துத் தட்டிலே வைத்தால் நாவில் நீர் ஊறும். இந்த இனிமையான காரியத்தையே அகில இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகமும் செய்யத் துணிந்திருக்கின்றதென்பது பதுமனின் எண்ணம். மா, பலா, வாழை ஆகிய முக்கனியின் சுவையை நன்கறிந்த தமிழினம், இனி அன்னாசிப்பழத்துக்கும் இலக்கியத்தில் ஒரு முக்கிய இடம்கொடுத்து அதன் அருமை பெருமைகளை நாட்டிலும், வீட்டிலும், ஏட்டிலும் எடுத்தியம்புமா?

❀

### முற்றத்து மல்லிகை

யாழ்ப்பாணத்தில் உருவாகவிருக்கும் புதிய சந்தை மக்களின் சிந்தனையைத் தூண்டி வருகின்றது. இப்புதிய 'மாதிரிச் சந்தை' சென்னை மாநகரத்தில் உள்ள 'மூர் மார்க்கட்' சாயலில் அமைக்கப்படுமென 'ஈழநாடு' 5-12-59 இதழிற் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனைப் பிரபல ஆங்கில நாளிதழாகிய 'இந்து' சென்ற ஞாயிற்றுக்கிழமை (20-12-59) இதழில் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளது.

சென்னை 'மூர் மார்க்கட்'டை யாழ்ப்பாணம் பின்பற்றப்போகின்றது என்பதைக் கேள்விப்பட்ட உடனேயே சென்னைக்கும் பெருமிதம். 'முற்றத்து மல்லிகை மணக்காது' எனச் சொல்லுவார்கள். அதேபோன்று 'மூர் மார்க்கட்'டும் சென்னைக்கு முற்றத்து மல்லிகையாக இருக்கலாம்.

சென்னை 'இந்து'வில் எழுதிய அன்பர் அச்செய்தியை 'இந்த விசித்திர உலகம்' என்ற பகுதியிற் சேர்த்துள்ளார். இதிலிருந்து எது விசித்திரம் என்ற கேள்வி பிறக்கின்றது. சென்னை "மூர் மார்க்கட்டா" அல்லது யாழ்ப்பாணச் சந்தையா? எப்படியிருப்பினும் 'மூர் மார்க்கட்' முற்றத்து மல்லிகைபோல் மணங் கமழவேண்டும். துர்நாற்றம் வீசவே கூடாது. அப்படியானல் யாழ்ப்பாணத்தின் மாதிரிச் சந்தையின் கதையென்ன? ஆம், அதுவும் அவ்விதமே!


வெளிவந்துவிட்டது!

**தினக்குறிப்பு 1960**

மாணவர்க்கும், பொதுமக்களுக்கும் உபயோகமான இத்தினக்குறிப்பின் விலை **75** சதமே. தபாற் செலவு **35** சதம். வி. பி. பி. இல்லை.

கிடைக்குமிடங்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை, பெரியகடை, யாழ்ப்பாணம்.

கலாநிலையப் பதிப்பகம், சிவன் கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம்.

15. அபேதவாதி




வேலாயுதம் பார்த்துக் கொண்டேதான் நின்ருன். சரிந்து கொண்டிருக்கும் சூரியனின் அம்புக் கிரணங்கள் அவன் கன்னத்தையும் தாடையையும் துளைத்துக்கொண்டிருந்தன. அவனுடைய நிழல் அடம்பன் கொடிகளுக்கு மேலாக நீளமாக விழுந்து கொண்டிருந்தது.

முன்னல் அடிக்கும் கரைக் காற்று இப்போது சற்றுப் பலமாகவே அவன் தேகத்தை ஸ்பரிசித்தது. மாலை வெய்யில் உடம்புக்கு நல்லதென்கிருர்கள். ஆனல் வேலாயுதத்தைப் பொறுத்தவரையிலும், காலை வெய்யில் அவனுக்குச் சோர்வையும் களைப்பையும் கொடுத்திருக்கலாம். ஆனல் எந்த வெய்யிலுமே அவனுக்குத் தலையிடியையோ, காய்ச்சலையோ கொடுத்ததில்லை. ஆனல் வெளியே கொளுத்தும் வெய்யிலுக்கு மசியாத அவன் வலுவான உடலுக்குள்ளேயிருந்த நெர்ய்தான மனம், அவன் காணும் காட்சிகளையும் கேட்கும் கதைகளையும் எண்ணி எண்ணிச் சதாபுழுங்கிக்கொண்டேயிருக்கும். இப்போதும் புழுங்கிக் கொண்டேதான் இருந்தது.

தர்மலிங்கம்அவன் கண்களிலிருந்து மறைந்துவிட்டார். இப்போதுஅந்த இரண்டு குடிகாரர்களும் அவன் பார்வையிலிருந்து மறைந்துவிட்டார்கள்.

வேலாயுதம் பெருமூச்சு விட்டுக்கொண்டே திரும்பினுன். குடிசையை எட்டிப் பார்க்க அவனுக்கு ஏனே மனம் வரவில்லை. வள்ளத்தண்டைதான் வந்தான்.

வள்ளத்துள்ளே தண்ணீர் கிடந்தது. வள்ளம் பழையது, ஓட்டை விழுந்ததுதான், ஆனலும் வேலாயுதத்தின் கைவண்ணத்தினுல் அது இன்னமும் உழைக்கக் கூடியதாக இருந்தது. முன் அணியத்திலே, மரத்திலே 'கண்மாறு' என்ற கிளையும் மரமும் சேரும் இடத்திலே ஏற்கனவே நன்ருகப் பொத்துக்கொண்டிருந்தது. வேலாயுதம் அதற்கு ஒரு பலகையை உள்ளங்கை அகலத்துக்குச் சீவி, ஓட்டைவிழுந்த இடத்திற் பொருத்தி வைத்திருந்தான். பொருத்து சந்துகளிலே தும்பை வைத்துக் 'கலப்பத்து' அடித்து உள்ளும் புறமும் குங்கிலியத்தையும் சுண்ணும்பையும் சேர்த்துக் கொதிக்க வைத்துப் பூசியிருந்தான். சாதாரணமாகப் பார்த்தால் வள்ளத்தில் ஓட்டை ஒன்றிருந்து அடைத்ததே தெரியாது. அத்தனை லாகவமாக வேலாயுதம் அதனை அடைத்திருந்தான்.

வள்ளத்தின் நடுப் பகுதியிலும், நீர்ப்பூச்சிகள் அரித்ததால் இரண்டு மூன்று இடங்களில் சிறு சிறு ஓட்டைகள் உண்டாகியிருந்தன. அவைகளுக்கும் வேலாயுதம் துப்புவைத்து ஒரு சொட்டுத் தண்ணீரும் உட்புகாதவாறு அடைத்திருந்தான்.

அப்படியிருந்தும், கண்காணுத ஊற்றுக் கண்களிலிருந்து சுவறும் மெல்லிய ஊற்றுக்களாக வள்ளத்துட் தண்ணீர் பொசியவே செய்தது. அத்தோடு வள்ளத்தில் ஏறுகிறவர்களின் காலோடு போகும் தண்ணீரும் சேர்ந்தால் எப்படியாவது ஒரு நாளைக்கு இருபது இருபத்தைந்து சிரட்டை தண்ணீர் வந்தே விடுகிறது.

வள்ளத்தண்டை வந்தவேலாயுதம், கட்டியிருந்த வள்ளத்தை அவிழ்த்துப் பின்னணியத்தைத் தன் பலங்கொண்டமட்டும் இழுத்துக் கரையிலே ஏற்றி வைத்தான். ஏறத்தாழத் தோணியின் அரைவாசி கரையிலும் அரைவாசி தண்ணீரிலுமாகத் தோணி ஆற்றுப்பக்கம் செங்குத்தாய்த் சரிந்து இருந்தது. அப்படி இழுத்துச் சரித்து வைத்ததினுல், வள்ளத்துட் கிடந்த தண்ணீர் முழுவதும் முன்னணியத்திற்குச் சென்று விட்டது.

வேலாயுதம் இப்போது முன்னணியத்துக்குச் சென்று துடுப்பு வலிப்போர் இருக்கும் பலகையில் இருந்துகொண்டு வள்ளத்துட் கிடந்த தண்ணீரைச் சிரட்டையால் இறைக்கத் தொடங்கினுன்.

ஆமாம்; அவனது வேலை, மணித்தியாலங்களை எண்ணிக் கொண்டு நேரத்தைக் கடத்துவதல்ல. 'அழுதழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்' என்பதாக, நேரமும் காலமும் இன்றி வருவோர் போவோரை இக்கரைக்கும் அக்கரைக்கும் கொண்டு போய்ச் சேர்ப்பதோடு அவன் வேலை முடிந்தும் விடாது. அதற்கும்மேலாக அந்த வள்ளத்தையும் அவன் பராமரித்தாக வேண்டும். எல்லாமே அவன் கையால்...... அதுவும் அவசரக்காரர்கள் எவரும் வராத இடைநேரத்தில்.

நீரிறைத்தாகி விட்டது. இறைத்த பின்னர் வேலாயுதம் துடுப்புக்களை மாட்டியிருக்கும் கயிற்று வளையங்களைப் பார்த்தான். எறும் பூர்ந்தாலே கல்லுத் தேய்ந்து விடுமே. காட்டுக் கம்புகளை மனிதன் அந்த வளையத்தில் மாட்டி அவைகளைத் தன் பலங்கொண்ட மட்டும் நாள் முழுதாக முன்னும் பின்னும் இழுத்தால் தும்புக் கயிறு என்ன தேயாமலா இருக்கும்? வேலாயுதம் வளையத்தை இழுத்துப் பார்த்தபோது, அது படீர் என்று அறுந்து, அவனே வள்ளத்துள் விழுந்துவிட்டான்.

விழுந்த வேலாயுதத்திற்குச் சிரிப்பு வந்தது. தான் விழுந்ததைத் தானே ரசித்தபடியே முன்னணியத்து மூலையிலே இருந்த முடிக்கயிற்றை எடுத்து முறுக்கத் தொடங்கினுன். ஒரு தலைப்பைக் காற்பெருவிரலிலே கட்டிக் கொண்டு, கயிறு கட்டிய காலைத் தோணியின் மேற் தளத்திலே தூக்கி வைத்தபடி கயிற்றின் மறு தலைப்பைத் தன் முகத்துக்கெதிரே பிடித்தபடி தன் இரு உள்ளங்கைகளாலும் கயிற்றை உருட்டி உருட்டி முறுக்கினுன். நன்ருக முறுக்கு ஏறியதும், கைகளிற் பிடித்திருந்த தலைப்பைத் தன் இடது முன்னங்கையிற் காப்புப் போல வளைத்து, அந்த வளையத்தில் கயிறு முழுவதையும் இழைத்துப் பின்னினுன். ஐந்து இழைகளில், இரண்டு விரற்பருமனில் வளையம் தயாராகியதும் அந்த வளையத்தைத் தோணியின் மேற் பலகையிற் பொருந்த வைத்துத் தொளைகளில் இழைக் கயிற்றைக் கோத்துக் கட்டினுன். துடுப்புத் தண்டையும் அந்த வளையத்துள்ளே மாட்டி வைத்தபோது கரையிலே சைக்கிள் வந்து நிற்பதை வேலாயுதம் கண்டான்.

அந்தச் சைக்கிள்காரப் பையன் மாதம் ஒரு தடவை இந்த வழியாற் தவருது வருபவனுனலும், அவன் இன்றைக்கு வருவான் என்று வேலாயுதம் எதிர்பார்க்கவில்லை. ஏனென்ருல் அவன் மாதம் ஒரு தடவை வருவது மட்டுந்தான் வேலாயுதத்திற்குத் தெரியுமே தவிர, அவன் எத்தனையாந்திகதி வருவான் என்பது தெரியவே தெரியாது. இன்னமும் சொல்லப் போனல் வேலாயுதத்திற்கு அந்தப் பையனைப்பற்றி, அவன் வாழ்க்கையைப்பற்றி, அவன் உத்தியோகத்தைப்பற்றி அக்கறையிருந்தால் இருக்கலாம். ஆனல் திகதியைப்பற்றி அவன் தெரிந்து என்ன ஆக வேண்டும்? எனவே அவன் திடுகூருக வந்து விட்டதாக எண்ணிய வேலாயுதம், "என்ன தம்பி இன்றைக்கு வந்திற்றீங்களே" என்ருன்.

பையன் முகஞ் சுளித்தான். அவன் வீட்டிலே சண்டை போட்டுக் கொண்டு வந்தானே என்னவோ? அப்படியென்ருலும் யாரோடு? அவன் தான் இன்னமும் மணம் முடியாதவனுயிற்றே. அப்படியானுற் தாயாரோடா?

அந்தப் பையன் என்னவோ நல்லவன் தான். சிலவேளைகளிற் குத்தலாகவும் குறும்புத்தனமாகவும் பேசுவான். ஆனுற் சிலவேளைகளில் அவனுக்கு ஒரே எரிச்சலாகவும் கோபமாகவும் இருக்கும். தனது மேலுத்தியோகத்தரைத் திட்டுவான் அவ்வேளைகளில். ஆனுலும் அப்போதும் தான் உத்தியோகத்தன் என்ற நினைவு அவன் பேச்சில் மேலோடியிருக்கும். சின்ன உத்தியோகம் என்ருல் அது உத்தியோகமில்லையா? கோழி வளர்த்தாலும் கொறணமேந்து வேலை தானே!

பையன் பேசாமல் உர்ரென்று நிற்பதைக் கண்ட வேலாயுதம், அவனைச் சாந்தப் படுத்த எண்ணி "தம்பி, வாறவழியில் தயிர்க்காரனைக் காணவில்லையா?" என்று கேட்டான்.

"நான் ஒருவரையும் காணவில்லை. எனக்கு வேலை கிடக்கிறது. கெதியாகப் போக வேணும். வா போவோம்" என்ருன் எகத்தாளமாக.

"போகத்தானே தம்பி வள்ளம் இருக்குது. தயிர்க்காரனும் வருவான் என்று பார்த்தேன். காய்கறிகொண்டுபோன பெண்டுகளும் வரவேணும். உனக்கு அவசரமானு ஏறு தம்பி" என்ருன் வேலாயுதம்.

"சைக்கிளைத் தூக்கி வை" என்ருன் பையன்.

"என்ன தம்பி, செனப்படுறீங்களே" என்றுகொண்டே வேலாயுதம் சைக்கிள் வண்டியைத் தூக்கி வள்ளத்துள் வைத்தான். அப்படி வைக்கையில் சைக்கிளின் 'செயின் கவர்' பலமாக வள்ளத்தில் அடிபட்டு விட்டது! பையனுக்கு வந்த ஆத்திரத்தில் அவனுற் பேசவே முடியவில்லைப் போல இருக்கிறது. வேலாயுதத்தை முறைத்துப் பார்த்தான்!

சைக்கிளை அப்படி வள்ளத்தில் மோதவிட்டதுவேலாயுதத்திற்கே வருத்தமாகத்தான் இருந்தது. அந்த வண்டியை அப் பையன் எவ்வளவு மினுக்காகவும் அழகாகவும் வைத்திருக்கிருன். தர்மலிங்கம் வாத்தியாருந்தான் சைக்கிள் வைத்திருக்கிருரே. எண்ணையையுந் தண்ணீரையும் என்றைக்குமே அது கண்டிராது. கறள்பிடித்து எவ்வளவு அசிங்கமாக இருக்கும் அது! ஆனல் இந்தப் பையனுடையது அப்படியா? தூரத்தில் வரும்போதே, புத்தம்புதிய அதன் 'மட்காட்டுகளில்' சூரியஒளி பிரதிபலித்து, கண்ணுடியில் விழுந்த ஒளியைப் போல நெடுந்தூரத்துக்குப் பளிச்சிட்டு மின்னும்! கைபிடியிலே முகம் பார்க்க ஒரு கண்ணுடி, இரண்டு மணிகள், குறுக்குக் கம்பியிலே ஒரு குழாய் மூடி, அந்த மூடியிலே ஒரு அழகான பெண். ஆசனத்திற்கு, முயற் தோலாலான மெல்லிய உறை தைத்துப் போடப்பட்டிருந்தது. தொட்டுப்பார்த்தால் எவ்வளவு மிருதுவாக இருக்கிறது. அந்தச் சைக்கிள் ஒரு மணவறையைப்போலவும், அதில் கம்பீரமாகச் சவாரிசெய்துவரும் அந்தப் பையன் மாப்பிள்ளை போலவும்... அடடா! ஆறு மாதங்களாக ஒரு அப்பழுக்கு இல்லாமற்தான் இருந்தது அந்த வண்டி. இன்றைக்கு அதிலே கீறல் விழுந்தது வேலாயுதத்திற்கே பொறுக்க முடியவில்லை. அத்தோடு பையன், வேண்டுமென்றே தான் அவன் சைக்கிளை வள்ளத்தில் மோதவிட்டதாக நினைத்துக்கொள்வானே என்றெண்ணுகையில் வேலாயுதத்திற்கு ஒன்றுமே ஓடவில்லை!

(தொடரும்)

## சிறுகதை எழுத்தாளர்களுக்கு

பண்பாடு, ஒழுக்கம், வாழ்க்கைநிலை ஆகியவற்றை செம்மையாக்கும் நோக்கத்துடன் எழுதப்பெறும் சிறுகதைகளை "ஈழநாடு" வரவேற்கின்றது. கதைகள் 'பூல்ஸ்காப்' தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் தாளில் ஒரு பக்கத்தில் மையினுல் எழுதப்பெற்றுமிருக்க வேண்டும்.

**வாழ்க்கைச் சம்பவங்கள்**

நாளாந்த நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்ட வாழ்க்கைச் சம்பவங்களையும் எழுத்தாளர்கள் எழுதி அனுப்பலாம். இச்சம்பவங்கள் இப்பத்திரிகையில் ஒரு பத்திக்கு (கலம்) மேல் அமையக்கூடாது.





உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரையே வாங்குங்கள்.

'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

தமிழிற் கட்டுரை வளர்ச்சி: 2

# கருத்தாழமும் இலக்கிய வளமும்

— வே. க. ந. —

தமிழில் கட்டுரை (Essay) என்ற இலக்கிய உருவத்துக்கும் சாதாரணப் பத்திரிகைக் கட்டுரைக்கும் (Article) பொருள் ஒன்ருக இருந்தாலும், கட்டுரையைப் புனையும் முறையில், கட்டுரை பெறும் உருவத்திலேயே அதன் அந்தஸ்து நிர்ணயிக்கப்படுகிறது. இலக்கியம் பற்றிய ஒரு கட்டுரையில், இலக்கியம் பற்றிய சில தகவல்களை மட்டும் எமக்கு ஆசிரியர் ஒழுங்கு முறை தவருது தருவாராயின் அதை ஒரு சாதாரண தகவல் கட்டுரையாகக் கொள்ளலாம். இலக்கியம் தரும் இன்பம்பற்றி ஆசிரியனுக்கேற்பட்ட உள்ள நெகிழ்ச்சிகளைக் கலை அழகுடன் கூறி, இலக்கிய உருவமாகக் கட்டுரை அமையுமானல் அதை இலக்கியக் கட்டுரை என்று சொல்லலாம். இந்தப் பாகுபாட்டை உணராது, தமிழில் கட்டுரைகள் எழுதுவதில் ஈடுபட்டோரில் பெரும்பாலானேர் வெற்றியடைந்ததாகக் கூறுவது முறையாகாது. தமிழில் இலக்கிய அறிமுகக் கட்டுரைகளும், இலக்கிய 'ஆராய்ச்சி'க் கட்டுரைகளும் தகவல் கட்டுரைகளும் பெருகியுள்ளதைப் பார்த்துவிட்டு, இலக்கியக் கட்டுரைகள் (Essays) வளர்ந்துவிட்டன என்று கூறமுடியாதல்லவா?

## இலக்கியப் பின்னணி

கட்டுரை என்பதுபற்றி நான் குறிப்பிட்ட பாகுபாட்டைக் கவனியாதவிடத்தும், சிறுகதைகள் நாவல்கள் பெருகிய அளவுக்குக் கட்டுரைகள் பெருகவில்லை என "மகரம்" அதே கட்டுரையில் வேருேர் இடத்தில் குறிப்பிடுகிருர். இதற்கு அவர் குறிப்பிடும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதுபோல் தெரிந்தாலும், உண்மையில் அர்த்தமற்றது என்றே எனக்குப் படுகிறது. "பொழுது போக்கை விரும்பும் பெண்மணிகளுக்கும், ஓரளவு பாமர வாசகர்களுக்கும் ரஞ்சகமானது நாவல் என்ற பெயரில் வரும் நெடுங் கதைகள் என்ருல், சிறுகதைகள் சற்றுத் தரம் உயர்வான வாசகர்களுக்காக எழுதப்பெறுவது. கட்டுரைகளோ அற்கும் மேல்படியில் உள்ள வாசகர்களுக்கும், இலக்கிய சிருஷ்டியில் ஈடுபட்ட எழுத்தாளர்களுக்கும் எழுதப் பெறுவன; நாவலையும் சிறுகதைகளையும் புரிந்துகொள்ள, ரசிக்க அப்படி யொன்றும் பிரமாதமான தகுதி தேவையில்லை. ஆனல், கட்டுரைகளை உள்ளபடி புரிந்துகொள்ளவும் அவைகளின் ஒவ்வொரு எழுத்துக்கு அடியிலும் மறைந்துகொண்டு கண் சிமிட்டும் கருத்துக்களின் ஆழத்தைக் கண்டறியவும் நல்ல இலக்கியத் திறமையும் இலக்கியப் பின்னணியும் தேவை. இதனல்தான் கட்டுரை எழுதுகிறவர்களும் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிருர்கள். அதை விரும்பிப் படிக்கிறவர்களும் குறைவாக இருக்கிருர்கள்."

## இரு குறைபாடுகள்

"மகரம்" அவர்களின் கருத்தில் இரு குறைபாடுகள் உள. கட்டுரைகள் எல்லாமே ஒரே வகையைச் சேர்ந்தவை, எல்லாமே இலக்கியத் தன்மை வாய்ந்தவை என்ற ஓர் எண்ணம் தவருனது. தத்துவக் கட்டுரைகளை—அல்லது விஞ்ஞானக் கட்டுரைகளை—சாதாரண வாசகன் விளங்கிக் கொள்ள மாட்டான்தான். அதனல், அவனுக்கு இலக்கியத்தை ரஸிக்க முடியாது என்ருகிவிடுகிறதா? சினிமாப் பத்திரிகைகளிலும் கட்டுரைகள் தானே கூடுதலாக வருகின்றன. இவற்றை ஒரு வரி தவருது வாசிக்கும் வாசகன் உயர்ந்த இலக்கிய அந்தஸ்துப் பெற்று விடுகிருனு! இதைவிடத் தவறுடையது, பொழுது போக்கை விரும்பும் வாசகர்கள் நாவல்கள், சிறுகதைகளை வாசித்து, ரஸித்து விடுகிருர்கள் எனக் கூறுவது. தரமான இலக்கியம், தரமற்ற பொழுது போக்குக் கதைகள் என்ற பாகுபாடு கதைகளுக்கு உண்டு; கட்டுரைகளுக்கும் உண்டு. (நகைச்சுவைக் கட்டுரைகளில் பெரும்பாலானவை பொழுதைப் போக்க உதவுபவையென்றுதான் நான் கருதுவேன்!) தரமான சிறுகதையைச் சாதாரண வாசகன் படிக்கலாம். ஆனல், ரஸிக்க முடியுமா? பாமரவாசகன் இக்கதைகளில் சம்பவங்களை அறிவதிலேயே முக்கியமாக ஈடுபடுவானேயன்றி, இதர அழகுகள் அவனுக்குப் புலப்படவே மாட்டா என்று நாம் துணிந்து கூறிவிடலாம். ஒரு பொதுவான உண்மையைத் தனியே கட்டுரைக்குச் சிறப்பாகச் சொல்லிவிட்டார் திரு. "மகரம்" என்பது எனது கருத்து. அதாவது, பொழுது போக்கு 'இலக்கியங்'களையே விரும்பி வாசிக்கும் வாசகர் கூட்டம், கருத்தாழமான விஷயங்களைத் தேடிப் படிக்கும் கூட்டத்திலும் பன்மடங்கு அதிகரித்து வருகிறது. இது மிகவும் உண்மை. நல்ல சிறு கதைகள், தரமான நாவல்கள், நல்ல இலக்கியக் கட்டுரைகள் ஆகியவற்றை விரும்பிப் படிக்கும் தொகை தமிழில் குறைவாகவே உள்ளது. இதனல்தான், கட்டுரைகள் வளரவில்லையென்று முடிவு கட்டிவிட முடியுமா?

## இங்கிலாந்திலும் இங்கும்

இங்கிலாந்தில், கட்டுரை முதலிய இலக்கிய உருவங்கள் வளர்ச்சி பெறுவதற்குத் துணை செய்தவை, அந்நாட்டு இலக்கிய வளர்ச்சியில் அரும்பணி புரிந்து வந்துள்ள Periodicals எனும் சஞ்சிகைகளே. இலக்கிய விஷயங்களையே தாங்கி, இலக்கிய வளர்ச்சியிலேயே அதிக கவனம் செலுத்தி வந்த சஞ்சிகைகள் காலத்துக்குக் காலம் பெருகி வந்திருக்கின்றன. Spectator என்ற சஞ்சிகையில் அடிசன், ஸ்டீல் ஆகியோரும், 'The London Magazine' என்பதில் சார்ல்ஸ் லாம்ப் என்பவரும் தம் அரிய படைப்புக்களை வெளியிட்டுவந்தனர். தமிழ் நாட்டுப் பத்திரிகைகள்—பத்திரிகைகளாக இயங்கி வருகின்றனவேயன்றி — இலக்கிய வளர்ச்சிக் குதவும் சஞ்சிகைகளாக இருந்து வரவில்லை. கட்டுரைகளை — இலக்கியக்கட்டுரைகளை—எழுதும் ஆற்றல் உள்ள எத்தனையோ பேர், அவற்றை எழுதும் சூழ்நிலை இல்லாததாலும், எழுதுவதற்கு வேண்டிய ஆர்வம் கிடைக்காததாலும், தம் ஆற்றலைப் போதிய அளவு விருத்தி செய்யாது விடுகின்றனர்.

தமிழ் உரைநடையானது பிரசாரத்துக்கு—முதலில் அரசியல் விழிப்பை ஏற்படுத்தவும், பின்னர் மொழி, சமயப் பற்றை வளர்க்கவும், இப்பொழுது சமூகக் குறைபாடுகளைக் களைந்தெறியவும் — பயன்பட்டு வந்திருப்பதால், இலக்கிய உருவங்களைக்கட்டுரை என்ற சாதனம் மூலமாக, போதிய அளவு உருவாக்கித்தரத் தவறிவிட்டது எனலாம். எனினும், இத்துறையில் முன்னேடிகளாக விளங்கியவர்களை நாம் எப்படி மறக்கலாம்? இன்றும், சில விற்பன்னர்கள் இருப்பதையும் நாம் மறுக்க முடியாது. இருந்தாலும், தமிழில் மற்ற எல்லாத் துறைகளும் வளர்ந்துள்ள அளவுக்கு (நாவலுந்தான்!) கட்டுரை வளர்ந்துவிட்டது என்று சொல்ல முடியாதுதான். இத்துறையில், இனியாவது சிரத்தையுடன் உழைத்து, வெற்றிபெறத் தமிழ் அறிஞர்கள் முன்வருவார்களா?

## பிராங் மொரேஸ் எழுதிய இரு நூல்கள்

இந்திய எழுத்தாளரும் நூலாசிரியருமான திரு. பிராங் மொரேஸ் எழுதிய இரு நூல்கள் 1960 ஜனவரியில் வெளியிடப்படும்.

ஜனவரி மாதம் 25 ந் திகதி "திபேத்தில் நடந்த புரட்சி" என்னும் நூலும், மார்ச் மாதத்தில் "இன்றைய இந்தியா" என்னும் நூலும் வெளியிடப்படும்.

திரு. மொரேஸ் எழுதிய "ஜவஹர்லால் நேரு", "மாசோவின் சீனம் பற்றிக் குறிப்புக்கள்" ஏற்கனவே அமெரிக்காவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழரின் எதிர்காலப் பொருளாதாரம்: 4

# பிரதேச பொருளாதாரம்

## விருத்தியுற வழிகள்

— எஸ். எஸ். பிள்ளை —

கடற்கரைப் பிரதேசங்களிலும், தரையின் கீழ் நீர்மட்டம் சமீபமாக உள்ள சற்று மணற்பாங்கான நிலங்களிலும் தென்னை நன்கு வளரும். 1000 மைல் நீளமுள்ள இலங்கையின் கடற்கரையோரங்களில் மூன்றிலொருபங்கு தமிழர்பிரதேசத்திலே உள்ளது. இப்பகுதியில் தென்னை உற்பத்தியாவதற்கு வேண்டிய கடினமற்ற மண் கண்டம் உள்ள பிரதேசம் 3 இலட்சம் ஏக்கருக்கு மேலாகத்தான் இருக்கும். இவை யாவையும் தென்னை உற்பத்திக்குப் பிரயோசனமாக்கினல், மேலே குறிப்பிட்ட நெல் உற்பத்திக்குத் தகுதியற்ற சுமார் 2 இலட்சம் ஏக்கரில் பெரும்பகுதி தென்னை உற்பத்திக்கு உதவும். இதனல் மகாவலி கங்கையைத் திசைமாறி ஓடச் செய்யவும், மற்றும் நீர்ப்பாசன வசதிகள் அமைக்கும் பெரும்செலவுகள் மிச்சமாகும். ஆகையால் வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு இப்பணத்தைச் செலவுசெய்யலாம். நெல் உற்பத்திக்கு அனேகமாக விதைப்புக்காலங்களிலும், அறுவடை காலங்களிலும் தற்காலிகமாகத் தேவைப்படும் தொழிலாளர்களைத் தென்னந்தோட்டங்களில் நிரந்தர தொழிலாளர்களாக அமர்த்தலாம். முக்கியமாக மழைகுறைந்த வரண்ட பிரதேசத்தில் காடுகளை அழிப்பதால் மேலும் மழைகுறைந்து, நாடு பாலைவனமாக ஆகிவிடக்கூடிய அபாயத்தைத் தென்னம் சோலைகள் தடுக்கும்.

### தேவை அதிகரிப்பு

இலங்கையில் துரிதமான சனப்பெருக்கால் உள்நாட்டுத் தெங்குப் பொருள்களின் தேவை அதிகரிக்கிறது. 1957 ஆம் ஆண்டிலும்பார்க்க 1959 ஆம் ஆண்டில் 2,00,00,000 அதிக ரூபாய் பெறுமதியுள்ள தெங்குப் பொருள் உள்நாட்டில் செலவாகி இருக்கிறது. இதேபோல் ஆசிய தெங்கு உற்பத்தி நாடுகளிலும் உள்ளூர்த் தேவைகள் அதிகரிப்பதால், ஏற்றுமதியாகும் கொப்பரு குறைந்து வருகிறது. பல நாடுகளினதும் கொப்பரு உற்பத்தி 1957 இல் 21,65,000 தொன்னிலிருந்து 1958 இல் 18,20,000 தொன்னுகக் குறைந்து, நடப்பு வருடத்திய உற்பத்தி 17,30,000 தொன்தான் இருக்குமென மதிப்பிடப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க நாட்டின் பாதுகாப்புப் பகுதியிடம் 118,000 தொன் தேங்காய் எண்ணை கையிருப்பு இருக்கிறது. அமெரிக்கா இம் முழுத்தொகையையும், உலகில் நிலவும் விலை அதிக தூரம் பாதிக்கப்படாத வகையில், விற்பனை செய்யத் தீர்மானித்திருக்கிறது. இச்செய்தி வெளிவந்ததும் உலகச் சந்தையில் தேங்காய் எண்ணையின் விலையில் மூன்றில் ஒரு பகுதி வீழ்ச்சியுற்றது. விற்பனை செய்வதில் தாமதம் ஏற்படுவதால் விலைகள் திரும்பவும் அதிகரிக்கின்றன. அமெரிக்கா கைவசமுள்ள முழுத் தேங்காய் எண்ணையையும், விற்பனை செய்ய 2 வருடங்கள் ஆகுமென மதிப்பிடப்படுகிறது. உணவு விவசாய உயர்தர அதிகாரி திரு. டன்கன் ரிட்லர் சர்வதேச எண்ணை உற்பத்தியாளர் சம்மேளனத்தில், தெங்குப் பொருளின் நீண்ட கால நிலைமையைப் பற்றிப் பேசியபோது மலேயாவில் தெங்குப் பொருள் உற்பத்தி மோசமான கட்டத்தை அடைந்து விட்டதென்றும், கடாங்—கடாங் நோயினல் பிலிப்பையின் தீவுகளில் அதிலும் மோசமான நிலைமையை 10 வருடங்களுள் எதிர் பார்ப்பதாயும் குறிப்பிட்டுள்ளார். தெங்குப் பொருளின் எதிர் கால நிலைமை இதுவாயின், விவசாயத் துறையில் அதிக வருவாய் கிடைப்பதற்கும், உலகில் அதிக தெங்குப் பொருள் ஏற்றுமதி நாடாக விளங்குவதற்கும் தமிழர் பிரதேசத்திற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. இதனைப் பயன் படுத்துவார்களா?

### மூலப் பொருள்

மூல்ப்பொருள்களை உற்பத்தி செய்ய விவசாயம் வசதி அளிக்கிறது. தெங்குப் பொருள்களில் அதன் எண்ணைச் சத்துத்தான் அனேகமாக உள்நாட்டு உபயோகத்துக்கும் ஏற்றுமதிக்கும் தேவைப்படுகிறது. நைகிரியா நாட்டு வருவாய் முக்கியமாகப் பருத்தி, நிலக்கடலை ஆகிய இரு விவ

[12ஆம் பக்கம் பார்க்க]

## ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழ நாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம்.

**போட்டோவின் அளவு, 6" X 4"**

**முடிவு திகதி 31-12-59**

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப்படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

# நமது நூல் நிலையம்

**கந்தபுராண கலாச்சாரம்:** **ஆசிரியர்**: பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. **கிடைக்கும் இடம்**: சண்முகநாதன் புத்தக சாலை, 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். **விலை**: ரூ. 1-00.

இதுவரை யாழ்ப்பாண நாட்டின் வரலாறுபற்றிப் பல நூல்கள் எழுந்துள்ளன. அவையெல்லாம் யாழ்ப்பாணத்தின் ஒரு குறிப்பிட்டகாலப் புறவாழ்வையும் அவ்வாழ்வில் ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறுவனவே. யாழ்ப்பாண மக்கள் கடந்த முந்நூறு ஆண்டுக்காலத்தில் எத்தகைய அகவாழ்வு உடையராய் இருந்தனர் என்பதை இந்நூல் ஒன்றே காட்ட வல்லது.

"விஞ்ஞான ஆராய்ச்சிச் சூழலில் ஒரு ஐன்ஸ்டீன் தோன்றுகிறார். அடியார் பலர் மத்தியில் ஒரு சமயகுரவர் தோன்றுகிறார். அரசியல் நிலைகுலைந்து அராஜகம் நிலவும் சூழலில் ஒரு லெனின் தோன்றுகிறார்" என பேட்ரண்ட் ரஸல் என்னும் பெரியார் கூறியவாறு, யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் என்ற ஐந்தாம் சைவ குரவர் தோன்றியதற்கு யாழ்ப்பாணத்தின் அக்காலக் கலாச்சாரமே காரணமாயிருந்தது. அந்தக் கலாச்சாரமே கந்தபுராணம் தந்த கலாச்சாரமாகும். கந்தபுராண கலாச்சாரம்யாழ்ப்பாணத்தில் நாவலர்பெருமானை மாத்திரமன்றி அவர் வழியில் யார்யாரையெல்லாம் தோற்றுவித்தது என்பதை இந்நூல் மிக அழகாக எடுத்துக்காட்டுகின்றது.

> மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.

நூற்றெடக்கத்தில் அமைந்த கட்டுரையைப் பார்க்குமிடத்து, பண்டிதமணி அல்லர்; சூதமுனிவரே இக்கலியுகத்தில் புராண நயமும் சமய ஞானமும் பொருந்த இதனைச் சொல்லத் தொடங்குகின்றார் என நாம் எண்ணுவோம். சூதமுனிவராகக் காட்சியளித்த பண்டிதமணியவர்கள் பின்னர், கண்ணூறு, வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை, புராணப்படனம் முதலிய கட்டுரைகளில் இவர் கவிச்சக்கரவர்த்தி கம்பராமோ என்னும்படி விளங்குகின்றார். இந்நூலின் இறுதிக் கட்டுரை யாழ்ப்பாண மக்களுக்கோர் அறிவுரை. தமிழ்மக்கள் அனைவோர்க்கும் சிறந்த அறவுரை.

* * * *

**தமிழ் எழுத்தாளர் சங்கம் பம்பாய்:—**

மாநாட்டு மலர்—1959.

**வெளியீடு**: பம்பாய் தமிழ் எழுத்தாளர் சங்கம், சியோன், பம்பாய் 22.

பம்பாய் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவிற் சமீபத்தில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாடு பலவகையிலும் சிறப்பு மிக்கதொன்று. அம் மாநாட்டின்போது வெளியிடப்பெற்ற இம்மலரில் தமிழில் கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய துறைகள் பற்றி நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை, திரு. ந. பிச்சமூர்த்தி, 'ஆர்வி' ஆகியோர் மிக விளக்கமாக எழுதியுள்ள ஆங்கிலக் கட்டுரைகள் பிறமொழியினருக்கும் மிகவும் உபயோகமானவை. ஏனைய கட்டுரைகளும் சுவையாக அமைந்துள்ளன. எழுத்தாளர் சங்கத்தின் நன் முயற்சிகள் தமிழ்மொழி ஆக்கத்துக்கு உதவுவதைக் கண்டு மகிழ்கின்றோம்.

பண்டாரநாயக்கா கொலை வழக்கு

# பத்திரிகை ஆசிரியரின் கனவில் தோன்றிய பிரதமர்

## கோட்டை ஊர்வலமே சூழ்ச்சியின் ஆரம்பம்

சென்ற வாரம் பண்டாரநாயக்கா கொலை வழக்கு விசாரணையின்போது விசாரிக்கப்பட்ட சில சாட்சியங்களின் வாக்கு மூலங்களிலிருந்து முக்கியமான குறிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**திரு. ஹேமா தபாரே**: திருமதி விமலா விஜயவர்த்தனா, திரு. ஸ்ரான்லி டி. சொய்ஸா இவர்கள் இருவரையும், திருவாளர்கள் ஏ. பி. ஜெயசூரியா, ஆர். ஜி. சேனநாயக்கா, ரி. பி. இலங்கரத்தின ஆகிய மந்திரிகளுக்குப் பிடிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும்.

**திரு. தர்மாசிரி குறுப்பு**: ('சிங்கள' பத்திரிகை ஆசிரியர்): நவம்பர் 18-ஆம் திகதி வெளியாகிய 'சிங்கள' பத்திரிகையில், "சூழ்ச்சியின் மூலம்?" என்ற கட்டுரையைப் பிரசுரித்தேன். அக்கட்டுரையில், பிரதமரின் ஆவி என்னுடன் வந்து பேசியது பற்றி எழுதியிருந்தேன். இது கனவில் நடந்தது. அப்பொழுது பிரதமர் என்னிடம் சில தாஸ்தாவேஜுகள் தந்தார். நெற்காணி மசோதா சம்பந்தமாகக் கோட்டை ரயில்வே நிலையத்திலிருந்து ஆரம்பித்த ஊர்வலத்தின் படமொன்றும் என்னிடம் காட்டப்பட்டது. அத்துடன் தனக்கெனக் கொண்டுவரப்பட்ட பாலையே ஸி. பி. டி' சில்வா அருந்தினாரெனவும் பிரதமர் கூறினார். நான்கண்ட இக்கனவு சூழ்ச்சியின் ஆரம்பத்தை எனக்குவிளக்கியது.

**பொலிஸ்காரர் ஹேனத்திரலாகே சமரக்கூன்**: நான் வெளியில் கடமையாற்றிக் கொண்டிருக்கையில், இரு வெடிச் சப்தங்கள் கேட்டன. அத்துடன் இருவர் விருந்தையிலிருந்து தோட்டத்துக்குள் ஓடுவதையும் கண்டேன். உடனே நான் துப்பாக்கிக்குள் குண்டு செலுத்தி, ஆயத்தமானேன். பின்னர், வீட்டுக்கு ஓடினேன். அங்கு வயதானவர் ஒருவர் 'பிரதமர் சுடப்படுகின்றார்' என்றார். அவரே தான் பிரதமரைச் சுட்ட பிக்குவை எனக்குச் சுட்டிக் காட்டினார். நான் பிக்குவை, முழங்காலை மடித்து நின்ற வண்ணம், முழங்காலுக்குக் கீழ் குறி வைத்துச் சுட்டேன். (ஆனந்த தேரோ அளித்த சாட்சியத்தில் தாம் பொலிஸ்காரரிடம் சென்று பிரதமர் சுடப்படுவதைப் பற்றிக் கூறியதாகச் சொல்லியிருந்தார். ஆனால், பொலிஸ் உத்தியோகத்தர் தமது சாட்சியத்தில் இதைப் பற்றி ஒன்றும் கூறாதது இங்கு குறிப்பிடத்தக்கது.)

**கே. பத்மசிரி சில்வா (15)**: பிரதமர் கொலையுண்ட அன்று சோமராம தேரோவுக்கு அப்பமும், 'ஸ்போட்ஸ்மென்' சிகரெட்டும் வாங்கிக் கொடுத்தேன். இரண்டாம் முறை நான் சிகரெட் வாங்குவதற்காகச் சென்று விட்டுத் திரும்பிய பொழுது, கோவிலில் சோமராம தேரோவைக் காணவில்லை.

முன்பொருபோது, கோவிலின் சுற்றுப் புறத்தில் இறைச்சிக்கடை ஒன்று நிறுவப்படவிருந்தபோது, அதை எதிர்த்து பூஸா அமரசிரி என்பவர் உண்ணவிரதம் இருந்தார். இவரது உண்ணவிரதத்தை நிறுத்துவதற்கென திருமதி விமலா விஜயவர்த்தனா அழைக்கப்பட்டார். அவரை அழைப்பதற்குச் சோமராம தேரோவே சென்றாரென எனக்கு மாலப்போல தேரோ கூறினார்.

* * *

**எதிரிகள்:**

1. களனி மஹா விஹாராதிபதி மாப்பிட்டிகம புத்தரகித்த தேரோ.
2. திரு. எச். பி. ஜெயவர்த்தன, அவிசாவலை தெரு, வெல்லம்பிட்டி.
3. திரு. அனுரா டி' சில்வா, பியகம தெரு, களனி.
4. தல்துவே சோமராம தேரோ, ஒபயசேகரா நகர், ராஜகிரி.
5. பொலீஸ் இன்ஸ்பெக்டர் வி.ஏ. நியூட்டன் பெரேரா, பொலீஸ் மாடிகள், மருதானை.
6. ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன, புல்லேர்ஸ் லேன், கொழும்பு.
7. திரு. ஏ. கரோலிஸ் அமரசிங்க, பேஸ்லைன் வீதி, கொழும்பு.

**குற்றச்சாட்டுகள்:**

1958ஆம் ஆண்டு ஒகஸ்ட் 25ஆம் திகதிக்கும் 1959ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதிக்குமிடையில் கொழும்பு, களனி, வெல்லம்பிட்டி, ராஜகிரி முதலிய இடங்களில் பிரதமமந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைக் கொலைசெய்யச் சதித்திட்டம் செய்ததாக ஏழு எதிரிகள் மீதும், அவரைச் சுட்டுக் கொலை செய்ததாக சோமராம தேரோ மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

**வழக்கறிஞர்கள்:**

**முடிக்காக**:- உதவி சொலிசிற்றர் ஜெனரல் ஜனாப் ஏ. சி. எம். அமீர், முடிக்குரிய வழக்கறிஞர்கள் திரு. ஆனந்தா பெரேரா, திரு. எல். பி. ரி. பிரேமரத்ன, சி. ஐ. டி. யைச் சேர்ந்த திரு. எஸ். கே. ஐயர்.

**எதிரிகளுக்காக**:- திரு. ஏ. எச். டி' சில்வா கியூ. ஸி., திரு. ஸ்ரான்லி அலெஸ், திரு. நிமல் விக்கிரமநாயக்கா, திரு. வால்டர் டி' பெரேரா, திரு. கீர்த்தி சிறி ஜயசிங்கே ஆகியோர் முதலாவது இரண்டாவது

[14ஆம் பக்கம் பார்க்க]

# 50 வயதுக்கு மேற்பட்ட இந்தியரை எல்லாம் நாடு கடத்த வேண்டுமாம்

## மேத்தானந்தாவின் தேர்தல் அறிக்கை

**தேர்தல் நெருங்க நெருங்க புதியபுதிய கட்சிகள் தோன்றுகின்றன. எல்லாக் கட்சிகளின் நோக்கங்களையும் வேலைத்திட்டங்களையும் "ஈழநாடு". பிரசுரித்து வரும்.**

* * *

திரு. எல். ஏ. மேத்தானந்தாவின் புதிய கட்சியாகிய **தர்ம சமாஜக் கட்சி** பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கட்சியின் கொள்கைகளை விளக்கியிருக்கின்றனர். அவற்றுட் சில வருமாறு:

1. பௌத்த மதக் கொமிஷன் சிபார்சுகளை நடைமுறைக்குக் கொண்டு வருதல்.

2. சாசன கொமிஷன் செய்துள்ள சிபார்சுகளையும் நடைமுறைக்குக் கொண்டு வருதல்.

3, இலங்கையில் அந்நியரால் ஏற்படுத்தப்பட்டுள்ள தீமைகளை அகற்றுதல்.

கட்சியின் அரசியல் உறுதிகளைக் கொண்ட அறிக்கை இந்தியர் பிரச்சினை பற்றிக் குறிப்பிடுவதாவது:

1. இந்தியர்கள் தங்கள் குடும்பத்துடன் நாட்டை விட்டுச் செல்லுவதற்கு, சலுகை அளித்தல்.

2. ஐம்பதுவயதுக்கு மேற்பட்ட இந்தியர் எத்தொழிலில் இருந்தாலும் அவர்களைப் பதவியிலிருந்து விலகச் செய்வதற்கான ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு பென்ஷன் கொடுத்து, இந்தியாவிற்குத் திரும்பச் செல்ல வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தல். அப்படிக் காலியாகுமிடங்களுக்கு இலங்கையர் நியமிக்கப்பட வேண்டும்.

3. இன்று இந்தியத் தோட்டத் தொழிலாளருக்கு இருக்கும் அதே சலுகைகளுடன் இலங்கையர்களைத் தோட்டங்களில் தொழிலாளராக நியமித்தல்.

4. வேலையில்லாத் திண்டாட்டமிருக்கும் கிராமப் பகுதிகளிலே அமைந்துள்ள தோட்டங்கள், ஒரு விகிதாச்சாரப்படி கிராம மக்களைத்தோட்டங்களில் வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டும். அல்லது அப் பகுதியிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் தோட்டங்களை வரி செலுத்தும்படி செய்ய வேண்டும்.

5. இலங்கையரான இந்திய வம்சாவளியினர் அரசாங்க மொழியை (சிங்களத்தை)படிக்கும்படி கட்டாயப் படுத்த வேண்டும்.

### மொழி

சிங்களம் அரசாங்க மொழியாகக் கருதப்பட்டு இன்று ஆங்கிலம் இருக்கும் நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும்.

தமிழ் மொழிக்கு அதற்கான இடமளித்து, தமிழ் பேசுவோர் தமது மொழியில் தக்க பயிற்சி பெற வழிகளையேற்படுத்தல்.

எல்லாப் பாடசாலைகளிலும் ஆங்கிலத்தை ஒரு பாடமாக்குதல்.

ஆரம்பப் பாடசாலைகளிலும் நடுத்தர பாடசாலைகளிலும் சிங்களம், தமிழ் இரண்டையும் பாடங்களாகப்போதிப்பதற்கு உபயோகப்படுத்தல். **பல்கலைக் கழகங்களில் சிங்கள மொழியே போதனை மொழியாக உபயோகிக்கப்பட்டு, ஆங்கில மொழிப் போதனை நிறுத்தப்பட வேண்டும்.**

1958ஆம் ஆண்டு மொழிக் கலவரத்தின் போது பொது ஊழியர்கள் வரம்பு மீறி நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு ஒரு விசாரணை கொமிஷனை நியமித்தல்.

வேறும் பொருளாதாரம், தொழில், பொலிஸ், கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளிலும் மாற்றங்களைச் செய்வதாகத் தர்ம சமாஜக் கட்சி உறுதி கூறியுள்ளது.


பயிர், செடிகளுக்குண்டாகும்
சகல வியாதிகளையும் நிச்சயமாகத் தடுப்பது

பொலிடோல்

யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பவர்கள்:
கே. எஸ். செல்லையா
றேயல் டிஸ்பென்சரி

ஏகவிநியோகஸ்தர்கள்:
சதாம் ஹவுஸ் லிமிடெட்
தபாற் பெட்டி இல. 743. கொழும்பு.
சகல தகவல்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

## பூஜ்யம் தபால்

பீட்டர் கெனமன் அவர்கள்,
காரியதரிசி,
கொம்யூனிஸ்ட் கட்சி
கொழும்பு.

தோழரே!

கொழும்பு நகரசபைத் தேர்தலில் நீங்கள் அடைந்த தோல்வியைக் கேட்டு வருந்தியவர்களில் நானும் ஒருவன்.

இந்தத் தோல்வியால் உண்மையில் நஷ்டம் கொழும்பு நகர சபைக்கும், மக்களுக்கும் தானே ஒழிய உங்களுக்கு அல்ல.

ஏழை எளியவர்கள் தங்களிடம் வந்து முறையிட்டால், இரவு எந்த நேரத்திலும் சிரமம் பாராமல் நீங்கள் உடன் கவனித்து, அவர்களுக்குக் கூடுமான நிவாரணத்தைத் தேடித் தர முயலுவீர்களென்றும், துணிச்சலுடன் அவர்களுக்காகப் போராடுவீர்களென்றும், இனி யாரிடம் முறையிடுவது என்றும் ஓர் தொழிலாளி கண்ணீர் ததும்பக் கூறினர்.

சபையில் நீங்கள் பேச எழுந்ததும், எதிராளிகளுக்கெல்லாம் வயிற்றில் நெருப்புத்தான். என்ன சொல்வீர்களோ என்ற பயம். உங்களுடைய நேர்மையும் தியாக சேவையும் தான், எதிராளிகளும் உங்களை மதித்து, அஞ்சுவதற்குக் காரணம்.

ஆங்கிலத்திலே ஆணித்தரமாகப் பேசுவதில் உங்களுக்குச் சிலர் முதல் ஸ்தானமும் அளிக்கின்றனர். தாங்கள் இல்லாத நகரசபை, உப்புச் சப்பின்றி, களையின்றிப் போய் விடுமே என்று பலரும் வருந்துகிருர்கள்.

இப்படியெல்லாம் நான் எழுதுவதைப் பார்த்ததும், நானும் ஒரு கொம்யூனிஸ்டோ என்று நினைத்துவிடாதீர்கள். நான் வெறும் "ஜேர்னலிஸ்ட்" (பேப்பர்க்காரன்) தான். அரசியல் வியாதி என்னை இன்னும் பிடிக்கவில்லை.

பூர்வம் ஒரு "ஜேர்னலிஸ்ட்" ஆக இருந்த தாங்கள், அரசியல் அரங்கத்தில் குதித்துச் சென்ற 12 வருஷகாலமாகத் தோல்வியே அறியாமல், பேரும் புகழும் பெற்று முன்னேறிவந்ததைக்கண்டு, 'ஜேர்னலிஸ்ட்' என்ற முறையில் நானும் பெருமை கொண்டேன்.

தங்களுக்கு முதல் தோல்வி கிடைத்ததைக் கேட்டதும், திடுக்கிட்டு வருந்தி, ஆறுதலுக்காகத் தங்களுக்கு இதை எழுதலானேன்.

இப்படிக்கு,
பூஜ்யம்

குறிப்பு :—

நம்மில் பலருக்கும் தோல்வியோ, கஷ்டநஷ்டமோ ஏற்பட்டால், நாம் பிறர்மீது குறை சொல்லி, அவர்களே இதற்கெல்லாம் காரணம் என்று சொல்லுவது சகஜம். நமது கஷ்டங்களுக்குப் பிறர் மீது குறைசொல்லித் தப்புவது அறியாமை என்றும், நாம் தான் அதற்குக் காரணமென்றும் திருவள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

தங்கள் தோல்விக்கு, ஏற்கெனவே தங்களை ஆதரித்தவர்களும் சில காரணங்களைக் கூறுகிருர்கள். மொழிப் பிரச்சினை, வேலைநிறுத்தம் முதலியவைகளில் ஸ்திரமற்ற கொள்கையை, பச்சோந்திபோல் தங்கள் கட்சி மாற்றுவதாகவும், அதனல் தங்கள் பேச்சில் மக்கள் முன்போல் அவ்வளவு நம்பிக்கை கொள்வதில்லை என்றும் என் காதில் சில குருவிகள் கூறின. இதைப்பற்றித் தாங்கள் யோசித்து, ஆவன செய்யவேண்டுமென்றே இதை எழுதலானேன்.

மன்னிக்கவேண்டும். ஒரு சொந்த விஷயம். சில வருஷங்களுக்கு முன்பாக நீங்கள் ஜிந்துப்பிட்டி முருகன் கோவிலுக்கு வந்து வழிபட்டு, பிரசாதம் பெற்றுச் சென்றதாக ஞாபகம். ஒரு கொம்யூனிஸ்ட்டாக இருந்தும் இப்படிக் கோவிலுக்கு வந்து கும்பிட்டதைப்பற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி. பிறகும் அங்கு தாங்கள் சென்றீர்களா? அல்லது முருகனை மறந்துவிட்டீர்களா? "கடவுளே பூரணமான கொம்யூனிஸ்ட்" என்று ஒரு பெரியவர் கூறுவதுண்டு. ஆகவே அவரை மறக்காமல் அடிக்கடி அவரிடம் போங்கள். உறுதியாகச் சொல்லுகிறேன். மாசுகளெல்லாம் மறைந்து, உங்களுக்கு வெற்றிமேல் வெற்றி கிடைக்கும். மொஸ்கோவுக்கும் நீங்கள் வழிகாட்டலாம்.

பூஜ்யம்.

# வகுப்புவாதக் காளான் கட்சிகள் கட்டுப் பணமும் இழந்தன

# கொழும்பு நகரசபைத் தேர்தல் கற்பிக்கும் பாடம்.

## கெனமனைத் தோற்கடித்தவருக்கு இரு மோட்டார்கள் பரிசு?

**கொழும்பு நகரசபைத் தேர்தலில் போட்டியிட்ட வகுப்புவாத, காளான் கட்சிகள் எல்லாம் மண்ணைக் கௌவின. அதன் அபேட்சகர்கள் அநேகமாக எல்லாரும் கட்டுப்பணமும் இழந்தனர்.**

**தனிச் சிங்களக் கொள்கையை யு. என். பி. இன்னும் மாற்றவில்லை எனினும் இவ்விஷயம் பற்றி அக்கட்சி வாயே திறக்கவில்லை. சில தமிழர் கூட அக்கட்சியின் சார்பாகப் போட்டியிட்டனர். புதிய தலைவர் டட்லி இவ்விஷயமாக நியாயமான ஏற்பாடு செய்யலாமென்பது அவர்கள் நம்பிக்கையாம்.**

சென்ற சனிக்கிழமை நடைபெற்ற கொழும்பு நகரசபைத் தேர்தலில் யு. என். பி. க்குப் பெரிய வெற்றி கிடைத்திருப்பதானது, வருகிற பொதுத் தேர்தலில் யானையே (யு. என். பி.) வெற்றி பெறுமென்பதற்கு முன்னோடியான அறிகுறி என்று யு. என். பி. த் தலைவர் நம்பிக்கையுடன் கூறுகிருர்.

ஆனல் யு. என். பி க்குப் பிரமாத வெற்றி ஒன்றும் கிடைத்து விடவில்லையென்றும், 1956-ம் வருஷம் டிசம்பரில் நடந்த கொழும்பு நகரசபைத் தேர்தலிலும் யு. என். பி. 20 ஸ்தானங்கள் பெற்றிருந்ததாயும், இப்பொழுது 23 ஸ்தானங்களைப் பெற்ற பொழுதிலும் அதன் அரசியல் உருவம் மாறவில்லையென்றும் பிரதமர் தகநாயக்கா கூறுகின்ருர்.

கொம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி, பீட்டர் கெனமன், கொழும்பு மக்களில் பெரும்பாலோர் யு. என். பி. யை ஆதரிக்கவில்லை என்கிருர். இடதுசாரிகளையே பெரும்பாலோர் ஆதரித்துள்ளதாயும், இடதுசாரிகளிடையே ஒற்றுமையில்லாமல், தற்கொலைப் போட்டிகள் இருந்ததால்தான் யு. என். பி. க்கு அதிக ஸ்தானங்கள் கிடைக்க முடிந்ததென்றும், ஆகவே கொம்யூனிஸ்ட், சமசமாஜ், எம். ஈ. பி. (பிலிப்) இம் மூன்று கட்சிகளும் ஓர் ஒற்றுமை முன்னணியை ஏற்படுத்தினல் வருகிற பொதுத் தேர்தலில் கொழும்பிலே யு. என். பி. யைத் தோற்கடித்து விடலாமென்றும், தீவெங்கும் முன்னேற்ற சக்திகளுக்கு இந்த ஒற்றுமை முன்னணியால் வெற்றி கிடைக்குமென்றும் அவர் நம்புகிருர்.

### கட்சிகளின் நிலைமை

கொழும்பு நகரசபைத் தேர்தலின் முடிவுகளை இங்கு சற்றே ஆராய்வோம். நகரசபைக்கு மொத்த ஸ்தானங்கள் 37. மொத்த ஜனத்தொகை சுமார் ஐந்து லட்சம், (4 லட்சத்து 95 ஆயிரத்து 285), இதில் 4 லட்சத்து 8 ஆயிரம் பேர்தான் பிரஜைகள். அதாவது 87 ஆயிரம் தமிழர் நாடற்றவர்களாக்கப்பட்டு, அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டுவிட்டது.

தலை நகரில் பிரஜைகளாக இருப்பவர்களில் 2 லட்சத்து 37 ஆயிரம் பேர் சிங்களவர், இலங்கைத் தமிழர் 63 ஆயிரத்து 713, இலங்கைச் சோனகர்கள் 64 ஆயிரத்து 189. வாக்காளரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 121.

மேற்குறித்த 37 ஸ்தானங்களுக்கும் மொத்தம் 152 பேர் போட்டியிட்டனர். 32 பேர் சுயேச்சையாகவும், மற்ற 120 பேரும் 9 கட்சிகளின் சார்பிலும் போட்டியிட்டனர். இதில் ஐக்கிய தேசியக் கட்சி (யு. என். பி.) தான் அதிகமான ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டது. 2 ஸ்தானங்களைத் தவிர மற்ற 35 க்கும் போட்டியிட்டதில் 23 ஸ்தானங்களில் வெற்றி பெற்றுள்ளது. நகரசபையில் யு. என். பிக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளதால், மேயர், உதவி மேயர் பதவிகளுக்கு இக் கட்சியைச் சேர்ந்தவர்களே வருவதுடன், சபை நிர்வாகமும் இக் கட்சியின் கையில்தான் இருக்கும்.

**ஒரே பார்வையில் தேர்தல் முடிவுகள்**

| கட்சி | அபேட்சகர் | வென்ற ஸ்தானங்கள் | பெற்ற வாக்குகள் | கட்டுப் பணம் இழந்தது |
|---|---|---|---|---|
| யு. என். பி. | 35 | 23 | 49,850 | — |
| லங்கா சமசமாஜக் கட்சி | 25 | 8 | 26,795 | 1 |
| கொம்யூனிஸ்ட் | 18 | 1 | 16,177 | 4 |
| எம். ஈ. பி. (பிலிப்) | 18 | — | 9129 | 4 |
| சுதந்திரக் கட்சி (எஸ். எல். எவ். பி.) | 15 | 1 | 6154 | 8 |
| விவசாயிகள் முன்னணி | 5 | — | 357 | 5 |
| ஜாதிக விமுக்தி பெரமுனை | 2 | — | 161 | 2 |
| மத்தியவழி இயக்கம் | 1 | — | 471 | — |
| முஸ்லிம் புரட்சிக் கட்சி | 1 | — | 102 | 1 |
| சுயேச்சை | 32 | 4 | 18,313 | 16 |

### பாராட்ட வேண்டும்

இத் தேர்தலில் பதிவான வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,28099. அதாவது 100க்கு 70பேர் வீதம் வாக்களித்திருக்கிருர்கள். இவ்வளவு பேர் வாக்களிப்பாரென்று பொதுவாக எதிர்பார்க்கப்படவில்லை. குழப்பம், கலவரம் முதலிய எவ்வித அசம்பாவிதமுமில்லாமல், இத் தேர்தல் மிக அமைதியாக நடந்து முடிந்துள்ளது. இதுபற்றிக்கொழும்பு பொதுமக்களும், பொலிசும், தேர்தல் இலாகாவும், பல கட்சி அபேட்சகர்களும் பாராட்டப்படவேண்டும். இச் சமயம் தேர்தல் நடாத்தினல் நாட்டில் குழப்பமேற்படுமென்று சில நண்பர்கள் தமக்கு ஆலோசனை கூறியதாகவும், என்ருலும் தாம் தேர்தலைத் துணிந்து நடாத்தியதாயும், தாம் செய்த முடிவு சரி என்பதை அமைதியான தேர்தல் காட்டிவிட்டதாயும், பிரதமர் தம்மைப் பாராட்டிக்கொள்ளுகின்ருர். நினைத்திருந்தால் அவர் தேர்தலை ஏதாவது சாட்டுச்சொல்லித் தடுத்து நிறுத்தியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் அவர் இத் தேர்தலை நடாத்த முற்பட்டதுடன், இதை அமைதியாக நடாத்த ஒழுங்கு செய்ததும் பெரிய காரியமே.

### கொழும்பில் தமிழ்ப் பலம்

தலைநகரிலுள்ள மொத்த ஜனத்தொகையான 5 லட்சத்தில் தமிழ் பேசும் மக்களே அதிகமாகும். அதாவது சுமார் இரண்டு இலட்சத்து 60 ஆயிரமாகும். என்ருலும் தெரிவு செய்யப்பட்டுள்ள 37 அங்கத்தவர்களில், தமிழ் பேசும் மக்கள் சோனக முஸ்லிம்கள் உள்ளிட்டுப் 12பேர்தான் உள்ளனர்.

[15ஆம் பக்கம் பார்க்க]

# "எல்லைத் தகராறைத் தீருங்கள்"

—குருஷேவ்

# "இந்தியாவுடன் இராணுவ ஒப்பந்தம் இல்லை"

—அயூப்கான்

## இந்தியா

சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனைகள் விதித்து இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு கடந்த மாதம் 16ஆம் திகதி எழுதிய கடிதத்திற்குச் சீனப் பிரதமர் திரு. சௌ என்லாய் கடந்த 18ஆம் திகதி பதிலனுப்பியிருந்தார். இவருடைய பதில் முற்றும் திருப்தியற்றதான முறையிலும் இந்திய மக்களின் ஆத்திரத்தைக் கிளப்புவதாகவும் அமைந்திருக்கிறது. எல்லைப் புறங்களுக்கு ரோந்துப் படைகளை அனுப்பக் கூடாது என்பதைச் சீனப் பிரதமர் வரவேற்றிருக்கிருர். லடாக்கில் சூன்யப் பிரதேசத்தை அமைக்கவேண்டும் என்பதை நிராகரித்து, லடாக் சீனத்திற்குரியது என்றும், மக்மோஹன் எல்லையை ஒப்புக்கொள்ள முடியாது என்றும், வட கிழக்கு எல்லையில் ஒரு சூன்யப் பிரதேசத்தை அமைக்க இந்தியா உடன்படுமா என்றும் பல விசித்திரக் கேள்விகளைச் சீனப் பிரதமர் கிளப்பியிருக்கிருர். புதிதாக இந்திய—சீன எல்லை நிர்ணயிக்கப்படவேண்டும் என்று சீனப் பிரதர் விரும்புகிருர். பரம்பரையாக இருந்து வந்த (1913—14இல் நிர்ணயிக்கப்பட்ட) மக்மோஹன் கோட்டை எல்லையாகக் கொண்டு அதில் சிறு மாற்றங்கள் செய்யப்படுவதையே இந்தியப் பிரதமர் விரும்புகிருர்.

இன்று (26-12-59) ஒரு சீன நகரில் அல்லது பர்மாவின் தலைநகராகிய ரங்கூனில் பாரதப் பிரதமரைச் சந்திக்க விரும்புவதாகச் சீனப் பிரதமர் யோசனை கூறியிருந்தார். அடிப்படை விஷயங்களில் வேற்றுமை இருப்பதால் மன வருத்தத்துடன் சீனப் பிரதமரின் யோசனையை ஏற்க மறுப்பதாகப்பிரதமர் நேரு கடந்த திங்கட்கிழமைலோக்சபையில் கூறியுள்ளார். இயன்ற அளவுக்கு சமரசமாகப் பேச்சுவார்த்தைகள் மூலம் எல்லை விவகாரத்தைத் தீர்த்துவைப்பதே இந்திய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று மீண்டும் வற்புறுத்தியிருக்கிருர்.

இதற்கிடையில், இந்தியா—சீனஎல்லைவிவகாரத்தைச் சமாதானமான முறையில் தீர்த்து வைக்க முயற்சியெடுக்குமாறு ருஷியப் பிரதமர் குருஷேவ் பிரதமர் நேருவுக்கு அண்மையில் கடிதம் எழுதியிருக்கிருர்.

பீக்கிங்கிலுள்ள இந்தியத் தூதுவர், ஆலோசனைகளுக்காக புது டில்லிக்கு அழைக்கப்பட்டிருக்கிருர். கடந்த செவ்வாய்க் கிழமை சீன எல்லை விவகாரம் லோக் சபையிலும் இராஜிய சபையிலும் விவாதிக்கப்பட்டது.

### டக்டர் பட்டாபிசீதாராமையர் மரணமானுர்

இந்திய காங்கிரஸின் முன்னுள் தலைவரும், மத்திய பிரதேச இராச்சியத்தின் முன்னுள் தேசாதிபதியுமான டக்டர் பட்டாபி சீதாராமையர் தமது 80 வது வயதில் கடந்த 17-ந் திகதி காலமானுர். இவர் வகித்த சில பதவிகள் பின்வருமாறு :—காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தவர் 1928–46; காங்கிரஸ் தலைவர் 1948–49: "ஜன்மபூமி" ஆசிரியர் 1919; மத்திய பிரதேச இராச்சிய தேசாதிபதி 1952–56.

### காஷ்மீர் சிக்கல்

காஷ்மீர் சிக்கலுக்குத் தீர்வு காணும்முகமாகப்பிரதமர் நேருவுடன் தாம் பேச்சு வார்த்தைகள் நடாத்துவதற்கு விரும்புவதாகப் பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் கூறியிருக்கிருர். காஷ்மீர் பிரச்சினை தீர்க்கப்படும்வரை இந்தியாவுடன் ஒரு இராணுவ ஒப்பந்தமும் செய்யப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

### பம்பாய் இராச்சியப் பிரிவினை

இப்போதுள்ள பம்பாய் இராச்சியம் 'பம்பாய்' என்றும் 'குஜராத்'என்றும்இரு இராச்சியங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக் கொண்டிருக்கிறது. விதர்பாவும் நாக்புரியும் தக்க பாதுகாப்புகளுடன் புதிய பம்பாயில் இணைக்கப்படும். புதிய இராச்சியங்கள் 1-4-60 இல் தாபிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு மார்கழி மீ 11 உ (26-12-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## 1959 ஆண்டின் கதை

மனித சரித்திரத்திலேயே 1959 சிறப்பான இடம்பெறும். காரணம், வான வெளியிலே நமக்கு இரண்டு இலட்சம் மைலுக்கு அப்பாலுள்ள சந்திரனைச் சாடிவிட்டான் இவ்வாண்டில் மனிதன். இயற்கையை வெல்லும் விஞ்ஞான அறிவு, வியப்படையுமளவுக்கு வளர்ந்துகொண்டு போகின்றது., இவ்வகையில் ருஷியா எட்டிய வெற்றி, எதிர்காலத்திலே மனித வர்க்கத்துக்கு வரப்பிரசாதமாகுமா? அல்லது மற்றொரு சாபத்தீடாகுமா? என்பது முக்கிய கேள்வி.

அது ஒரு வரப்பிரசாதமாகும் என்று நம்பக்கூடிய சில நல்ல அறிகுறிகளைச் சமீபத்தில் நாம் கண்டோம். அணு ஆயுதங்களால் ஏற்படக்கூடிய பெரிய ஆபத்துக்களை அமெரிக்கா, ருஷியா இவ்விரு போட்டி வல்லரசுகளும் நன்குணர்ந்து, எப்படியாவது சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமென்று பேராவல் கொண்டு அதற்கான முயற்சிகளைச் செய்கின்றனர்.

ருஷியாவின் குருசேவ், அமெரிக்காவுக்கு விஜயம் செய்து, அமெரிக்க ஜனதிபதி ஐசனோவரை ருஷியாவுக்கு வரவேண்டும் என்று அழைத்துள்ளார். ஜனதிபதியும் இதை ஒப்புக்கொண்டு, இன்னும் சில மாதங்களில் ருஷியாவுக்குச் செல்ல இருக்கின்றார். இதன் பயனாக உலகிலே யுத்த பீதிகள் குறைந்து, சமாதான நம்பிக்கை அதிகரித்துள்ளது.

வருகிற ஏப்ரல் மாதத்தில் பாரிஸ் நகரிலே, அமெரிக்கா, ருஷியா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் தலைவர்கள் உச்சி மகாநாடு கூடிப் பல சிக்கல்களைத்தீர்க்க முற்பட்டுள்ளனர். ருஷியாவைத் தங்கள் முதல் நம்பர் விரோதி என்று மதித்து ஒதுக்கி வந்தவர்கள், ருஷியாவை அழைத்துப்பேச முன்வந்துள்ளதும், ஆயுதங்களைக் குறைப்பதற்கான பேச்சுகளை நடாத்த முற்பட்டுள்ளதும் வரவேற்கத்தக்க நல்ல அறிகுறிகள்.

யுத்தத்தால் எந்தப் பிரச்சினைகளும் தீருவதில்லை. இதற்கு மாருகப் புதிய புதிய சிக்கல்கள் கிளம்பி, எல்லோரையும் திகைக்கவைக்கின்றது. சென்ற இரு யுத்தங்களின் பயனாக, இந்தப் பாடத்தை நன்குணர்ந்த பெரிய வல்லரசுகள், சமாதானத்தின் அவசியத்தை உணர்ந்து, அதற்கான முயற்சிகளை உண்மையில் செய்கின்றன. கிழக்கு, மேற்கு, வெள்ளை, கறுப்பு முதலிய வேற்றுமைகள் இன்னும் இருக்கின்றனதான் என்ருலும் உலகிலே மனிதவர்க்கமனைத்தும் ஒரே குடும்பம்போல் வாழ வேண்டிய அவசியத்தை அறிவுறுத்திவிட்டு 1959 ம் வருஷம் விடைபெறுகின்றது.

இதே ஆண்டிலே இதுவரை என்றுமில்லாதபடி அமெரிக்க ஜனதிபதி ஐஸனேவர், இந்தியா, பாகிஸ்தான் முதலிய ஆசிய நாடுகளுக்கு நேரில் விஜயம் செய்தார். ஆசியமக்களின் முக்கியத்துவத்தை அமெரிக்கா உணர்ந்து அவர்களுக்குரியமதிப்பை அளித்துள்ளது. இதுவரை அடக்கி ஒடுக்கப்பட்ட ஆசிய, ஆபிரிக்கா மக்களுக்கு விமோசனகாலம் நெருங்கி வருகிறதென்பதற்கு ஐஸனேவரின் ஆசிய விஜயம் மேலான அறிகுறியாகும். கோடிக்கணக்கான ஆசிய, ஆபிரிக்க மக்கள் இன்னும் அரசியல், பொருளாதார, இன்னல்களிலிருந்து பூரணமாக விடுதலை பெறவில்லை. என்ருலும், அம் மக்களுக்கும் பூரண சுதந்திரம் கிடைக்கும் போதுதான், தாங்கள் நிம்மதியாக வாழ முடியுமென்பதை சம்பந்தப்பட்ட வல்லரசுகள் வரவர அதிகமாக உணர்ந்து, அதற்கான நடவடிக்கைகளை மெதுவாக எடுக்கின்றன. நைஜீரியாவின் அரசியல் விடுதலை இதற்கு அத்தாட்சி.

இதே வேளையில் இந்தியாவுக்கும் சீனத்துக்கும் எல்லைத் தகராறுகள் ஏற்பட்டு, இருநாடுகளுக்கும் யுத்தம் மூளுமோ என்று அஞ்சும்படியும் நிலைமை ஆபத்தாயிற்று. என்ருலும் பிரதமர் நேருஜியின் நிதானமும் உறுதியும், அரசியல் ஞானமும் தீர்க்கதரிசனமும் இப் பிரச்சினையைசுமுகமாகத் தீர்க்கஉதவுமென்றும், இது யுத்தத்தீயாக மாறிவிடாதென்றும் நம்பலாம். சீனப் பிரதமர் சூ என் லாயும் நேருவும் நேரில் சந்தித்துப் பேச ஆவலுடன் உள்ளனர். சில தடைகள் நீங்கிய பின், இருவரும் பேசி, இந்தியா — சீன எல்லை முதலிய தகராறுகளைத் தீர்த்துக் கொண்டு இருதேச நட்பையும் பரஸ்பர நன்மையைக் கருதிப் பலப்படுத்துவரென்றே நம்ப இடமுண்டு.

பாகிஸ்தானுடன் இந்தியாவின் உறவு பலவிதங்களிலும் இந்த ஆண்டில் மேம்பட்டு வந்துள்ளது. கிழக்கு எல்லைத் தகராறுகளைப் பேச்சுக்கள் மூலம் தீர்த்ததுடன், மற்றத்தகராறுகளையும் காஷ்மீர் பிரச்சினையையும் இதே போல் தீர்க்கலாமென்ற நம்பிக்கை, ஐஸனேவரின் விஜயத்துக்குப் பின் அதிகரித்துள்ளது. இந்தியாவுடன் நட்புறவைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று பாகிஸ்தான் தலைவர் அயூப்கான் விசேஷ ஆவல் கொண்டிருப்பது வரவேற்கத்தக்க விஷயமாகும்.

ஆனல் நம் இலங்கைக்கு 1959 மிகவும் துக்கமான, வெட்கக் கேடான ஆண்டாகும். பிரதமர் பண்டாரநாயக்கா படுகொலை செய்யப்பட்டதால், வெளியுலகில் நமது மதிப்பு குறைந்ததுடன், உள்நாட்டிலும் அரசியல் சீர் குலைந்துவிட்டது. பார்லிமெண்ட் சபை கலைக்கப்பட்டு, புதுத் தேர்தல்கள் வருகிற மார்ச்சு மாதம் நடைபெற இருக்கின்றன. இதுவரை கொழும்பு உட்பட பல உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தல் அமைதியாக நடைபெற்றுள்ளதானது, இங்கு ஜனநாயகம், இடையிலே எவ்வளவு சோதனைகள் ஏற்பட்டாலும் அவையனைத்தும் நல்ல பாடங்களாக இருந்து, எதிர் காலத்திலே மேலான முறையில் நடைபெறுமென்ற நம்பிக்கையை அளித்துவிட்டு, 1959-ஆம் ஆண்டு விடை பெறுகின்றது. 1960 உலகுக்குப் புது வாழ்வு அளிக்கப் பிறக்கின்றது.

---

## வகுப்புவாதத்துக்குச் சாவு மணி

கொழும்பு நகரசபைக்குச் சென்ற வாரம் நடைபெற்ற தேர்தல் வகுப்புவாதத்துக்குச் சாவுமணி அடித்துவிட்டது. உதாரணமாக உணுப்பிட்டி வார்ட்டிலே மொத்த வாக்காளரில் 2800 பேர் சிங்களர். தமிழர் 300 பேர்தான். அங்கு தமிழ்ப்பெண்மணியான திருமதி மீனு இரத்தினம் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் அபேட்சகருக்கு வாக்களிக்க வேண்டாமென்று வகுப்புவாதக் கூச்சல்கள் கிளம்பியதெனினும், பொதுமக்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

சிங்களம் மட்டும் கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாதென்று பிடிவாதம் காட்டிய பிலிப் குணவர்த்தனவின் எம். ஈ. பி கட்சியின் சார்பாகப் போட்டியிட்ட 18 பேரில் ஒருவராவது தெரிவுசெய்யப்படவில்லை. எல்லாரும் அரோகரா. இதே வகுப்புவாதத்தை நம்பிப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுன, லங்கா கோவிகம்காரு பெரமுன எல்லாம் மண்ணைக் கௌவின. தமிழுக்குச் சம உரிமை வேண்டுமென்று உறுதியாகக் கூறிவரும் சமசமாஜக் கட்சி அபேட்சகரில் 8 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். பழைய சபையில் இக் கட்சிக்கு மூன்றே ஸ்தானங்கள்தான் இருந்தன. 23 ஸ்தானங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, மொழி விஷயத்தில் ராஜதந்திர மௌனம் சாதித்தது. மொழி வெறி மதவெறிக் கோஷங்கள் இனிப் பலிக்காதென்பதையும், அமைதியையும் ஒழுங்கையுமே மக்கள் விரும்புகிருர்களென்பதையும் உணர்ந்து அதற்குத் தக்கபடி தாங்களே தேர்தல் கோஷங்களை மாற்றி, வெற்றியும் பெற்றனர்.

தலைநகரம் அளித்த தீர்ப்பு, பல அரசியல் கட்சிகளுக்கும் நல்ல பாடமாகும். இனி வருகிற பொதுத் தேர்தலில் மொழி வெறி, மத வெறி, இந்தியத் துவேஷவேறி, வகுப்பு வெறி முதலியவற்றை யாரும் கிளப்பி வெற்றிபெறலாமென்று யாரும் நம்பினல் அவர்களுக்கு என்ன பலன் கிடைக்குமென்பதைக் கொழும்பு மகாஜனங்கள் தெளிவாக அறிவுறுத்திவிட்டார்கள்.

---

## இலங்கை ஜனநாயக காங்கிரஸ்

நமது அரசியல் நிருபர் சென்ற வாரம் எழுதியது போல், இதுவரை இரண்டாகப் பிளவுபட்டுக்கிடந்த இலங்கை ஜனநாயக காங்கிரஸ் மீண்டும் இணைந்துவிட்டது. மகிழ்ச்சி அளிக்கும் செய்தி இது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பாக நேருஜி இலங்கைக்கு விஜயம் செய்து, இலங்கை இந்தியர் காங்கிரஸை இரு முக்கிய நோக்கங்களுக்காக அமைத்துக் கொடுத்தார். ஒன்று, இலங்கையின் அரசியல் விடுதலை. மற்ருென்று, இங்கு உரிமையற்றிருந்த 10 இலட்சம் இலங்கை இந்தியருக்கு அரசியல் உரிமைகள் பெற்றுத் தருவது.

இதன் முதல் நோக்கம் 12 ஆண்டுகளுக்குமுன் நிறைவேறி, இலங்கை சுதந்திர நாடாகிவிட்டது. ஆனல் மலைநாட்டுத் தமிழரின் நிலையோ முன்னிலும் மோசமாகிவிட்டது. ஏற்கெனவே பெற்றிருந்த வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. பார்லிமெண்டிலே சென்ற 8 ஆண்டுகளாக அவர்களுக்கு ஒரு பிரதிநிதியும் கிடையாது. இதனல் அவர்கள் அரசியலில் அனதைகளாக்கப்பட்டு, நாளுக்குநாள் அதிக இன்னல்களுக்கும் உள்ளாகிவருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மனிதவுரிமைச்சபைக்கு இலங்கையின் குணவர்த்தனவே தலைவர். இலங்கையிலே சென்ற எட்டு ஆண்டுகளாக பத்து இலட்சம் பேர்களுக்குமேல் மனித உரிமைகளை இழந்து அரசியல் அனதைகளாக்கப்பட்டுள்ளனர்! இதனல் இங்கு ஜனநாயகத்துக்கேஆபத்துஏற்பட்டும், அவர்களுக்கு விமோசனமளிக்க எவரும் முன்வரவில்லை!

ஆகவே ஐந்தாண்டுகளுக்கு முன்பாக அந்த ஸ்தாபனம் புதிய அரசியல் நிலைக்கேற்ப ‘இலங்கைஜனநாயககாங்கிரஸ்’ என்று பெயரை மாற்றி அகில இலங்கை அரசியல் கட்சியாகி, மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும், சமதர்ம முறையில் இலங்கையின் பொருளாதார விடுதலைக்கும் போராடுவதெனத் தீர்மானித்தது. என்ருலும் அக்கட்சிக்குள்ளாகவே பிளவு ஏற்பட்டதால், இதுவரை உருப்படியாக அது எதுவும் செய்ய முடியவில்லை. ஒற்றுமையின்றேல், தங்கள் நிலை இன்னும் மோசமாகுமென்பதை உணர்ந்து, இப்போது மீண்டும்ஒன்றுபட்டுப்போராட முன் வந்திருப்பது நல்லதோர் சகுனமாகும்.

மனித உரிமைகளுக்காகவும் பொருளாதார சமூக விடுதலைக்கும் போராடுவதே இந்த ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கமாயின், இதற்கு இந்நாட்டில் பொதுமக்களிடையே கூடுமான அனுதாபமும் ஆதரவுமிருக்கும். இதைப் பெறும் வகையில் இப்போது ஒன்றுபட்ட இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர்கள் தீர்க்கதரிசனத்துடன் முனைந்தால் இங்கு உரிமை இழந்துள்ள எல்லா மக்களின் சங்கடங்களும் சீக்கிரத்திலே தீர்ந்து அவர்களுக்கும் நாட்டுக்கும் நல்ல காலம் பிறக்கும்.

## கிறிஸ்மஸ் புதுவருடம்

இந்தமுறை கிறிஸ்மஸ் புது வருஷமெல்லாம் பிரமாதம்!

என்ன இப்படிச் சொல்லுகிறேனென்று கேட்கிறீர்களா? கொழும்பு கடைத் தெருவில் சென்று பாருங்கள். அப்போது தெரியும் இந்த உண்மை.

சில நாட்களுக்கு முன்பாக, இரவு 8 மணிக்குக் கடைத் தெருப்பக்கம் போயிருந்தேன். எங்கும் ஜகஜ்ஜோதியாக இந்திரலோகம்போல் காட்சியளித்தது! (சாய்ப்புச் சட்டம் வந்தபின் இருட்டிய மின்கடைத் தெரு சாதாரணமாக அழுது வழிகிறது).

இலங்கையிலுள்ள நாம் புது வருஷத்தைச் சந்தோஷமாகக் கொண்டாட வேண்டுமென்று, தூரத்திலுள்ள பல பல நாடுகளிலுள்ளவர்களுக்கும் எவ்வளவு அக்கறை! அவர்கள் எவ்வளவுதினிசு தினிசான சாமான்களைக் கப்பல்களில் முன்கூட்டியே அனுப்பியிருக்கிருர்கள் தெரியுமா?

வியாபார நோக்கம், என்று சொல்லலாம். ஆனல் அதற்கு அடியிலே நம்மையுமறியாமல், உலகம் ஒத்துழைப்பதையும், பரஸ்பரம் உதவி அது ஒன்ருகி வருவதையும் காண்கிருேம்அல்லவா?

இது மார்கழி மாதம். இரவிலும் அதி காலையிலும் அதிக குளிர். இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கச் சுகமாகவிருக்கிறது.

இந்தக் குளிரிலே இரவு 3 மணிக்கே எழுந்து, பச்சைத் தண்ணீரிலே முழுகிவிட்டு யாராவது தெருவெல்லாம் வெறும் உடலுடன் சுற்றுவார்களா?

கொழும்பு ஜிந்துப்பிட்டி கோவிலிலுள்ள திருஞானசம்பந்த கானசபையினர், மார்கழி மாதம் 30 நாளும் அதிகாலை “போற்றி என் வாழ்முதல் ஆகியபொருளே” என்று பாடிக்கொண்டு, மூன்றல்லது நான்குமணி நேரம் பலவீதிகளில் சுற்றித் தெருவையெல்லாம் புனிதமாக்கி வருகிருர்கள். இவர்கள் வேலையற்றவர்களல்ல. கடைகளிலும், வங்கியிலும், அரசாங்கத்திலும் வேலைபார்க்கிருர்கள். சிறுவர்கள் அதிகமாக இதில் உற்சாகத்துடன் சேருகின்ருர்களாம்.

“கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காதே” என்று திருவெம்பாவை பாடும் கோஷ்டிகள் பல அடுத்தவாரம் முதல் பத்து நாட்கள், கொழும்பு, யாழ்ப்பாணம், மலைநாடு உள்ளிட்டுப் பல ஊர்களிலும் புறப்பட்டு, பாடும் பணியைச் செய்ய வழக்கம்போல் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

கொழும்பிலும், ஹட்டன் முதலிய ஊர்களிலும் சமீபத்தில் நகரசபைத் தேர்தல்கள் நடைபெற்றன அல்லவா? அதில் பலர் பணம்கொடுத்து வாக்கு வாங்கியதாயும், பணத்தைத் தண்ணீரைப்போல் அள்ளி இறைத்தனரென்றும் சில புகார்கள் எட்டுகின்றன!

இதை நான் வரவேற்கிறேன்! ஏன் தெரியுமா? இக்காலத்திலேதான் தர்மமெல்லாம் வெகுவாக மறந்துவிட்டோம். தேர்தல் என்ருல் நம்மிற்சிலர் எவ்வளவு பணமும் செலவழிக்கத் தயார். இந்தச் சாக்கிலாவது, “காடையர்” என்று சொல்லப்படும் ஏழைகளுக்குப் பணம் கிடைக்கட்டுமே!

10 வாரங்களில் பொதுத் தேர்தல் வருகிறதல்லவா? அதில் இலட்சக் கணக்கான

(9ஆம் பக்கம் பார்க்க)

## இப்படியும் சொன்னுர்கள்

கொம்யூனிஸ்டுகளைவிட, கொம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் மிக அபாயகரமானவர்கள். இவர்களின் 'மதில்மேல் பூனை' போன்ற நிலைமை ஆபத்தை விளைவிக்கும். இவர்கள் பற்றி நான் மக்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன்.

—ஜனப் சி. ஏ. எஸ். மரிக்கார்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எனது கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைக்காவிடில், நான் பார்லிமெண்டிலிருந்து ராஜினமா செய்துவிடுவேன்.

—ஸி. சுந்தரலிங்கம்

இந்த நாட்டுமக்கள் சட்டம், ஒழுங்கு, அமைதி இவற்றையும், நேர்மையான கொள்கையையுமே விரும்புகிருர்கள் என்பதைக் கொழும்பு நகரசபைத் தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. எனது கட்சியான இலங்கை ஜனநாயக கட்சி விரும்புவதும் அதையேதான்.

—பிரதமர் தகநாயக்கா

அரசியற் கட்சிகளை இலங்கை வானெலியில் பிரசாரம் செய்ய அனுமதிப்பது மடமைத்தனமாகும். இவற்றில் சில கட்சிகள் காளான் கட்சிகள்; தம்மைத் தாமே பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள்.

—எம். எம். முஸ்தாபா

முதலாளிமார்கள், 'துப்பாய்' நாகரிகம் படைத்தவர்கள், கத்தோலிக்கர், சோஷலிசத்தின் எதிரிகள், கறுப்புச் சந்தைக்காரர், கொள்ளை லாபக்காரர், விபசாரிகள் இவர்கள் எல்லோருமேதான் யு. என். பி யின் வெற்றிக்கு வழிகோலியவர்கள்.

—பிலிப் குணவர்த்தன

மனித இனத்தில் சமயவாதிகள் என்ற ஒரு பகுதியினர் இருக்கலாம். ஆனல், நான் அவர்களில் ஒருவனல்ல.

—ஜவஹர்லால் நேரு

அமெரிக்காவில், ஒரு விருந்தாளியை "நியுயோர்க் அல்லது சிக்காகோவுக்குச் சென்றீர்களா?" என்று கேட்போம். இங்கிலாந்தில், "இங்கு தங்கியிருப்பது உங்களுக்கு உல்லாசமாக இருக்கிறதா?" என்று கேட்பார்கள். பிரான்சில் "உங்களிடம் எவ்வளவு பணம் உண்டு?" என்று கேட்பார்கள். அவிஸ்திரேலியாவிலோ "நாசமாய்ப்போன எங்கள் 'பீர்' உங்களுக்குப் பிடித்ததா? அப்படிப் பிடிக்காவிடில், ஏன் உங்களுக்குப் பிடிக்காமலிருக்கிறது" என்று கேட்கிருர்கள்.

—அமெரிக்க நடிகர் ஹெபெற் மிச்சம்

தொழிலாளர் வேலைநீக்கம் செய்யப்பட்டால், அவர்களுக்கு உதவியளிக்கத் தொழில் மத்தியஸ்த மன்றமும், ஊழியர் சேமலாபநிதியும் இருக்கின்றன. ஆனல், மந்திரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டால், அவர்களுக்கு ஒருவருடைய உதவியும் கிடைப்பதில்லை.

—ரி. பி. இலங்கரத்தின

## தேவசுதன் ஜயந்தி

— அம்பி —

மன்னுயிர்கள் மாண்புடனே வாழ்வதற்கும்
மானிலத்தோர் புது ஒளியைப் பெறுவதற்கும்
என்னுயிரே எவ்வுயிரும் என்றுணர்ந்து
ஏத்திநிதம் அன் பகிம்சை வளர்ப்பதற்கும்
உன்னதத்தில் இருக்கின்ற தேவன்நாமம்
உலகத்தில் பெருமகிமை பெறுவதற்கும்
தன்னுயிரைச் சிலுவையிலே தியாகஞ்செய்து
தாரணியில் வாழுகிற யேசு, போற்றி!

* * *

கொட்டிலிலே பிறந்தாலும் வாழ்நாளெல்லாம்
கோடியின்னல் பட்டுமனம் வருந்தினுலும்
எட்டியுதை என்றுமிவன் ஏழையென்று
ஏளனஞ் செய் துலகத்தோர் தூற்றினுலும்
இரட்சகரங் கவதரிப்பார்! வாழ்வார்! எங்கள்
இன்பதுன்பம் எல்லாமே அவர்தான்! ஏக்கம்
விட்டொழிமின்! விண்ணிலொரு ஒளியைப்பார்
வீடெல்லாம் தேவசுதன் ஜயந்திபோற்றும்!



அனைவருக்கும்
எமது கிறிஸ்மஸ்
வாழ்த்துக்கள்

# அடுத்த ஏப்ரல் மாதம் பாரிஸில் உச்சி மாநாடு?

## பெப்ரவரியில் பர்மா பொதுத் தேர்தல்

கடந்த திங்கட்கிழமை பாரிஸ் நகரத்தில் அமெரிக்க ஜனதிபதி ஐஸனேவர், பிரிட்டிஷ் பிரதம மந்தரி ஹரல்ட் மக்மிலன், மேற்கு ஜேர்மன் பிரதமர் டக்டர் கொன்ராட் அடினேவர், பிரெஞ்சு ஜனதிபதி ஜெனரல் டீ' கோல் ஆகியோர் தமது மாநாட்டை முடித்தனர். டக்டர் அடினேவர் நீங்கலாக ஏனைய மூவரும், ருஷியப் பிரதமர் நிக்கிற்ரு குருஷேவுக்கு 1960 ஏப்ரல் 27 இல் பாரிஸ் நகரில் நடைபெறவிருக்கும் நான்கு வல்லரசுகள் (ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ருஷியா) மாநாட்டிற்கு வருமாறு அழைப்பு அனுப்பியிருக்கின்றனர். இப்படியான பல மாநாடுகள் தொடர்ந்து தத்தம் நாடுகளில் நடைபெறவேண்டும் என்றும் அவர்கள் யோசனை கூறியிருக்கிருர்கள். அவர்களுடைய அழைப்புக் கடிதங்களில் பரிசீலனைக்குரிய விஷயங்கள் குறிப்பிடப்படாதிருந்தாலும், படைக்குறைப்பு, ஜெர்மனியும் அதனுடன் தொடர்பான பெர்லின் நகர்ச் சிக்கலும், கிழக்கு—மேற்கு உறவுகள், பின்தங்கிய நாடுகளுக்கு உதவி முதலியன ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏப்ரல் மாதத்தில் இம்மாநாடு நடைபெறுவதற்கு முன்னதாக மார்ச் மாதத்தில் ருஷியப் பிரதமர் பிரான்சுக்கு விஜயம் செய்வதற்கும் ஏப்ரல் மாதத்தில் பிரெஞ்சு அதிபர் பிரிட்டனுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் விஜயம் செய்வதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## இதுதான டட்லியின் ஜனநாயகம்?

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நகர சபையில் 14 சமசமாஜிகளும், 14 யு. என். பி. யினரும், 3 கொம்யூனிஸ்டுகளும், 6 சுயேச்சையாளர்களுமே இருந்திருப்பார்கள். இது என்னுடைய மதிப்பு. ஆனல் தேர்தலில் பலவித அலங்கோலமும் ஊழலும் நிறைந்திருந்ததற்கு நான் என்ன செய்வது?' என்று என். எம். பிரலாபித்துக் கொண்டார்.

## கிறிஸ்மஸ் புதுவருடம்

[8ஆம் பக்கத் தொடர்ச்சி]

பணம் எப்படியும் கைமாறும். 'பணத்தை வாங்கிக்கொண்டு நமக்குப் பிடித்தமானவர்களுக்கு ரகசியமாக ஒரு வாக்களித்தால் போச்சு' என்கிருர் ஒரு நண்பர்! இது எப்படியாயினும் அடிக்கடி தேர்தல் வருவதையே நாம் விரும்புகிறோம். அச்சமயம், நம்மதிப்புத் திடீரென உயர்ந்து, பல பெரிய மனிதர்களும் நம்மைத் தேடி வருகிருர்களல்லவா?

—ஐயாறன்

## உலக நிலை

கடந்த திங்கட்கிழமை பாரிஸில் இருந்து புறப்பட்ட ஜனதிபதி ஐசனேவர் ஸ்பெயினுக்கும் மொரெருக்கோவுக்கும் விஜயம்செய்துவிட்டுத் தாயகம் திரும்பியுள்ளார். ஏறத்தாழ மூன்று வாரங்களாக 11 நாடுகளுக்கு விஜயம்செய்து, சுமார் 22,000 மைல் சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்திருக்கிருர்.

ருஷியப் பிரதமர் மேற்கு வல்லரசுகளின் அழைப்பைப் பரிசீலனை செய்துகொண்டிருப்பதாக மொஸ்கோ வானெலி அறிவித்திருக்கிறது.

### இந்தோனேசியாவில் நெருக்கடி நிலைமை

இந்தோனேசியாவில் 1957-ல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலைமையை ஜனதிபதி சுகர்னே மேலும் நீடித்துவைத்திருக்கிருர். இராணுவச் சட்டங்களை அமுல் நடாத்தும் பொறுப்பையும் ஏற்றிருக்கிருர். சிறிய அரசியற் கட்சிகள்மீது தடையுத்தரவு விதித்திருக்கிருர்.

### பர்மாவில் பொதுத்தேர்தல்

பர்மாவில் பொதுத்தேர்தல் பெப்ரவரி 6 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் நெருக்கடி ஏற்பட்டதும், நாட்டில் உருவாகிய அமைதியற்ற நிலை காரணமாகப் பிரதம தளபதி ஜெனரல் நீவின் 1958 ஒக்டோபரில் பதவியேற்ருர். நிலைமை சீரடையும்வரை பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

### பெல்ஜியன் கொங்கோ

பெல்ஜியன் கொங்கோவில் உள்ள நிலைமைகளை நேரடியாக ஆராய்வதற்கு பெல்ஜிய மன்னர் படோயின் அங்கு விஜயம் செய்திருக்கிருர்.

## இடதுசாரிப் பிளவுகள்

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யிடவில்லை. மொழிப் பிரச்சினையே இதற்குக் குறுக்கே நிற்கிறது. மொழி விஷயத்தில் திரு. டட்லி தேசிய ஒற்றுமைக்காக, தமது தந்தையார் பின்பற்றிய கொள்கையைத் தழுவி, பின்னர் அதிக தாராள மனப்பான்மை காட்டக் கூடுமென்றும், தேர்தலுக்கு முன் இது பற்றி ஏதும் கூறினல், சிங்களப் பகுதிகளில் தங்கள் கட்சிக்குப் பாதகம் ஏற்படுமென்று தயங்குவதாயும் சொல்லப்படுகின்றது.

இதற்கிடையே "உங்கள் எதிர்காலத்தை டட்லியிடமே ஒப்படையுங்கள்" என்ற, 'போஸ்டர்கள்' நகரெங்கும் காணப்படுகின்றன.

## ஜனநாயக காங்கிரஸ் போட்டியிடும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரசப் பேச்சுகள் நடந்து வந்த தென்ருலும் இச்சமயம் சமரசப் பேச்சுகள் வெற்றி பெற்று இரு ஸ்தாபனங்களும் இணைந்ததற்கு, பொதுத் தேர்தல் நெருங்கி வந்தது முக்கியகாரணமாகும்.

இரு ஸ்தாபனங்களும் இணைந்ததால், இனி தோட்டங்களில் கட்சிச் சண்டைகள் குறையுமென்றும், தொழிலாளர் அதிக நிம்மதியாக வாழ முடியுமென்றும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

## திருடிய போர்வையே ஏழையின் பரிசாகியது!

பம்பாய் மாகாண முதல் மாஜிஸ்ரேட் முன்னிலையில் பம்பாய் பொலிசாரால், ஒரு இராணுவ போர்வையைத்திருடியதாகக் கைது செய்யப்பட்டுக்கொண்டுவரப்பட்ட ஒரு பிச்சைக்காரி, அந்தப் போர்வையைத் தனது உடைமையாகப் பெற்று நீதிமன்றத்திலிருந்து வெளியேறினள்.

இந்தப் பிச்சைக்காரி விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டும் என்ற பொலிசாரின் வேண்டுகோளை நிராகரித்து, மாகாண முதல் நீதிபதி திரு. பி. முக்கர்ஜி, அந்தப் பிச்சைக்காரியை விடுதலை செய்து, அவள் பனியில் குளிரால் வருந்தாமல் இருக்க அந்தப் போர்வையையும் அவளிடம் திருப்பிக் கொடுக்குமாறு கட்டளையிட்டார்.

அந்தப் போர்வையை வாங்கிக்கொண்டு வெளியே வந்த அந்தப் பெண், 'இதனல்தான் இவ்வளவு தொந்தரவும்' என அதனை வீசி எறிந்தாள். அது உடனே நீதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது. அவர் அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு, அப்போர்வை அவள் உடைமையென்றும், அதனைப் பெற்றுச் செல்லும்படியும் வற்புறுத்தி வேண்டிக்கொள்ளவே, ஏஅற் பிச்சைக்காரி அதனை க்ப்று கொண்டாள்.

## அமெரிக்க இரசாயனத் தொழிலின் சாதனை

அமெரிக்க இரசாயன தொழிற்சாலைகள் இவ்வருடம் 24,000 கோடி டாலர் பெறுமதியான மருந்துவகைகளை விற்றுள்ளதாக இரசாயன பொருள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ஜெனரல் ஈ. கல் தெரிவித்தார். இரசாயன உற்பத்தியாளர் மகாநாட்டில் பேசுகையில் ஜெனரல் கல் 1957-ம் ஆண்டில் 23,400 கோடி டாலர் பெறுமதியான இரசாயன பொருள்கள் விற்பனையாகிய தெனவும் ஆனல் 1958-ம் ஆண்டுல் 23,200 கோடி டாலர் வரை தான் இரசாயன மருந்து பொருள்கள் விற்பனையாகியது என்றும் குறிப்பிட்டார். இந்த விற்பனை முதல் வருடத்தை பார்க்கிலும் குறைவாக காணப்பட்டதென்ருலும் இவ்வருட விற்பனை இவ்விரண்டு தொகையையும் தாண்டிவிட்டதெனத் தெரிவித்தார்.

## வானெலியில் அரசியற் கட்சிகள்

பொதுத் தேர்தலுக்கு முன் தங்கள் கொள்கைகளைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக 23 அரசியற் கட்சிகளுக்கு வானெலியில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஜனவரி மாதம் 6-ந் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 14-ம் திகதி வரையில் இந்த ஒலிபரப்புகளைக் கேட்கலாம். ஜனவரி 5-ம் திகதியிலிருந்து பிரசித்திபெற்ற "அரசியல் குறிப்புகள்" நின்றுவிடும். ஜனவரி 25-ம் திகதிவரை சனி, ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாட்களில் தினமும் இரண்டு அரசியல் கட்சிகள் தங்கள் கட்சி நோக்கங்களை ஒலிபரப்பலாம். ஜனவரி 25 முதல் மார்ச் 14 வரை கட்சித் தலைவர்கள் தங்கள் கருத்துக்களையும்வெளியிடலாம்.

## டக்டர் ஜே. ஸி. குமரப்பா ஜயந்தி ஜனவரி 4-ஆம் திகதி கொண்டாடப்படும்

டக்டர் ஜே. ஸி. குமரப்பா இந்தியா ஈன்றெடுத்த தவப்புதல்வர்களில் ஒருவராவர். மகாத்மா காந்திஜியின் உண்மைச் சீடரென மதிக்கப்படும் இப்பெரியார், காந்திஜி வாழ்ந்த காலத்திலே அவரது அன்புக்கும், நட்புக்கும், பெருமதிப்புக்கும் பாத்திரமானவராக இருந்தார். இந்தியக் கிராமங்களுக்குப் பல அரிய சேவைகளை ஆற்றி வந்த டக்டர், கிராம மக்களின் உள்ளங்களில் அழியாத இடம் பெற்றுவிட்டவர். அன்பும் பண்பும் நிறைந்த இப்பெரியார், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முழு மூச்சுடன் ஈடுபட்டு உழைத்தவர். 'யங் இந்தியா' என்ற ஆங்கிலப் பத்திரிகையைத் தொடங்கி நடாத்திய டக்டர் குமரப்பாவின் பெயர் பத்திரிகை உலகிலே புதுப் பாதையை உண்டாக்கியது மன்றிக் கிராமப் பொருளாதாரத்தில் மக்களுக்கு நாட்டம் ஏற்படச் செய்தது.

## இந்தியா அவுஸ்திரேலியாவை வென்றது

இந்தியாவுக்கும், அவுஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற இரண்டாவது 'டெஸ்ட்' போட்டியில் இந்தியா வென்றது. இந்தியா அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்தது இதுவே முதல்தடவையாகும்.

# வடபகுதி பார்லிமெண்ட் தொகுதிகள்

## சில புதிய மாற்றங்கள்

பொ. கிருஷ்ணசாமி

புதிய தேர்தல் தொகுதி நிர்ணயக் கொமிஷன் அறிக்கையின்படிக்கு வடமாகாணத்து தேர்தல் தொகுதிகள் பல மாறுதல்களடைந்துள்ளன. குடிசனப் பெருக்கத்துக்கமைய தொகுதிகளும் 13 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. புதிதாக ஏற்படுத்தப்பட்ட தொகுதிகள் உடுவில், நல்லூர், உடுப்பிட்டி, கிளிநொச்சி ஆகியன. இத் தொகுதிகளின் புதிய எல்லைகள், குடிசன விபரம் முதலியன கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### தேர்தல் தொகுதி இல: 74
### ஊர்காவற்றுறை

இத் தொகுதி வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளில் கடலையும், கிழக்கிலே யாழ்ப்பாணக் குடாவையும் எல்லையாகக் கொண்டு, நெடுந்தீவு, மற்றத் தீவுகள் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. புதிய பிரிவினையில் காரைநகர் வட்டுக்கோட்டைத் தொகுதியில் சேருகின்றது.

இத் தொகுதியில் வாழும் 51,200 மக்களில் 51,000 பேர் வாக்காளர். இவர்களிலே 98.8 சத விகித இலங்கைத் தமிழர்களும், 0.6 சத விகிதம் சிங்களர்களும், 0.2 விகிதம் முஸ்லிம்களும் மற்றவர்கள் 0.4 சத விகிதமும் வசிக்கின்றனர். இவர்களில் 78.8 சத விகிதமானோர் இந்துக்கள். 20.3 சத விகிதம் கிறிஸ்தவர்கள்.

### தேர்தல் தொகுதி இல: 75
### வட்டுக்கோட்டை

வடக்கிலே கடலையும் வலிகாமம் மேற்குப்பிரிவின் ஒரு பகுதியையும், கிழக்கிலே வலிகாமம் மேற்கின் எஞ்சிய பாகத்தையும், தெற்கிலும் மேற்கிலும் கடலையும் எல்லையாகக் கொண்டு காரைநகர் கிராம சங்க வட்டாரத்தையும், வட்டுக்கோட்டை, சுளிபுரம் கிராமசங்கம், பண்டத்தரிப்பு கிராமசங்கத்தின் ஒரு பிரிவையும் சங்கானை பட்டினசபையையும் உள்ளடக்கியுள்ளது இத் தொகுதி.

இத் தொகுதியில் வாழும் 60,300 வயது வந்தவர்களில் 60,000 பேர் வாக்காளர்கள். இத் தொகுதியில் 98.6 சத விகிதம் தமிழரும் 0.8 சத விகிதம் சிங்களவர்களும் வாழ்கின்றனர். இவர்களுள் 92.4 சத விகிதமானவர்கள் இந்துக்கள். 6.7 சத விகிதம் கிறிஸ்தவர்கள் வாழுகின்றனர்.

### தேர்தல் தொகுதி இல: 76
### காங்கேசன்துறை

காங்கேசன்துறைத் தொகுதி வடக்கில் கடலையும், கிழக்கில் வலிகாமம் கீழ் பிரிவையும், தெற்கில் வலிகாமம் வடக்கின் எஞ்சிய பிரிவையும், மேற்கில் வலிகாமம் மேற்கின் ஒரு பகுதியையும் கடலையும் எல்லையாகக்கொண்டுள்ளது. பண்டத்தரிப்பு கிராம சங்கத்தின் ஒரு பிரிவும், தெல்லிப்பழை கிராம சங்க வட்டாரமும், மல்லாகம், மயிலிட்டி கிராமசங்கத்தின் சில பகுதிகளும், காங்கேசன்துறை பட்டினசபை வட்டாரமும் இதனுள்ளடங்கியுள்ளன.

இங்கு வாழும் 59,700 பேரில் 59,300 பேர் வாக்காளர். இவர்களில் 98.2 சத விகிதமானோர் இலங்கைத் தமிழர். 1.1 சதவிகிதமானோர் சிங்களர்கள்.

இவர்களில் 83.2 சதவிகிதம் இந்துக்களும், 15.7 சத விகிதமானோர் கிறிஸ்தவர்களுமாவர்.

### தேர்தல் தொகுதி இல: 77
### உடுவில்

இத் தொகுதியின் எல்லைகள் வடக்கில் எஞ்சியுள்ள வலிகாமம் மேற்கும், வலிகாமம் வடக்குப்பகுதியும். கிழக்கில், எஞ்சியுள்ள வலிகாமம் வடக்குப் பிரிவும், வலிகாமம் கிழக்கும், யாழ்ப்பாணப் பிரிவும். தெற்கில் யாழ்ப்பாணப் பிரிவும், மேற்கில் குடாவும் வலிகாமம் மேற்குப் பிரிவின் எஞ்சியுள்ள பகுதிகளும்.

இதனுள் மானிப்பாய் கிராமசங்கம், பண்டத்தரிப்பு கிராமக் குழுவின் ஒரு பிரிவு, பண்டத்தரிப்பு கிராமக் குழுவின் ஒரு பிரிவு, மானிப்பாய் பட்டினசபை வட்டாரம், உடுவில் கிராமசங்க வட்டாரம், மல்லாகம் கிராமசங்க வட்டாரம் ஆகியவை சேருகின்றன. இங்கு வாழும் 57,000 பேர்களில் 57,500 பேர் வாக்காளர். இவர்களில் 98.6 சத விகிதம் தமிழரும்0.6சதவிகிதம் சிங்களவர்களும் வாழுகின்றனர். இவர்களில் 89.4 சத விகிதமானோர் இந்துக்கள், 9.8 சதவிகிதமானோர் கிறிஸ்தவர்கள்.

### தேர்தல் தொகுதி இல. 78
### யாழ்ப்பாணம்

எல்லைகள்: வடக்கில் யாழ்ப்பாணப்பிரிவின் எஞ்சியுள்ள பகுதி. தெற்கிலும், மேற்கிலும் யாழ்ப்பாணக்குடா. கிழக்கில் யாழ்ப்பாணப் பிரிவின் எஞ்சியுள்ள பகுதி.

இங்கு வாழும் 60,200 பேரில் 54,800 பேர் வாக்காளர். இவர்களில் 75 சத விகிதம் தமிழர்களும், 11.0 சத விகிதம் சோனகரும், 4 சதவிகிதம் சிங்களவர்களும் பிற சமூகத்தினர் 10.0 சத விகிதமும் வாழுகின்றனர். சமயப் பிரிவின்படி இவர்களில் 44.0 சத விகிதம் இந்துக்களும், 40.0 சத விகிதம் கிறிஸ்தவர்களும், 12 சத விகிதம் முஸ்லிம்களும், பௌத்தர்கள் 4.0 சத வீதமும் வாழ்கின்றனர்.

### தொகுதி இல. 79
### நல்லூர்

எல்லைகள்: வடக்கில், வலிகாமம் வடக்குப் பிரிவும், வலிகாமம் கிழக்குப் பிரிவும். கிழக்கில், வலிகாமம் கிழக்குப் பிரிவும் குடாவும், தெற்கில் குடாவும் யாழ்ப்பாண மாநகரசபையின் எஞ்சியுள்ள வட்டாரங்களும். மேற்கில், யாழ்ப்பாண மாநகரசபையின் எஞ்சியுள்ள பகுதியும் வலிகாமம் மேற்குப் பிரிவும்.

கொக்குவில் நல்லூர் கிராமசங்கங்களையும், யாழ்ப்பாண மாநகரசபையின் ஒரு பகுதியையும் கொண்டுள்ள இத் தொகுதியில் வாழும் 57,200 பேரில் 56,200 வாக்காளர்கள் உளர். இவர்களில் 97.2 சத விகிதமானோர் இலங்கைத் தமிழரும், 0.8 சத விகிதம் சிங்களவருமாவர். 95.6 சத விகிதம் இந்துக்களும் 3.4 சத விகிதம் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள்.

### தொகுதி இல: 80
### கோப்பாய்

எல்லைகள்: வடக்கில் கடலும், கிழக்கில் வடமராட்சிப் பிரிவும், தெற்கில் தென்மராட்சிப் பிரிவும், யாழ்ப்பாணப் பிரிவும், மேற்கில் யாழ்ப்பாணப் பிரிவும் வலிகாமம் வடக்குப் பிரிவும்.

இதனுள் மல்லாகம், மயிலிட்டி, கிராம சங்கத்தின் பிரிவுகளும், அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய் கிராம சங்கப் பகுதிகள் அடங்குகின்றன. இங்கு 99.1 சத விகிதம் வாழும் தமிழருள் 93.4 சத விகிதம் இந்துக்களும், 6.3% கிறிஸ்தவரும் இருக்கின்றனர். சிங்களவர் 0.3 சத விகிதம் இருக்கின்றனர்,

இங்கு வாழும் 57,300 பேரில் 57,000 வாக்காளர்கள் உளர்.

### தொகுதி இல: 81
### உடுப்பிட்டி

எல்லைகள்: வடக்கில் வடமராட்சியின் எஞ்சிய பாகங்கள். கிழக்கில் வடமராட்சியின் எஞ்சிய பகுதிகள். தெற்கில் தென்மராட்சிப் பிரிவு. மேற்கில் வலிகாமம் கிழக்குப் பிரிவு.

உடுப்பிட்டி, புலோலி கிராமசங்கத்தின் பகுதிகளும், வல்வெட்டித்துறை பட்டினசபையின் ஒரு பிரிவும், கட்டைவேலி கிராம சங்கத்தின் ஒரு பகுதியும், பருத்தித்துறை பட்டின சபையின் ஒரு பகுதியும் இத்தொகுதியில் அடங்குகின்றன. இங்கு வாழும் 53,200 பேரில் 52,800 பேர் வாக்காளர்கள். இவர்களில் 98.3 சத விகிதம் தமிழரும்0.3 சத விகிதம் சிங்களவருமாவர். இவர்களில் 96.7 சதவிகிதம் இந்துக்களும், 3.0 சதவிகிதம் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள்.

### தொகுதி இல: 82
### பருத்தித்துறை

எல்லைகள்: வடக்கிலும் கிழக்கிலும் கடல். தெற்கில் பச்சிலைப்பள்ளியின் பிரிவும், மேற்கில் தென்மராட்சிப் பிரிவும் வடமராட்சியின் எஞ்சியுள்ள பாகங்களும்.

குடத்தனை கிராமசங்கம், உடுப்பிட்டி, கட்டைவேலி, புலோலி கிராமசங்கம் ஆகியவற்றின் பிரிவுகள், வல்வெட்டித்துறை பட்டினசபை, பருத்தித்துறை பட்டினசபைப் பிரிவுகள், செம்பியன்பற்றுக் கிராமசங்கம் ஆகிய பகுதிகள் இதனுள் அடங்குகின்றன.

இங்கு வாழும் 37,700 பேரில் 37,300 வாக்காளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 98.2 சத விகிதம் தமிழர்களும், 0.6 சத விகிதம் சிங்களவருமாவர். 90.0 சத விகிதம் இந்துக்களும், 9.4 சத விகிதம் கிறிஸ்தவர்களும் இருக்கின்றனர்.


[15ஆம் பக்கம் பார்க்க]

நீங்கள் செய்ய விரும்பும் கணக்கற்ற தையல் வேலைகளை

நெக்கி

தையல் மெஷின் செய்துகொடுக்கும்.

NECCHI



உலகத்திலேயே மிகச்சிறப்பு வாய்ந்த தையல் மெஷின். இலங்கையிலுள்ள வீடுகளிலெல்லாம் நெக்கி தான் இடம்பெற்று வருகிறது. ஏனெனில் நெக்கி மூலம் பெண்களின் கனவுகள் நனவாகின்றன.

உங்கள் பல்வேறு தையல்வேலைகளையும் மிகவும் இலகுவாகவும், திறமையுடனும் செய்து விடுகிறது நெக்கி தையல் மெஷின்.

சாதாரண தையல்மெஷினில் வேலை செய்வதனால் ஏற்படும் களைப்போ, சோர்வோ நெக்கி மெஷினை உபயோகிக்கும் பொழுது ஏற்படவே மாட்டாது.

நெக்கி சூப்பர்நோவா ஓட்டமெட்டிக்கா தையல் மெஷின், பலவித வர்ணப் பூவேலைகளையும், லேஸ் வேலைகளையும், பட்டன் துவாரங்களையும் எவ்வித கஷ்டமுமின்றி தைத்துக் கொடுக்கும் திறமை வாய்ந்தது.

நெக்கி நோரா, ஓட்டோமெட்டிக்கா ரூ.825-தொடக்கம்.

நெக்கி எஸ்பெரியா ரூ.375-தொடக்கம்.

நெக்கி மிரெல்லா (மின்சாரத் தாலும் கையினாலும் இயங்குவது) ரூ. 625 தொடக்கம்.

விற்பனையாளர்கள்:

தி நியூ சீத்தா ஸ்டோர்ஸ் (கம்பஹா)


கெந்தலா ஸ்டோர்ஸ் (கெந்தலா)

பி. ஏ. எஸ். டரான்ஸ்போர்ட் லிமிடெட் (ஹோமகம)

தி பயனியர் ஸ்டோர்ஸ் (கண்டி)

5 வருஷ உத்தரவாதத்துடன் கட்டுப்பணத்திற்குக் கிடைக்கும்.

மெஷினின் பாகங்களை எம்மிடமே பெற்றுக் கொள்ளலாம்.



விபரங்களுக்கு:

றிச்சட் பீரீஸ் அன் கோ., லிமிடெட்

மெயின் வீதி, கொழும்பு. போன்: 4753

## புதிய மருமக்கள்

(பெயரும் பதிவு எண்ணும்)

651. சி. அரியரத்தினம்,
33, கண்டி வீதி,
சுண்டிக்குளி;

652. சி. புருசோத்தமர்,
33, கண்டி வீதி,
சுண்டிக்குளி.

653. ஐ. சுப்பிரமணியம்,
25, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

654. எஸ். பாண்டியன்,
இருவந்தம் பொல
தோட்டம்.
கொஸ்லந்தை.

655. க. இராசகுமார்,
21, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

656. க. சண்முகராசா,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.

657. க. தேவமலர்,
ஏழாலை வடக்கு,
அ. மி. பாடசாலையடி,
சுன்னாகம்.

658. செ. யோகராசா,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

659. பெ. ஏர்சுலா,
புகையிரத ஸ்தாபனம்,
யாழ்ப்பாணம்.

660. க. வெள்ளிங்கிரி,
51, வாணப்பட்டரை தெரு,
திருசிராப்பள்ளி—2.

661. எம். தங்கராசா,
மே/பா, வள்ளுவர் நூல்
நிலையம்,
பழைய தோட்டம்,
இதல்கஸ்ஹின்னை.

662. எம். வேம்படி,
கொஸ்லந்தை தோட்டம்,
கொஸ்லந்தை.

663. மு. மீராசாஹீப்,
அங்கும்புரை குரூப்,
அங்கும்புரை.

664. ஏ. சுகுணனந்தன்,
'ஆனந் பவனம்',
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

665. எஸ். நாகலட்சுமி,
107, பலாலி வீதி,
கந்தர்மடம்.

# சிறுவர் பகுதி

## ஜிம்மியின் சுயசரிதை

(புனிதநாயகி — பதிவு எண். 630)

அன்பான பிள்ளைகளே! இப்பூவுலகைவிட்டு நான் நீங்கும் காலம் நெருங்கிவிட்டது. உங்களை விட்டுப் பிரிவதை நினைத்து என்மனம் தத்தளிக்கிறது. நீங்களும் என்மேல் வைத்த அன்பின் நிமித்தம் பரிதவித்துக் கலங்கித் தவிக்கிறீர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

உங்களுக்கு ஆறுதலளிக்கவும், என் ஆன்மாவுக்குச் சாந்தி தேடவும் எண்ணி, என் சீவிய சரிதையை உங்களுக்குக் கூறுகிறேன்.

நான் 1953-ம் ஆண்டு ஆவணி மாதம் பிறந்தேன். என் தாயார் "அல்சேஷன்" சாதியைச் சேர்ந்தவர். ஆகவே, என் உயரத்தையும் அழகையும் நான் கூறவேண்டுமோ? என் தாயார் என்னைப்பற்றி அதிக பெருமை கொண்டவள். என்னைச் சீராட்டிப் பாலூட்டி வளர்த்தாள். எனது பெயர் 'ஜிம்மி'. எனது தாயார் பெயர் 'வில்லி'.

என் அழகைக்கண்ட எசமானராகிய உங்கள் தகப்பனர் என்னை அதிக பணம் கொடுத்து வாங்கினர். என் அருமைத் தாயாருக்குக் கண்ணீருடன் பிரியாவிடை கூறிப் புறப்பட்டேன். ஒரு பெட்டியில் அடைக்கப்பட்டுப் புகையிரத வண்டியில் ஏற்றப்பட்டேன். நான் யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் இறங்கியதும், உங்கள் தந்தை என்னை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்ருர். அன்றுதொட்டு இன்றுவரையும், என் எசமானராகிய உங்கள் தகப்பனும், எசமாட்டியாகிய உங்கள் தாயாரும், நீங்கள் நால்வரும் என்னை அதிக அன்புடன் வளர்த்து வந்தீர்கள். உங்களுடன் விளையாடிச்சந்தோஷமாக என் காலத்தைக் கழித்தேன். சின்னத்தம்பி என்மேல் அதிக நேசம் வைத்து ஒழுங்காகக் குளிப்பாட்டி உணவூட்டி வந்தார்.

அந்தோ! உங்கள் துரதிர்ஷ்டமோ, என் துரதிர்ஷ்டமோ எனக்கு ஒரு நோய் பிடித்துவிட்டது. எசமாட்டியம்மா தன்னல் கூடியமட்டும் வைத்தியம் செய்து முடியாமற்போகவே, அநேக வைத்தியர்களை அழைத்து முயற்சித்தார். எனக்கோ சுகம் வரவில்லை. இன்றே நாளையோ என்றிருக்கின்றது என் நிலைமை.

ஆகவேதான், உங்களை விட்டுப் பிரியமுன், எனது வாழ்க்கைச் சரிதையை உங்களிடம் கூறிவிட விரும்பினேன். இப்பொழுது கூறிமுடித்தாயிற்று. என் மனம் ஆறுதலாக இருக்கின்றது. நான் இறக்க நேரிட்டால், என்னை அன்புடன் நினைத்துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

## தென்றலும் புயலும்

(ஜெயமணிதேவி ஐயாத்துரை — பதிவு எண். 585)

விடுமுறை நாட்களைக் கழிப்பதற்காக நான் எனது மாமாவின் கிராமத்திற்குச் சென்றேன். அங்கு ஜயந்தி என் உயிர்த் தோழியாளுள். காலையும், மாலையும் நாம் இருவரும் இயற்கையன்னையின் எழிலை இரசித்தவண்ணம் உலவிவருவதுவழக்கம். அன்று நான்குமணியளவில் ஜயந்தியுடன் புறப்பட்டேன். இனிய நறுமணத்துடன் கூடிய தென்றல் எங்களை ஜில்லெனத் தழுவிச் செல்ல, மாலைக் கதிரவனின் மங்கிய ஒளியில் மனத்தைப் பறிகொடுத்து வெகுதூரம் சென்றுவிட்டோம்.

திடீரென்று வானம் கறுத்தது. தென்றல் ஓடி ஒளித்தது. உடலைச் சில்லிடும் குளிர் காற்று வீசியது. கண்ணைப் பறிக்கும் மின்னலுடன் வானமே பொறிந்தாற்போன்று இடி முழங்கியது. நான் ஜயந்தியின் கையை இறுகப் பற்றிய வண்ணம் ஒரு பிரம்மாண்டமான ஆலமரத்தடியில் ஓடிச் சென்று மரத்துடன் ஒண்டி நின்றேன். வாயுதேவனின் திருவிளையாடல் அதிகரித்தது; கொப்புகள் முறிந்து விழுந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்தன. விருட்சங்கள் பேயாட்டம் ஆடின. எங்கும் ஒரே இருள். நாங்கள் கிலியினல் நடுங்கியவாறு செய்வதறியாது திகைத்துநின்ருேம். புயலுடன் மழையும் சேர்ந்து 'சோ'வெனக் கொட்டத் தொடங்கியது. மரத்தினடியில் நிற்பது ஆபத்து என நாங்கள் உணர்ந்து, சில அடி தூரத்தில் இருந்த பாழ் மண்டபத்தை நோக்கி இருளில் தடுமாறியபடியே சென்ருேம். ஜன சஞ்சாரமற்ற அப் பகுதியில் நரிகளின் ஊளைச் சத்தம் எங்கள் பயத்தை அதிகரிக்கச்செய்தது.

திடீரென ஒரு மின்னல் வெட்டியது. அதைத் தொடர்ந்து ஜயந்தி, "ஐயோ! பேய்! பேய்!" என்றலறிஞள். உடனே எங்கள் மீது சிறிது தூரத்திலிருந்து "டோச்" ஒளி வீசியது. எனக்கோ பேய்கள்மீது நம்பிக்கை யில்லை. இருந்தாலும் அந்தப் பயங்கர இருளினல் அச்சமுற்றிருந்த எனது உள்ளம் மேலும் திகிலடைய, "யாரது...?" என்று பலமாகக் கத்தினேன். அதைத் தொடர்ந்து "ஜயந்தி! வசந்தி! நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்? நல்ல காலம் ஒரு ஆபத்துமில்லாமல் தப்பிவிட்டீர்கள். அதுவே போதும்!" என்றவாறு எனது மாமா எங்களிடம் வந்தார். பின்பு சிறிது நேரத்தில் புயல் அடங்கி மழையும் தூறலுடன் நின்றது. நாங்கள் இப் பயங்கர சம்பவத்தை எண்ணியபடியே எமது இல்லத்திற்குச் சென்ருேம்.

செல்லும் வழியில், எமது கண்ணுக்கும், கருத்துக்கும் இனிய விருந்தான இயற்கையன்னையின் எழில் நிறை காட்சிகளையும், உலகை அழித்து ஊழிப் பிரதேசமாக்கும் இயற்கையன்னையின் கோர தாண்டவத்தையும் ஒருங்கே படைத்த இறைவனின் திருவிளையாடலை நினைத்து 'அழுவதா? சிரிப்பதா?' என வியந்தேன்.

அருமையான குழந்தைகளே,

அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். கிறிஸ்த மருமக்கள் கிறிஸ்மஸ் விழாவை நேற்றுக் கொண்டாடினுர்கள். அன்றுதான் கிறிஸ்து பெருமான் உலகிலே பிறந்தார். பாவிகளை மீட்டார். குழந்தைகள் மீது அவர் அன்பு மிகுந்தவர். நாமும் எல்லா உயிர்கள்மீதும் அன்பாக இருக்க வேண்டும்.

சின்னமாமா

## கிறிஸ்மஸ் தாத்தா

இவ்வாரம், கிறிஸ்மஸ் தாத்தா எல்லாக் கிறிஸ்தவ இல்லங்களிலும் தமது மலர்ந்த முகத்துடன் தோன்றியிருப்பார். அவருடைய வருகையைக் குழந்தைகள் ஆவலுடன் ஒவ்வொரு ஆண்டும் எதிர்பார்ப்பது வழக்கமாகிவிட்டது. அவர் வரும் போது வெறுங்கையுடனு வருவார்? பலவிதமான பரிசுகளையும், விளையாட்டுப்பொம்மைகளையும் கையுடன் கொண்டு வந்துவிடுவார். தாத்தாவின் அன்பு முகம் கண்டதும் சிறுவரும், சிறுமியரும் அகமும், முகமும் மலர்வர். பல நூறு வருடங்களாக, உலகின் பல பாகங்களிலும் உள்ள சிறுரை மகிழ்விக்கும் இந்தத் தாத்தாவுக்கு வயது எத்தனை என்பதைக் கண்டு பிடிப்பது அவ்வளவு சுலபமான காரியமாகவிருக்காது. கிறிஸ்மஸ் தாத்தாவுக்கு வயதே இல்லை என்றுகூடச் சொல்லி விடலாம். கிறிஸ்மஸ் தினம் இருக்கும் வரைக்கும் அவரும் இருந்து வருவார்!

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்கு வெளியாகும் விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 2-1-60க்கு முன்னர் சின்னமாமா, 'ஈழநாடு சிறுவர்பகுதி', தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(26-12-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.............................................

விலாசம்.........................................

..............................

..............................

கையொப்பம்


பெற்ருர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது..........

இங்கே வெட்டவும்

## உண்மைக் கதைகள்: ஹென்ரி மோற்றன் ஸ்டான்லி V





**ஸ்டான்லியின் சேவை:** ஆபிரிக்காவையும், அதன் பல்வேறு செல்வங்களையும் உலகத்தின் கவனத்திற்கு ஈர்த்தவர் ஸ்டான்லியேயாகும். மேலேயுள்ள படம், ஆபிரிக்காவில் அவர் டக்டர் லிவிங்ஸ்டனைத் தேடுகையிலும், பின்னர் 1874, 1887 ஆம் ஆண்டுகளில் ஆராய்ச்சிப் பிரயாணங்களிற் சென்றபோதும், அவர் தொடர்ந்த வழிகளைக் காட்டுகின்றது.

**திருமணம்:** 1890-ஆம் ஆண்டு, ஸ்டான்லி, டொரதி றென்ஞன்ற் என்பவரை மணம் செய்து கொண்டார். காதல் மணம் வீசாத நாடோடி வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த ஸ்டான்லிக்கு, அவரது மனைவியின் அன்பும், ஆதரவும் மிக்க ஆறுதலை அளித்தன. சுவீகார புத்திரன் ஒருவன் குடும்பத்துக்கு வந்து சேர்ந்ததும், ஸ்டான்லி தன் குடும்பத்துடனேயே லயித்துவிட்டார்.

**முடிவு:** ஸ்டான்லியின் கடைசி வருடங்கள் வருத்தமானவை. அவரது உடல்நிலை மோசமான நிலையை அடைந்தது. அவருடைய மனைவியின் மென்மையான பரிகாரமே, வாழ்க்கையைச் சகிக்குமளவுக்கு அவருக்கு ஆறுதலளித்தது. ஈற்றில், 1904-ஆம் ஆண்டில், மே 10-ஆம் திகதியன்று ஸ்டான்லி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

(முற்றும்)

ஊழியர் சேமநிதி : 2

# வேலைக்கு அமர்த்துவோர் பொறுப்பும் தொழிலாளியின் கடமைகளும்

— செ. தனபாலசிங்கம் —

ஆதரிக்கப்படும் தொழில்கள் ஊழியர் சேமநிதியிற் சேர்க்கப்படும் திகதியை இலங்கை அரசாங்க கசெற் வாயிலாகவும், புதினப் பத்திரிகைகள் வாயிலாகவும் தொழில்மந்திரி காலத்துக்குக் காலம் குறிப்பிடுவார். அங்ஙனம் குறிக்கப்பட்ட பின்னர் தொழில் தாபனங்கள் தங்களிடம் இருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, வேலையின் வகுப்பு, தங்களிடம் ஏற்கெனவே ஊழியர் சேமநிதி இருந்தால் அதன் விபரம் போன்ற இன்னோரன்ன தகவல்களைத் தொழில் அதிபருக்குத் தெரிவிக்கவேண்டும். இத்தகவல்கள் தொழில் அதிபருக்குக் கிடைத்ததும் குறிக்கப்பட்ட தாபனம் பதியப்பட்டு அவர்களுக்கெனப் பதிவு இலக்கமும் கொடுக்கப்படும். தொழில் அதிபருடனும் மத்திய வங்கியுடனும் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளும் போதெல்லாம் இப்பதிவு இலக்கம் உபயோகிக்கப்பட வேண்டும். தொழிற் தாபனம் பதியப்பட்டதன்மேல் தொழிலாளியின் பத்திரமும் (Form A), அங்கத்துவப் பத்திரமும் (Form B) நிரப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் வெவ்வேருகத் தனித்தனியே ஒவ்வொரு பத்திரம் நிரப்பப்பட்டு அவர்களின் பெருவிரல் அடையாளங்களும் பெறப்படவேண்டும். பணம் திருப்பி எடுப்பதற்கு உதவியாக இருக்கும் இவ்விரண்டு பத்திரங்களும் வெகு அவதானமாக நிரப்பப்படல் வேண்டும். முதல்மாதம் முடிந்து 30 நாட்களுக்குள் 'C' பத்திரத்தில் வேண்டப் பட்டனவாகிய பெயர், தொழிலின் விபரம், வயது, படிச்சம்பளம், ஊழியரின் நான்குவீத உதவுதொகைகள், வேலைக்கமர்த்துபவரின் ஆறுவீத உதவுதொகைகள் என்பன போன்றவற்றை நிரப்பி அனுப்பவேண்டும். 'C' பத்திரம் மூன்று பிரதிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஒரு பிரதியை வேலைக்கமர்த்தியவர் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனைய இரண்டிலொன்று தொழிற்கந்தோருக்கும், மற்றது மத்திய வங்கிக்கு உதவு தொகைகளுடன் சேர்த்தும் அனுப்பப்பட வேண்டும்.

## புதிய பதிவு எண்

ஒரு தொழிலாளி வேலையிலிருந்தும் விலகி இன்னேரிடத்துக்குச் செல்லுங்கால் புதிதாக வேலைக்கமர்த்தியவரிடம் ஏற்கெனவே இருக்கும் தொழிலாளிகளின் பெயர்களின் அடியிலேயே அத்தொழிலாளியின் பெயர் எழுதப்படும். அவருக்குப் புதியதொரு பதிவு எண் வழங்கப்படும். ஊழியரின் அங்கத்துவப் பத்திரம் வேலைக்கமர்த்தியவரிடமே இருக்கும். தொழிலாளி வேலைமாறிச் செல்லும்போது வேலைக்கமர்த்தியவரிடமிருந்து அதனைப் பெற்று, தன்னைப் புதிதாக வேலைக்கு அமர்த்தியவரிடம் கொடுத்துவிடவேண்டும். வேலைமாறிச் சென்றவரின் பழைய நிதியுடன் இனிமேல் செலுத்தப்படும் உதவுதொகைகளை இணைப்பதற்கான வழிவகைகளை மத்திய வங்கியும் ஊழியர் சேமநிதிக் கந்தோரும் கையாளும். எனவே, அங்ஙனம் ஊழியர் ஓரிடத்திலிருந்து இன்னேரிடத்துக்கு வேலை மாறிச்செல்லும் போதெல்லாம் அம்மாற்றத்தை உடனுக்குடன் மத்திய வங்கிக்கும் ஊழியர் சேமநிதிக் கந்தோருக்கும் அறிவித்துவிடவேண்டும்.

## உரித்தானவர் யார்?

சேவையில் இருக்கும்போதே ஒருவர் இறந்துவிட்டால் பணம் யாருக்குச் சேரவேண்டும் என்பதற்குப் பத்திரம் H நிரப்பப்படவேண்டும். H பத்திரத்தில் குறிப்பிட்டவரே பணத்துக்கு உரித்தாளராவர். ஒருவர் பலரைப் பணத்துக்கு உரித்துடையவராக நியமிக்கலாம். அங்ஙனம் பலர் நியமிக்கப்பட்டால் பணம் எந்த விகிதத்தில் அவரவர்களுக்குச் சேரவேண்டும் என்பதையும் ஆங்கு குறிப்பிடவேண்டும். விவாகமாகாத ஒருவர் தான் விரும்பிய எவரையாவது பணத்துக்கு உரிமையாளராக நியமிக்கலாம். ஆனல், விவாகமாகியவுடன் அந்நியமனம் மாற்றியமைக்கப்படவேண்டிய தொன்ருகும். விவாகமாகியவர்கள் தம் மனைவியையும் (பெண்ணுக இருந்தால் கணவன்) பிள்ளைகளையுமே பணத்துக்கு உரிமையாளராக நியமிக்கலாம்.

ஒருமாதத்துக்குரிய பணம் அடுத்த மாதம் முடிவதற்கு முன்பாகவே செலுத்தப்படல் வேண்டும். அங்ஙனம்செலுத்தத் தவறியதற்குத் தகுந்த காரணம் காட்டாவிடத்து அம்மாதத்துக்குரிய உதவுதொகையில் பத்துவீதம் அதிகப் பணமாக (Surcharge) அறவிடப்படும். இதிலிருந்து வேலைக்கு அமர்த்துபவர் இயன்றமட்டும் பணத்தைக் குறிப்பிட்ட காலத்துக்குள் அனுப்பிவிட வேண்டியதன் அவசியம் புலனுகின்றது. சுருங்கக் கூறின் பின்வரும் கடமைகள் ஊழியர்களையும் வேலைக்கு அமர்த்துவோரையும் சார்ந்துள்ளன :—

## நான்கு கடமைகள் :—

1. ஊழியரின் A பத்திரமும் அங்கத்துவப் பத்திரம் Bயும் உதவு தொகைகளைத் திருப்பி எடுக்குங்கால் அத்தியாவசியம் வேண்டப்படுவனவாதலின் அவை மிகமிக அவதானமாக நிரப்பப்படவேண்டும்.
2. C பத்திரத்தைப் பிழையற நிரப்பி, மாதந்தோறும் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்துடன் அனுப்பிவிட வேண்டும்.
3. ஒரு ஊழியர் வேலையில் இருந்து விலகியவுடன் தொழில் அதிபருக்கும் மத்திய வங்கிக்கும் உடன் அறிவித்துவிட வேண்டும். புதிதாக வேலைக்கமர்ந்த இடத்தையும் அறிவித்துவிடவேண்டும்.
4. புதிதாக ஒரு தொழிலாளியை வேலைக்கு அமர்த்தும்போது அவர்முன்பு எப்போதாவது ஊழியர் சேமநிதியில் அங்கத்தவராக இருந்து பணம் செலுத்தியிருக்கின்ருரா என்பதை வேலைக்கு அமர்த்துபவர் ஆராய்ந்தறிய வேண்டும்.

## நலன்களை அளித்தல்

ஆண்களாயின் 55 வயது நிரம்பியபின்னும், பெண்களாயின் 50 வயது நிரம்பியபின்னும், தொழிலில் அமர்ந்திருக்காவிடில் இந்நிதியிலிருந்து உரிய நலன்களைப் பெற்றுக் கொள்ளலாம். அன்றியும், பின் திரும்பிவரும் நோக்கமின்றி இலங்கையைவிட்டுச் செல்வதாய் இருந்தாலும், விதிப்படியான இளைப்பாறும்காலத்துக்கு முன், நிலையான முழுத்தளர்ச்சி காரணமாக ஒருவர் தொழில் புரிய இயலாதவர் என வைத்தியர் சான்றுரைத்தாலும், இந்நிதியிலிருந்து உரிய நலன்களைப் பெற்றுக்கொள்ளலாம். பெண் தொழிலாளராயின் திருமணத்தினல் தொழிலில் அமர்ந்திருக்காவிடில் இந்நிதியில் இருந்து உரிய நலன்களைப் பெற்றுக்கொள்ளலாம். இந்நலன்களுக்கு உரிமையுடையோர் 'K' பத்திரத்தில் தமது உரிமைக் கோரிக்கைகளை அனுப்பலாம். ஒருவர் இறந்து போனல் அவரால் நியமிக்கப்பட்டோர், மரண சாதன தத்துவக்காரர் 'L' பத்திரத்தில் உரிமைக்கோரிக்கையை அனுப்புதல் வேண்டும். இறந்தவரைக் கடைசியாக வேலைக்கு அமர்த்தியவர் வாயிலாகவே உரிமைக் கோரிக்கை அனுப்பப்படுதல் வேண்டும். ஊழியர் ஒருவர் உயிரோடிருப்பின் உடலோ உளமோ திறனழிந்தாலொழிய நலன்களுக்கான உரிமைக் கோரிக்கையை அவரே அனுப்புதல்வேண்டும்.

---

# பிரதேச பொருளாதாரம்

[5ஆம் பக்கத் தொடர்ச்சி]

சாயப் பொருள்களின் உற்பத்தியிலேயே தங்கியிருக்கிறது. 1958-ம் ஆண்டில் நைகிரியா நாடு பிரிட்டனுக்கு மட்டும் 38,000,000 அதாவது 51 கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான பருத்திக்கொட்டை, நிலக்கடலை, மற்றும் எண்ணை வகைகளையும் ஏற்றுமதி செய்திருக்கிறது. இவ்விதமான எண்ணை ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் "மாஜரீன்" உற்பத்திக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது. மாஜரீன் உற்பத்தித் தொழிலும் அந்நாடுகளில் இக்காலத்தில் விரிவடைந்து வருகின்றது. நம் பிரதேசத்தில் எண்ணை வகை பொருள்களாக தென்னை, பருத்தி, நிலக்கடலை, எள்ளு, முந்திரி (கஜு) போன்ற பொருள்கள் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகள் போதியளவு உள.

நம் சமுதாயம் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, ருஷியா போன்ற நாடுகளின் பொருளாதார அமைப்பைப் பின்பற்ற எத்தனிப்பதால் எவ்வித பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை. அந்நாடுகளின் பொருளாதாரம் முக்கியமாக, சுரங்கவாயிலாகக் கிடைக்கும் கரி, இரும்பு போன்றவற்றைப் பெறுவதாலும் அவற்றைக் கனரகத் தொழில்கள் மூலம் பதனிடுதலிலும் அமைந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா, ஜெர்மனியில் றூர், பிரிட்டனில் பிளாக்கன்றி, ருஷியாவில் உக்கிறையின் போன்ற கரி, இரும்பு கிடைக்கும் பிரதேசம் நம் பகுதியில் இருப்பதாக இதுவரை எவரும் கூறவில்லை. இந்நாடுகளின் பொருளாதார அமைப்பானது சித்தாந்தங்கள் நீங்கலாக—பெரும்பாலும் ஒரே தன்மையானதாகவே தோன்றுகிறது. இவைதவிர சுவீடின், யப்பான் போன்ற ஒரு சில மூலப்பொருள் உற்பத்தி வசதிகளுடைய நாடுகளின் விருத்திகளை ஆராய்தல் நன்று. அத்துடன் சுவிட்ஸர்லாந்து, இஸ்ரேல், கொங்–கொங் போன்ற மிகச் சொற்ப மூலப் பொருள் உற்பத்தி வசதிகளை உடைய பிரதேசங்களின் பொருளாதார விருத்தியை ஆராய்வதும் எமக்கு உபயோகமானதே.

நமது பிரதேச பொருளாதார விருத்தி வளர்ச்சியுறுவதற்கு விவசாயத் துறையில் கிடைக்கக்கூடிய பொருள்களின் உற்பத்தியும் ஏற்றுமதியும் அதிகரித்தல் அவசியம். இதனேடு விரைவில் விருத்தியடையும் சில கைத்தொழில்களும் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும். எங்கள் நாட்டில் இவை நல்ல முறையில் அமைவதற்கான வசதிகள் உண்டு. ஏற்றுமதிக்கென தெங்குப் பொருள் உற்பத்தியும், இலங்கையின் தேவைக்கான துணி உற்பத்தியைப் பத்துமடங்கு அதிகரிக்க வசதியும் இருக்கின்றன. இவை சரிவர நடாத்தப்படுமேயானல்ஒருசில ஆண்டுகளில் நமது சமுதாயப் பொருளாதாரம் விரிவடைந்து தானுக முன்னேறும் வலிமையை அடைந்து கொள்ளும்.

(தொடரும்)

---

# 'காசி விசிறி வரும் கைலாசத் தீத்தம் வரும்!'

தோட்டத்திலேயே அது ஓர் ஒதுக்கமான இடம் .லயத்திற்கப்பால் அமைந்த அந்த இடத்திற்கு அவனும் அவளும் வருவர். இருவரும் பேசி மகிழ்ந்த பின்னர் தத்தம் இல்லம் நோக்குவர். இப்படி மறைமுகமாகவே அவர்கள் தங்கள் காதல் நாடகத்தை ஒவ்வொரு நாளும் அவ்விடத்திலே அரங்கேற்றி வந்தனர்.

மறைவாக நடந்தேறி வந்த அந்தக் காதல் நாடகம் சில நாட்களுக்குப் பிறகு அம்பலமாகியது. பெரியோர் அறிந்தனர்; சோதிடரை அணுகினர்; சுபமுகூர்த்தம் பார்த்தனர். பின்பு இருவரையும் அழைத்தார்கள். மங்களகரமான அந்நாளில் இருவருக்கும் மணம் முடித்து வைத்தார்கள்.

புதுத் தம்பதிகளான இருவரும் இல்லற வாழ்வு நடாத்த முற்பட்டார்கள். அவர்களின் வாழ்க்கைப் படகு அமைதியாக மிதக்கலாயிற்று.

இவர்கள் ஒற்றுமையைக் காலத் தேவன் பார்த்தான். அவனுக்கு உள்ளூர ஒரே பொருமை. அவனும் அவள் ஆருயிர்க் கணவனின் உயிரைக் குடித்துவிடுகிருன்.

அவளுடைய கணவன் அவளை விட்டே பிரிந்துவிட்டான். இனி, நல்ல வாழ்வாகப் பரிணமித்த அவர்கள் வாழ்வு......?

இறந்த கணவனின் பிரேதத்தைப் பார்க்கிருள் மனைவி. அவள் உள்ளத்தைத் துயரப்

[15ஆம் [பக்கம் பார்க்க]

'ஹென்றி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றி.

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

அருள்வழி

# உலகத்தை மீட்க வந்த உன்னத இரட்சகர்
## கிறிஸ்துநாதர் ஜயந்தி

— ஏ. எம். கே. குமாரசுவாமி —

கிறிஸ்மஸ் கொண்டாட்டம் கிறிஸ்த உலகத்தை மாத்திரமன்று, ஏனைய சமயத்தவர்களையும் தன்னகத்தே ஈர்க்கின்றது. இது நீதிதானே. உலகத்தை மீட்கவந்த உன்னத இரட்சகர் இயேசு கிறிஸ்துவே. எனவேதான் கிறிஸ்மஸ் மகிழ்ச்சியிற்பங்குபெறுவது எல்லோருக்கும் கிடைத்துள்ள சலாக்கியமல்லவா? ஆயின் இந்த கிருர்கள். இச் சத்தியத்தை மறுத்து பலர் இடருறுகிருர்கள். இருநிலைக்குமிடையில் ஒரு நிலை இல்லை. ஏகோவைப்பணிய வேண்டும், அல்லாவிடில் பாகாலைத் தேடவேண்டும். இடைநிலை கிடையாது. இயேசு கிறிஸ்து நம் உள்ளத்தில் ஓராசனம் கேட்டால் நாம் எல்லோரும் இன்புற மாட்டோம். எம்மிற் சிலர் கிலேசப்படுவோம். நாம் படித்தால் நன்மை பயக்கும்.

### பிதாவுக்குச் சமமானவர்

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மனுஷாவதாரத்தைக் குறித்துச் சரியானபடி விசுவாசிப்பதும் நித்திய இரட்சிப்படைவதற்கு அவசியமாயிருக்கிறது.

"நாம் விசுவாசித்து அறிக்கையிடுகிற சரியான விசுவாசமா



சலாக்கியத்திற் பங்கு பெறுவோர் யாவரும் இரட்சகரான இயேசு கிறிஸ்து தாமே கேட்கும் பெரும் கேள்விகளுக்கு மாறுத்தரம் கூறுதல் அத்தியாவசியம்.

### ஜீவனுள்ள தேவன்

'மனுஷ குமாரனுகிய என்னை மக்கள் யாரென்று சொல்லுகிருர்கள்? நீங்கள் என்னை, யாரென்று சொல்லுகிறீர்கள்? இக்கேள்விக்குத் திருப்தியான விடை ஒன்றே ஒன்று.

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து" இதனை விட வேறு விடைக்கு இடமில்லை. இந் நல் விடையை அளித்து அநேகர் உயிரடை பயப்படுவதும் கிலேசப்படுவதும் நோய்க்கு அடையாளமாகும். நோய்க்குச் சிகிச்சை செய்பவரும் இயேசுநாத சுவாமியே. அவன் அருளாலே அவன் தாள் வணங்கவேண்டும். யாரென்று அறியாதவரை வணங்க முடியாத காரியம்.

கிறிஸ்மஸ் தொழுவத்தைப் பயபக்தியோடு அணுகவேண்டுமாயின், நாம் முதல் நம்மைக் கேட்கவேண்டிய கேள்வி இது: "நான் இயேசுவை யார் என்று சொல்கிறேன்?" என்னுடைய முதுமொழியைச் செவ்வனே குறித்து வைத்துவிட்டு, கீழே கூறியுள்ள சந்தத நாசிய முனிவர் கூற்றைச் சிந்தையாய் வது: தேவகுமாரனுகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்து, தேவனும் மனுஷனுமாயிருக்கிருர்.

"உலகம் யாவும் உண்டாவதற்கு முன்னே அவர் ஜெனிக்கப்பட்டு, பிதாவின் தன்மையையுடைய தேவனுகவும் உலகத்தில் பிறந்து தம்முடைய தாயின் தன்மையையுடைய மனுஷனுகவுமிருக்கிருர்.

"குறைவற்ற தேவனுயும் பகுத்தறிவுடைய ஆத்மாவும் நரதேகமும் பொருந்திய குறைவற்ற மனுஷனுயுமிருக்கிருர்.

"தேவ தன்மையின்படி பிதாவுக்குச் சமமானவர். மனுஷ தன்மையின்படி பிதாவுக்குத் தாழ்ந்தவர். அவர் தேவனும் மனுஷனுமாயிருந்தும், இருவருமாயிராமல், கிறிஸ்து என்னும் ஒருவராகவே இருக்கிருர்.

"தேவதன்மை, மனுஷதன்மையாய் மாறினதினுலன்று, தெய்வத்தில் மனுஷ தன்மையைச் சேர்த்துக் கொண்டதினுலேயே ஒருவராயினுர்.

"இரண்டு தன்மையும் கலந்ததினுலேயல்ல; ஒருவராகப் பொருந்தினதினுலே, முற்றும் ஒருவராயிருக்கிருர்.

"பகுத்தறிவுடைய ஆத்மாவும் சரீரமும் பொருந்தி ஒரே மனுஷனுயிருப்பது போல, தேவனும் மனுஷனும் பொருந்தி ஒரே கிறிஸ்துவாயிருக்கிருர்"

### நத்தாரின் பூர்வீகம்

நத்தார் முதன் முதலாகக் கொண்டாடப்பட்ட இடம் பெத்லெஹெம்; பலர் எண்ணுவதுபோல் நசாரெத்தோ அல்லது ஜெரூஸலமோவல்ல.

நாம் நத்தாரை டிசெம்பர் 25 ஆம் திகதியன்று கொண்டாடுகின்ருேம். அது ஏன்? கிறிஸ்துநாதர் பிறந்த தினம் என்றபடியினுலா? இல்லை. கிறிஸ்த ஜயந்தி 25-ந் திகதி கொண்டாடப் படவேண்டும் என்று மதகுருமார் கட்டளையிட்டபடியினுலேயே.

'சான்ரு குளோஸ்' எனப்படும் கிறிஸ்மஸ் தாத்தாவின் பூர்வீகம் உங்களுக்குத் தெரியுமா? நாலாம் நூற்ருண்டில் வாழ்ந்த செயின்ற். நிக்கொலஸ் என்பவரே முதலாவது 'கிறிஸ்மஸ் தாத்தா' ஆவர்.

யாழ்ப்பாணம்

ஜக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ருபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ருபா 616313,00

100 ருபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை

மாதமொன்றுக்கு 1 ருபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ருபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ருபாவுக்குக் குறையாமல் இருக்குமாறுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிருப்பர்

Std. 14.

# கிறிஸ்து காட்டிய அன்பு வழி

— 'மயில்வாகனன்' —

'உன்னைப்போலவே பிறனையும் நேசி' என்று கிறிஸ்துநாதர் கூறிய வார்த்தைகள், இன்றைக்கும் மனித இதயங்களை ஈர்க்கும் சொற்களாகவே இருந்து வருகின்றன. ஒவ்வொரு மனிதனும் தன்னைப் போலவே பிறனையும் நேசிக்க வேண்டும் என்பதே அந்த வார்த்தைகளில் ததும்பிநிற்கும் தத்துவமாகும்.

மனிதன் எல்லா விஷயங்களிலும் 'நான்' என்ற எண்ணத்துடன்தான் செயலாற்றுகிருன். ஆனுல், இந்த 'நான்' என்ற மனப்பான்மையில் எவ்வித குற்றமுமில்லை. நான் என்பது இல்லையேல் பின் 'நான்' எங்கே? யேசுநாதர் 'நான்' என்பதைக் குறைகூருமலே, அதை நல்லவழியில் திருப்பி விடுகிருர். 'உன்னைப்போலவே பிறனையும் நேசி' என்பதன் மூலம் அவர் மனிதனுடைய சுயநலத்தைப் பொது நலனுக்குப் பணியாற்ற முன்வருமாறு உபதேசித்துள்ளார்.

மனிதன் தன்னை விரும்புகிருன். தன் மனைவி மக்களை விரும்புகிருன். தனக்கெனச் சொந்தமாகவுள்ள அத்தனையையும் அவன் விரும்புகிருன். ஆகவேதான், மனிதனின் இந்தக் குணுதிசயத்தை உணர்ந்த யேசுநாதர் அதை அன்புவழியிலே திருப்பிவிட எத்தனித்துள்ளார். 'எவ்வளவுக் கெவ்வளவு நீ உன்னை விரும்புகிருயோ, நேசிக்கிருயோ, அவ்வளவுக்கவ்வளவு மற்றவரையும் நேசி' என்பதுதான் யேசுநாதரின் மணிவாக்கு.

இன்னுமோரிடத்தில், யேசுநாதர் பின்வருமாறு கூறுகிருர்: "உங்கள் எதிரிகளிடம் அன்பு காட்டுங்கள். உங்களை இம்சிப்போருக்காகப் பிரார்த்தியுங்கள். உங்களிடம் அன்பு செலுத்துவோரிடம் மாத்திரம் அன்புகாட்டுவதில் என்ன பயன்? அதைத்தானே வரியிறுப்போரும் கூடச் செய்கிருர்கள்!" ஆம். இவ் வார்த்தைகளிற்தான் எவ்வளவு புனிதம்; எவ்வளவு தெய்வீகத் தன்மை நிலவுகின்றது! எதிரிகளிடம் அன்பு காட்டுவது, நாம் விரும்புவோரிடம் அன்பு செலுத்துவது போன்று சுலபமான காரியமல்ல. எல்லோருமே தாம் விரும்புவோரிடமும், தம்மைச் சேர்ந்தோரிடமும் அன்பு செலுத்தலாம்; ஆனுல், தெய்வீகத்தன்மை பொருந்தியவர்களே தமது எதிரிகளிடமும் அன்புசெலுத்த முடியும். இந்த உண்மையையே கிறிஸ்து தமது வாக்கின்மூலம் உலகுக்கு உணர்த்தியுள்ளார்.

'வலது கன்னத்தில் அறைந்தவனுக்கு, உனது இடது கன்னத்தையும் கொடு' என்று சொல்லியிருக்கிருரல்லவா யேசுநாதர்? இது சாத்தியமா, இக்கொள்கை மனிதவாழ்வின் வெற்றிக்கு வழிகோலுமா என்ற சந்தேகம் எழுவது இயல்பே. உண்மையிலேயே இந்த அறிவுரையை அன்ருட வாழ்க்கையில் கடைப்பிடிப்பது மிக மிகக் கடினம்தான். ஆனுல், அதற்காக யேசுநாதர் கூறியதை நாம் அப்படியே தட்டிக் கழித்துவிட முடியாது.

இந்த அறிவுரையை யேசுநாதர் உலகுக்கு உரைத்தபோது, அவர் அன்பின் சிகரத்தையே எட்டிப் பிடித்துவிட்டார்.

# அரச குடும்பத்தில் கிறிஸ்மஸ் விழா
## குழந்தைகளை மகிழ்விக்கும் கிறிஸ்மஸ் தாத்தா

— சா. பெனடிக்ற் —

கிறிஸ்மஸ் தினம், கிறிஸ்தவர்களின் குதூகல தினம். அரச குடும்பத்திலும் அவ்விதமே. ஆண்டிற்கொருமுறை வரும் இவ்வரிய தினத்தைப் பிரிட்டிஷ் அரசகுடும்பத்தினர் கொண்டாடும் முறை பலவிதத்திலும் சிறப்புடையது.

### கிறிஸ்மஸ் மாளிகை

அரசகுடும்பத்தவரின் உத்தியோகபூர்வ இல்லமான பக்கிங்காம் மாளிகையில் அல்லது கிராமப்புற இல்லமான வின்சர் மாளிகையில் இத்தினம் கொண்டாடப் படுவதில்லை. தமது தந்தையும், பேரனும், பாட்டனும் அனுசரித்த முறைகளையே பின்பற்றி மகாராணி எலிசபெத் சன்டிறிங்காம் மாளிகையில் கிறிஸ்மஸ் வைபவங்களை நடாத்தி வருகின்ருர்.

கிறிஸ்மஸ் தினத்தின் அதிகாலையிலேயே அரசகுடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் சன்டிறிங்காம் மாளிகைக்கு வந்து சேருவர். இம்முறை வந்துசேர்பவர்களுள் மகாராணியின் குடும்பத்தினரும், மகாராணியின் தந்தையின் சகோதரர்களின் குடும்பத்தினர் அனைவரும் அடங்குவர்.

### வைபவங்களின் நிர்வாகி

மகாராணியாரே அரசகுடும்பத்தில் நடைபெறும் சகல வைபவங்களையும் திட்டமிட்டு நிர்வகிப்பவர். அரசகுடும்ப அங்கத்தவரின் தலைவரும் அவரே. வயதில் இளையராயினும், முதியவரும் இளைஞரும் திருப்திகரமாகப் பங்குபெறும் முறையில், திட்டமிட்டு நடாத்துவதில் மகாராணியார் அரசகுடும்பத்தவரின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார்.

### கிறிஸ்மஸ் தாத்தா

மற்றைய குழந்தைகளைப் போலவே அரசகுடும்பத்தைச் சேர்ந்த அத்தனை குழந்தைகளும் கிறிஸ்மஸ் நள்ளிரவில் கிறிஸ்மஸ் தாத்தாவின் வருகையை எதிர்நோக்கியிருப்பர். தாத்தாவும் பல அன்பளிப்புப் பொதிகளுடன் சமூகமளிப்பார். இனிப்புப் பண்டங்களைக் குழந்தைகளுக்கு வழங்கி அவர்கள் குதூகலிக்கும் தருணத்தில் அன்பளிப்புகளை அளிப்பார். சாதாரண குழந்தைகளைப் போலவே அரசகுழந்தைகளும் தாத்தா அளிக்கும் பொதிகளை ஆவலுடன் பிரித்து, தங்கள் வெகுமதிகளைக் கண்டுகளிப்பர்.

### மகாராணிக்கு அன்பளிப்பு

கிறிஸ்மஸ் தினத்தன்று உலகின் பலபாகங்களிலுமிருந்து ஏராளமான அன்பளிப்புப் பொதிகள் மகாராணிக்கு வந்து சேரும். இவற்றில் ராணி எலிசபெத் தமக்கென ஒன்றிரண்டையே தெரிந்துகொள்வர். மீதியனைத்தும் அநாதை விடுதிகள், குருடர் செவிடர் நிலையங்களிலுள்ள சிறுவர் சிறுமிகட்கு மகாராணியின்பேரால் அனுப்பப் படுகின்றன.

### கிறிஸ்மஸ் ஒலிபரப்பு

கிறிஸ்மஸ் தினத்தில் பிரித்தானிய சாம்ராச்சியத்திலுள்ள மக்களுக்காக மகாராணியார் வானெலிமூலம் செய்தியொன்றை ஒலிபரப்புவார். டெலிவிஷன் காட்சியிலும் தோன்றுவார். இவ்வொலிபரப்பு கிறிஸ்மஸ் தினத்தன்று பிற்பகல் 3 மணிக்கு நிகழும். பி. பி. சி. யின் எல்லா ஒலிபரப்பு நிலையங்களும், பிரித்தானியாவிலுள்ள தனிப்பட்ட வானெலி நிலையங்களும் இச்செய்தியை அஞ்சல்செய்யும். செய்தியின் முன்னும் பின்னும் வாத்தியங்களும் பேரிகைகளும் முழங்கும்.

[15ஆம் பக்கம் பார்க்க]

சினிமா உலகம்

# அதிசயப் பெண்

சென்ற வாரம் அதிசயப் பெண்ணைப் பார்த்தேன். டெக்னிக் கலரில் நடனமாடுவதும், முக மூடி அணிந்து, கையில் துப்பாக்கியுடன் தோன்றுவதும் ஒரு பெண்ணை அதிசயப் பெண் ஆக்கி விடுமென்றால், அவள் அதிசயப் பெண் தான்! மற்றும்படி, அவள் சாதாரணப் பெண்ணே.

அதிசயப் பெண்ணாக வருபவர் வைஜயந்திமாலா. வண்ணத்தில் பல வண்ண நடனங்களை ஆடுகிறார். இனிய குரலில் பேசி, இயற்கையாக நடிக்கிறார். பார்க்கவும் அழகாக இருக்கிறார். வேறு என்ன வேண்டும்?

அவருடைய காதலன் நாகேஸ்வரராவ். புதுவிதமான பாகம் இவருக்கு. குறும்பு செய்யவும் தனக்குத் தெரியும் (காதலித்துப் பின் சோகமடைவதை விட) என்பதைக் காட்டி விடுகிறார் இவ்வனுபவ நடிகர். சில இடங்களில் நம்மைச் சிரிக்கவும் வைத்து விடுகிறார். அராபியன் வேஷம் தாங்கி வெளுத்து வாங்கியிருக்கிறார் ஆசாமி!

சாரங்கபாணி நாகேஸ்வரராவின் தந்தையாக வருகிறார். அவர் வராது விட்டிருந்தாலும் நாம் கவலைப்பட்டிருக்க மாட்டோம். அவர் படத்தின் ஆரம்பத்தில் நடாத்தும் சங்கீதக் கச்சேரி நம் மனத்தில் பயத்தை ஏற்படுத்தினாலும், பின் அப்பயம் அனாவசியமென்பதை உணருகின்றோம்.

மனோகர் வில்லன் வேஷத்தில் அருமையாக நடித்துள்ளார். அவர் நவநாகரிக வில்லனைப் படம் பிடித்துக் காட்டி விட்டாரென்றே சொல்லி விடலாம். கொலையைச் செய்து

## பட விமர்சனம்

விட்டுத் திண்டாடுவது, பின் அதை நாகேஸ்வரராவ் மீதே சுமத்தி விடலாம் என்ற யோசனை தோன்றியதும் முகம் மகிழ்ச்சியினால் மாறுவது, கடைசியில் நடைபெறும் நாடகத்தைப் பார்க்கும் பொழுது பயம், ஆத்திரம் ஆகிய உணர்ச்சிகளில் அகப்பட்டு அவதிப்படுவது, இவை மனோகரின் நடிப்புக்கு உயிரூட்டும் அம்சங்கள். வாயிலிருக்கும் 'பைப்' கீழே விழும் வண்ணம், வாயைப் பிளந்து ஆச்சரியத்தைக் காட்டுகிறாரே — அழகான இடம் அது!

ஜாவர் சீதாராமன் வைஜயந்திமாலாவின் தந்தையாக வருகிறார். சிறு பாகமானாலும், சிறப்பாக, தமக்குரிய பாணியில் நடித்திருக்கிறார்.

காரத்தையும், இனிப்பையும் மாறி மாறிச் சாப்பிட்டுப் பழக்கமா உங்களுக்கு? அப்படியானால், அதிசயப் பெண் உங்களுக்குப் பிடிக்கலாம்.

—மின்மினி


## மக்கள் உள்ளங்களை விட்டகலாத நடிகர் எம். ஜீ. ஆர்.

'மந்திரிகளும் மன்னர்களும் தங்கள் பதவிகளைவிட்டகன்றவுடன் மக்களின் உள்ளங்களையும் விட்டகன்றுவிடுகின்றனர். ஆனால் கலைஞர்கள் மக்களின் உள்ளங்களோடு ஒன்றுபட்டவர்கள். அவர்கள் என்றுமே மக்களின் உள்ளங்களைவிட்டு விலக மாட்டார்கள். அதிலும் எம். ஜீ. ஆர். போன்ற உயர் நடிகர்கள் நிச்சயம் மக்களின் மனக்கண்ணாடியை விட்டு அகலவே மாட்டார்கள்.' என்று 6-12-59 மாலை கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில் திரு. சுப. அருணாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இலங்கை எம். ஜீ. ஆர். மன்ற ஆரம்பவிழாவில் சொற்பொழிவாற்றிய டி. எம். பி அவர்கள் கூறினார்கள்.

தோழர் தாமரைச் செல்வனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான விழாவில் தோழர்கள் கிதார், பி. எம். ஜலால், ஆர். ஆர். கே. டேலர், எம். வி. பிசாமி ஆகியோர்களும் சொற்பொழிவாற்றினர். தோழர் கம்பனைதாசன் அவர்கள் மன்றத்தின் நோக்கங்கள் குறித்து விளக்கவுரையாற்றினார். கலைவாணர் என். எஸ். கே. தினத்தையும் சேர்த்தே மன்றத்தினர் கொண்டாடினர்.

## இருபத்தொரு வார்த்தைகளே!

செக்கோஸ்லோவாக்கியாவைச் சேர்ந்த விலாடிமிர் விடி என்பவர் தயாரிக்கும் 'வெண்புறா' என்ற படத்தின் மொத்த வசனம் இருபத்தொரு வார்த்தைகளே! சுருங்கச் சொல்லி விளங்க வைப்பவர் போலும் படத்தின் தயாரிப்பாளர்!



தோளில் கைக் குழந்தையுடன் காட்சியளிக்கும் பண்டரிபாய் எதையோ கூற விரும்புகிறார். அது என்ன என்பதைச் சுதர்ஸனம் பிக்ஸர்ஸாரின் "அவள் யார்" படம் பார்த்தபின்தான் தெரிந்து கொள்ளலாம்.

## காலைக் காட்சிகளுக்கு சென்னை அரசாங்கத்தின் தடை உத்தரவு

சென்னையிலுள்ள சினிமாத் தியேட்டர்களில் காலைக்காட்சிகள் காண்பிக்கக்கூடாதெனச் சென்னை அரசாங்கம் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. பெரியவர்கள் மாத்திரம் பார்க்கக்கூடியது எனத் தணிக்கை செய்யப்பட்ட படங்களை, ஞாயிற்றுக்கிழமை, மற்றும் விடுமுறை தினங்களில் அன்றி மற்றைய நாட்களில் காண்பிக்கக்கூடாதென இவ்வுத்தரவு தியேட்டர் சொந்தக்காரருக்கு வலியுறுத்துகின்றது.

காலைக்காட்சிகள் பள்ளிக்கூட மாணவ, மாணவிகளின் படிப்புக்குக் குந்தகம் விளைக்கின்றன என்பதே அரசாங்கத்தின் கட்சி. பல கல்வி ஸ்தாபனங்களின் தலைவர்கள் அரசாங்கத்துக்கு இது சம்பந்தமாக முறையிட்டதன் பயனாகவே சென்னை அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

## பண்டாரநாயக்கா கொலை வழக்கு

[6ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதிரிகளின் சார்பில் தோன்றுகின்றனர்.

திரு. ரி. கே. கேற்றிஸ், திரு. வி. செயின்ற். ஜேம்ஸ் பெரேரா இருவரும் மூன்றாவது எதிரி சார்பில்.

திரு. ரி. எஸ். பி. சேனநாயக்கா, திரு. பெலிக்ஸ் ஜயரட்னே இருவரும் நான்காவது எதிரி சார்பில்.

திரு. என். சத்தியேந்திரா, திரு. ஏ. மகேசன், திரு. என். சச்சிதானந்தம் ஆகியோர் ஐந்தாவது எதிரிசார்பில்.

திரு. ஸி. எஸ். பார்-குமாரகுலசிங்கி, திரு. ரி. டபிள்யூ. ராஜரத்தினம், திரு. மெரில் பெரெரா, திரு. எல். டி. எஸ். குணசேகரா, திரு. எஸ். ஜி. வற்ஸன் ஆகியோர் ஆறாவது எதிரி சார்பில்.

திரு. ஆனந்தா கருணாத்திலக்கா, திரு. அன்ட்ரூ.டி' சில்வா, திரு. ஆர். என். ஜே. அர்த்தநாயக்க ஆகியோர் ஏழாவது எதிரி சார்பில்.

## வாழ்க்கைப் படகு

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரேம் பிக்ஸர்ஸார், 'வாழ்க்கைப் படகு' என்ற பெயருடைய படமொன்றைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இச் சமூகப் படத்துக்கு ஏ. எம். ராஜா சங்கீதம் அமைக்கின்றார். இப் படத்தின் இயக்குநர் பொறுப்பை பி. ஸ்ரீதர் ஏற்கக்கூடுமெனத் தெரிகிறது.

## பேசும் கண்கள்!

வெங்கடேஸ் புரொடக்ஷன்ஸாரின் முதல் தயாரிப்பின் பெயர் தான் "பேசும் கண்கள்". பாலாஜியும், மாலினியும் பிரதம பாகங்களில் தோன்றி நடிக்கின்றனர். கோல்டன் ஸ்டுடியோவில் படம் வளர்ந்து வருகிறது. கே. வி. எஸ். ரெட்டி படத்தை இயக்குகிறார். ஏ. எம். ராஜா சங்கீத அமைப்புக்குப் பொறுப்பேற்கிறார்.

## 'ஜெமினி'யின் இரும்புத் திரை

ஜெமினி படநிலையத்தார் தயாரித்துவரும் தமிழ் சமூகப் படத்துக்கு 'இரும்புத் திரை' எனப் பெயரிடப் பட்டுள்ளது. தொழிலாளர், தொழிலதிபர்களிடையேயுள்ள இரும்புத் திரையை விலக்கி இப்படம் நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதற்கு உதவுமாம்.

சிவாஜி கணேசன். வைஜயந்திமாலா, சரோஜாதேவி, தங்கவேலு, எஸ். வி. ரெங்கராவ், வசுந்தராதேவி ஆகியோர் நடித்துவரும் 'இரும்புத் திரை' இந்தியில் 'பயங்கரம்' என்ற பெயரில் தயாரிக்கப் பெற்ற மகத்தான படமாகும்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!


சென்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை)

சென்ட்ரல் (பருத்தித்துறை) ஜோதி (திருக்கோணமலை) லிபர்ட்டி (பதுளை)

ஏ. நாகேஸ்வரராவ்
ஜமுனா
ரேலங்கி
நடிக்கும்

கண் நிறைந்த கணவன்

(தமிழ்)



இந்தியாவில் 100 நாள் வெற்றி விழாக் கொண்டாடிய சிறந்தபடம்!

ராணி (யாழ்ப்பாணம்) 3-வது வாரம்!

செஸில் பி. டி' மில்லின்

பத்துக் கற்பனைகள்

கருத்து நிறைந்த கதை! கண்கவர் காட்சிகள்!

பிரம்மாண்டமான தயாரிப்பு!

கட்டணங்கள்: ரூ. 3-25, ரூ. 2-25, ரூ. 1-50, சதம் 80.

விளையாட்டுப் பகுதி

# ஆசிய நாடுகள் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கு இலங்கை வீரர்

ஆசிய நாடுகளின் உதை பந்தாட்டக் கோஷ்டிக்கும், பெருவியன் உதை பந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே 1960இல் நடைபெறவிருக்கும் போட்டியில் கலந்துகொள்ள, இலங்கையின் சார்பில் பீட்டர் ரனசிங்க, ஹாசிம் டீன் ஆகியோர் மணிலாவுக்குச் செல்லலாமெனத் தெரிகிறது.

### அவுஸ்திரேலியா-இந்தியா கிரிக்கெட் பந்தயம்

அவுஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் 'டெஸ்ட்' பந்தயத்தில், அவுஸ்திரேலியா இந்தியாவை ஒரு ஆட்டத்திலும், 127 ஓட்டங்களினாலும் தோற்கடித்தது.

### விம்பில்டன் டெனிஸ் வெற்றிவீரரின் தோல்வி

கடைசியாக நடைபெற்ற விம்பில்டன் டெனிஸ் பந்தயப் போட்டியில் வெற்றிவீரர் பட்டத்தைப் பெற்ற அலெக்ஸ் ஒல்மீடோ என்பவரை, அண்மையில் நடைபெற்ற ஒரு போட்டியில், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த லூயீ ஹோட் தோற்கடித்துள்ளார்.

# வடபகுதியில் பார்லிமெண்ட் தொகுதிகள்

[10ஆம் பக்கத் தொடர்ச்சி]

### தொகுதி இல: 83 சாவகச்சேரி

எல்லைகள்: வடக்கில் வலிகாமம் கிழக்குப் பிரிவும், வடமராட்சிப் பிரிவும். கிழக்கில் வடமராட்சிப் பிரிவும் பச்சிலைப் பளிப் பிரிவும். தெற்கில் குடாவும், மேற்கில் வலிகாமம் கிழக்கும் குடாவும்.

இங்கு வாழும் 52,000 மக்களில் 51,000 பேர் வாக்காளர். இவர்களில் 98.7 சத விகிதமானோர் தமிழர். இந்துக்கள் 95.9 சதவிகிதமும், கிறிஸ்தவர் 3.4 சதவிகிதமும் வாழுகின்றனர்.

### தொகுதி இல: 84 கிளிநொச்சி

எல்லைகள்: வடக்கில் குடாவும், தென்மராட்சிப் பிரிவும் பச்சிலைப்பள்ளியின் எஞ்சியுள்ள பிரிவுகளும் கடலும், கிழக்கில் வவனியா மாவட்டமும் கடலும், தெற்கில் மன்னார் மாவட்டம். மேற்கில் கடல்.

முகமாலை, புலோப்பளை, முள்ளிப்பத்து கிராம சங்க வட்டாரங்கள், கரச்சி, துணுக்காய் கிராம சங்கப் பகுதிகள், பூநகரி, பல்லவராயன் காடு, இரணைதீவு கிராம சங்கப் பகுதிகள் ஆகியவை இத்தொகுதியில் அடங்குகின்றன. இங்கு வாழும் 24,600 பேரில் 23,100 பேர் வாக்காளர். இவர்களில் 85.8 சத விகிதம் தமிழரும், 6.7 சத விகிதம் சிங்களவரும் வாழ்கின்றனர். 80.3 சத விகிதம் இந்துக்கள். 13.0 சத விகிதம் கிறிஸ்தவர், 5.1 சத விகிதம் பௌத்தர்கள்.

### தொகுதி இல: 85 மன்னார்

இப்பகுதியில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

எல்லைகள்: வடக்கில் யாழ்ப்பாண மாவட்டம். கிழக்கில்வவனியா மாவட்டம். தெற்கில் வடமத்திய, வடமேற்கு மாகாணங்கள், மேற்கில் கடல்.

இலுப்பைக் கடவை, பனங்காமம், மேற்கு மூலை, பெருங்காலிப் பற்று, மாந்தை வடக்கு கிராமசங்கம், மாந்தை தெற்கு, மன்னார் கிழக்கு, எருக்கலம்பிட்டி, மன்னார் மேற்கு கிராம சங்க வட்டாரங்கள், மன்னார் பட்டின சபை, நானாட்டான் கிழக்கு, நானாட்டான் மேற்கு, முசலி வடக்கு, முசலி தெற்கு, வங்காலை கிராமசங்க வட்டாரங்கள் ஆகியவை இத்தொகுதியில் இருக்கின்றன.

இங்கு வாழும் 50,800 பேரில் 38,900 பேர் வாக்காளர். இவர்களில் 46 சத விகிதம் தமிழர்களும், 25 சத விகிதம் சோனகரும், சிங்களவர் 5 சத விகிதமும் பிறர் 24.0 சத விகிதமும் வாழுகின்றனர். இவர்களில் இந்துக்கள் 26.0 விகிதமும், கிறிஸ்தவர் 40.0 சத விகிதமும், 31.0 சத விகிதம் முஸ்லிம்களும் இருக்கின்றனர்.

### தொகுதி இல: 86 வவனியா

இத்தொகுதியிலும் மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

எல்லைகள்: வடக்கில் யாழ்ப்பாண மாவட்டமும் கடலும், கிழக்கில் கடல், தெற்கில் கிழக்கு, வடமத்திய மாகாணங்கள், மேற்கில் மன்னார் மாவட்டம்.

இதில், வவனியா பட்டின சபை வட்டாரம், கிழக்கு மூலை வடக்கு, கிழக்கு மூலை தெற்கு, நாட்டுச் செட்டிக்குளம், சின்னச் செட்டிக்குளம் கிழக்கு, சின்னச் செட்டிக்குளம் மேற்கு கிராம சங்க வட்டாரங்கள், சின்னச் செட்டிக்குளம் கிழக்கு, மேற்கு, கிழக்கு மூலை தெற்கு (சிங்களப் பிரிவு) கிராம சங்க வட்டாரங்கள், மேல்பற்று வடக்கு, கிழக்கு, தெற்கு, கருநாவல்பற்று தெற்கு; உடையாவூர் கிராமசங்கம், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, கரிக்காடு மூலை தெற்கு கிராம சங்க பிரிவு, முல்லைத்தீவு பட்டின சபை வட்டாரம் ஆகியவை சேருகின்றன.

இங்கே வாழும் 41,600 பேரில் 38,400 பேர் வாக்காளர். இதிலே தமிழர் 67.0 சத விகிதமும், சிங்களவர் 17.0 சத விகிதமும், சோனகர் 8.0 சத விகிதமுமாவர். இவற்றில் 62.0 சத விகிதம் இந்துக்களும், 16.0 சத விகிதம் பௌத்தர்களும் 13.0 சத விகிதம் கிறிஸ்தவர்களும் உளர்.

(இக்கட்டுரையில் சனத்தொகை என்பது வயது வந்தவர்களையே குறிக்கிறது).
—ஆதாரம்: தொகுதி நிர்ணயக் கொமிஷன் அறிக்கை.

# கொழும்பு நகரசபைத் தேர்தல் கற்பிக்கும் பாடம்

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

திருமதி மீனு இரத்தினம், திரு. ருத்ரா இவ்விருவருமே இந்துக்கள். இவ்வளவு தமிழர் இங்கு இருந்தும் தமிழரசுக் கட்சியினர் இதில் ஈடுபடாமல் ஒதுங்கிவிட்டதேன் என்று கேட்கப்படுகின்றது.

### கெனமனின் தோல்வி

சென்ற 12 வருஷ காலமாகத் தேர்தலில் தோல்வியே அடையாத பீட்டர் கெனமன், கொட்டாஞ்சேனை மேற்குத் தொகுதித் தேர்தலில் தோற்றது பற்றி, எங்கும் பேச்சாக இருக்கிறது.

அவருடன் போட்டியிட்ட யு. என். பி. அபேட்சகர் அபய குணவர்த்தன 1877 வாக்குகளும், கெனமன் 1781 வாக்குகளும் பெற்றனர். 96 வாக்குகளால் கெனமன் இழந்தார். மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றவரும், ஏழைகளின் நண்பரென்று புகழ் பெற்றவருமான கெனமன் தோல்வியடைந்தது, கொம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெரிய அதிர்ச்சியே. ஆனால் சென்ற 1956ம் வருஷம் டிசம்பரில் நடந்த நகரசபைத் தேர்தலில் கொம்யூனிஸ்ட் கட்சிக்குக் கொழும்பிலே 16,206 வாக்குகள் கிடைத்திருக்கையில், இத்தேர்தலில் மொத்தம் 17,676 வாக்குகள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்ற தேர்தலில் யு.என்.பி. 39674 வாக்குகளும், எம். ஈ. பி. 25820, சமசமாஜ் 14822. கொம்யூனிஸ்ட் 16206, சுயேச்சை 12401 வாக்குகளும் பெற்றனர். இத்தேர்தலில், யு. என். பி., சமசமாஜ், கொம்யூனிஸ்ட் கட்சிகள் அதிக வாக்குகள் பெற்றிருக்கையில், எம். ஈ. பி. வாக்குகள் பெரிதும் குறைந்துள்ளன. பிலிப் குணவர்த்தனவின் தலைமையில் போட்டியிட்ட ஒருவராவது வெற்றிபெறமுடியவில்லை. அவரது சிங்களம் மட்டும் கோஷத்துக்கு மக்கள் செவிசாய்க்கவில்லை. மற்றோர் வகுப்புவாதக் கட்சியான ராஜரத்னவின் ஜாதிக விமுக்தி பெரமுன, இரண்டே அபேட்சகரை நிறுத்தியதால், இருவரது கட்டுப் பணமும் இழக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். மற்றக் காளான் கட்சிகளும் மண்ணைக் கவ்வியுள்ளன.

கொழும்பு நகரசபைத் தேர்தல் முடிவுகளை எல்லாக் கட்சிகளும் தீவிரமாகப் பரிசீலனை செய்துவருகின்றன. இடதுசாரிக் கட்சிகளுக்குள் ஒற்றுமை ஏற்படுத்த விசேஷ முயற்சிகள் நடைபெறுகின்றன. மொழிப் பிரச்சினைதான் இதற்குக் குறுக்கே நிற்பதாயும், இதில் பிலிப் குணவர்த்தன பிடிவாதமாக இருப்பதாயும் தெரிகிறது.

இத்தேர்தல் முடிவுகளைக் கண்டு சில காளான் கட்சிகள், பொதுத்தேர்தலிற் போட்டியிடுவதால் கட்டுப் பணத்தை இழப்பதைத்தவிரக் காணக்கூடிய பலன் எதுவுமிராது என்று உணர்ந்து போட்டியிடாமல் பேசாமல் இருந்துவிடலாம் என்றும் கூறப்படுகிறது.

* * *

### மோட்டார் பரிசு

பீட்டர் கெனமனைத் தேர்தலிற் தோற்கடித்தவருக்கு இரு வெளிநாட்டுத் தாபனங்கள் இரு மோட்டார்களைப் பரிசளிக்க முன்வந்ததாகக் கூறப்படுகிறது.

சமசமாஜக்கட்சிக்குச் சென்ற நகரசபையில் 3 ஸ்தானங்களே இருந்தன. இத்தேர்தலில் அக்கட்சிக்கு 8 ஸ்தானங்கள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

யு. என். பி. யின் தனிச்சிங்களக் கொள்கை இன்னும் மாறவில்லை. என்றாலும், சில தமிழர்கள் அக்கட்சியின் பெயரில் அபேட்சகராகப் போட்டியிட்டனர். இத்தேர்தலில் அக்கட்சி, மொழிப் பிரச்சினையைப்பற்றி எதுவும் பேசாமல் மௌனம் சாதித்தது.

இதற்கிடையே கொம்யூனிஸ்ட் கட்சி மொழி, வேலை நிறுத்தம் முதலிய விஷயமாக ஸ்திரமற்ற போக்குடையதாக இருப்பதாயும், அதுவே இத்தேர்தலில் அக்கட்சி வெற்றி பெறாததற்குக் காரணமென்றும் சொல்லப்படுகிறது.

# காசி விசிறி வரும்...

[12ஆம் பக்கத் தொடர்ச்சி]

புயல் தன் முழு வலிமையோடு தாக்குகிறது. தாங்கமாட்டாமல் கதறி நிலத்திலே விழுகிறாள். பின்னர் எழுகிறாள். மார்பிலே அடித்துக்கொள்கிறாள். பழைய நினைவுகள் அவள் உள்ளத்திலே ஒவ்வொன்றாய் உதயமாகின்றன. அந் நினைவுகளை அழுகைக்கிடையே ஒப்பாரி மூலம் வாய்விட்டுக் கூறுகிறாள். சோகத்தின் உறைவிடமான அவ்விடத்தில் கேட்ட உடனேயே கண்களில் நீர் பெருகுகின்றது.

காசி விசிறி வரும்
கைலாசத் தீத்தம் வரும்
காசி மகா ராசருடன்—நான்
கலந் திருந்து வாளலியே!

செஞ்சி விசிறி வரும்
தெய்வலோக தீத்தம் வரும்
செஞ்சி மகா ராசருடன்—நான்
சேர்ந் திருந்து வாளலியே!

பூசைக்குப் பண்ணி னேம்
பொன்னுஞ் செபமாலை-நம்ம
பூசை முடியலியே—நாம்
பூ உதிர வாளலியே!

காசுக் கரிசி வாங்கி
கன்னன் தவலைவாங்கி—நம்
கன்னூரு சொக்கருக்கு
கை பூசை செய்துவந்தோம்.

நம்ம பணத்தரிசி வேகலியே
—ஐயோ
பாவந் தொபிலைலியே
நம்மகாதரிசி வேகலியே-ஐயோ
கருமந் தொலையிலியே!

இது ஆசைக்குப் பண்ணியதோ
அழகுச் சிகமானே
ஆசையுடன் வாளலியே-எனைத்
தேடிய ராசா, நாமே.

கோடானுகோடி மக்கள் வாழும் இந்தப் பரந்த உலகில் இனி அவளைப்பொறுத்தமட்டில் அவள் தனிமைதான். விதி எப்போது எவரிடம் எப்படி விளையாடும் என்பதை யாரால்தான் அறிய முடியும்?

ஸி. எஸ். காந்திராஜ்

# கிறிஸ்மஸ் விழா

[13ஆம் பக்கத் தொடர்ச்சி]

### ஒரு புதிய மாறுதல்

கடந்த 27 வருடங்களாக நடைபெற்றுவந்துள்ள இந் நிகழ்ச்சியில் இம்முறை சில மாறுதல்கள் இடம் பெற்றுள்ளன. மகாராணியின் ஒலிபரப்பு காலை 9 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் மகாராணியும் குடும்பத்தவரும் கிறிஸ்மஸ் தினத்தைச் சுதந்திரமாக மகிழ்ச்சியோடு அனுபவிக்க வசதியேற்பட்டுள்ளது. மகாராணி அடுத்த வருட ஆரம்பத்தில் குழந்தையொன்றை எதிர்பார்ப்பதால், அவரது வைத்தியர்கள் இம்முறை டெலிவிஷனில் அவர் தோன்றுவதைத் தடுத்துள்ளார்கள். டெலிவிஷனின் மிகச்சக்தி வாய்ந்த ஒளிக்கதிர்கள் ராணி எலிசபெத்தின் தேகநிலைக்கு ஊறுசெய்யக்கூடும் என்பது அவர்கள் கருத்து. இராணியின் கிறிஸ்மஸ் செய்தியும் முன்னதாகவே ஒலிப்பதிவு செய்யப்பட்டுப் பின்னர் எல்லா வானொலி நிலையங்களிலும் ஒலிபரப்பப்படும்.

### கிறிஸ்மஸ் வாழ்த்து

உலகின் பலபாகங்களிலும் இருந்து பல்லாயிரக் கணக்கான வாழ்த்துக்களை மகாராணி கிறிஸ்மஸ் தினத்தில் பெறுவார். ஆயினும் அவர் எல்லோருக்குமே பதில் வாழ்த்துகள் அனுப்புவதில்லை. இது நீண்டகாலமாக வழங்கி வரும் ஒரு சம்பிரதாயமாகும். அரசியின் காரியதரிசியே எல்லோருக்கும் பதிலளிப்பார். அரசியின் அச்சகத்தார் மிகச் சிறந்த முறையில் அரசிக்கென ஒருதொகை வாழ்த்து இதழ்களைத் தயாரிப்பர். இத்தொகை 500க்கும் குறைவாக இருக்கும். இவற்றை அரசி தமது நெருங்கிய நண்பர்கட்கும் பல்வேறு தேசங்களின் தலைவர்கட்குமே அனுப்புகிறார்.

# தொட்டிலடி சனசமூக சேவா சங்கத்தின் ஆண்டு விழா

சங்கானை—தொட்டிலடி சனசமூக சேவா சங்கத்தின் பதினொராவது ஆண்டு விழா 20-12-59 ஞாயிற்றுக்கிழமை, சங்கானை பட்டின சபை அங்கத்தவர் திரு. த. பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் நடை பெற்றது.

சங்கக் காரியதரிசி, தனாதிகாரிகளின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. தமிழரசுக் கட்சிப்பிரமுகரும், முன்னை நாள் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் "மாணவர் கடமையும் வாசிகசாலையும்" என்னும் விஷயம் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

வளரும் எழுத்தாளர் சங்கத் தலைவர் செல்வன் க. குகதாசன் "சமுதாய வாழ்க்கை" என்னும் பொருள்பற்றிப் பேசினார். சங்க மாணவிகள் சங்கீத, நடன விருந்தளித்தனர். பின்னர் புது வருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்:— திரு. க. இராமலிங்கம் உப தலைவர்:— திரு.வே.சிவசுப்பிரமணியம், காரியதரிசி:— திரு. வி. பாலரத்தினம், உப- காரியதரிசி:— திரு. சி. ஜெயரத்தினம், தனாதிகாரி:— ஆ. முருகேசு, நிர்வாகசபை அங்கத்தவர்கள்:— திருவாளர்கள் க. கந்தையா, ம. சிவசுப்பிரமணியம், நா. நடராசா, க. கனகலிங்கம், ச. குலவீரசிங்கம், வீ. நாகலிங்கம். கணக்குப் பரிசோதகர்:— திரு. க. கிருஷ்ண பிள்ளை.

# கலைவாணர் நாடக மன்றத்தினர் கௌரவிக்கப்பட்டனர்

ஞாயிற்றுக்கிழமை(13-12-59) மாலை 6 மணியளவில் சேணிய தெரு மிஷன் பாடசாலை மண்டபத்தில் கலைவாணர் நாடக மன்றத்தினருக்கு, யாழ் ஸ்ரீ சரவணபவா நாடகமன்றத்தினர் வாழ்த்துப்பத்திரம் அளித்துக் கௌரவித்தனர். கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசிய கலையரசு சொர்ணலிங்கம், கலைஞர்கள் கலைஞர்களைக் கௌரவிப்பது கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுமென்றும், கலைஞர்களிடையே ஒற்றுமை மனப்பான்மை நிலவின் கலை வெற்றி பெறுமெனவும் குறிப்பிட்டார். திருவாளர்கள் எம். கார்த்திகேசு, புதுமைலோலன் ஆகியோர் இவ்விழாவிற் பங்குபற்றினர்.

# டக்டர் பட்டாபி சீதாராம ஐயர் காலமானார்

இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவரும் மத்திய பிரதேச முன்னாள் தேசாதிபதியாயும் விளங்கிய டக்டர் பட்டாபி சீதாராம ஐயர் சென்ற வியாழக்கிழமை ஹைதராபாத்தில் காலமானார். இந்தியாவின் விடுதலைக்காகச் சலியாது பணியாற்றிய இத்தேச பக்தர், இந்திய காங்கிரஸின் வரலாற்று நூலை எழுதியுள்ளார் இறக்கும்போது அவருக்கு வயது 80.

எமது ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள்!

**எல்பின்ஸ்டன்** (மருதானை) **ரெக்ஸி** (வெள்ளவத்தை) **வின்ஸர்** (யாழ்ப்பாணம்) **வேல்ஸ்** (கண்டி) **குமாரன்** (மன்னார்) **நியூ இம்பீரியல்** (மட்டக்களப்பு)

எம். வி. ராமனின் அற்புத சிருஷ்டி!

இந்தி, தமிழ்ப்படங்கள் இரண்டிலுமே மங்காத புகழீட்டி வரும் வைஜயந்திமாலாவின் வண்ண நடனங்கள்!

எல்லாமே டெக்னிக்கலரில்! கண்டு களியுங்கள்!

வைஜயந்திமாலா தோன்றும்

# அதிசயப் பெண்

லண்டன், பாரிஸ், மொஸ்கோ, பிராக் ஆகிய ஐரோப்பியத் தலைநகரங்களில் வைஜயந்திமாலா ஆடிப்புகழ்பெற்ற நடனங்கள் சிலவற்றை அழகிய வண்ணத்தில் கண்டு மகிழ அரியதோர் சந்தர்ப்பம்!

---

**நான்காவது வாரம்!** **கெயிட்டி** (கொழும்பு)

ஜெமினி கணேசன், எம். என். ராஜம், எம். என். நம்பியார்

நடிக்கும்

# பெண் குலத்தின் பொன் விளக்கு

ஆண்களிலும் பெண்கள் மேம்பட்டவரென விறுப்புப் பேசிய படித்த பெண் தனது கணவனுல் அடக்கப்படுவதைச் சித்திரிக்கும் அருமையான ஹாஸ்யப் படம்!

---

**செல்லமஹால்** (கொழும்பு) இப்பொழுது திரையிடப்படுகிறது!

எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி, பத்மினி பிரியதரிசினி

நடிக்கும்

# தாமரைக்குளம்

---

**கிறிஸ்மஸ் பெருநாளை சிறப்பாகக் கொண்டாட காட்சி அளிக்கிறுன்!**

**காமினி** (மருதானை) **பிளாஸா** (வெள்ளவத்தை) **மைலன்** (கொழும்பு) **நவா** (கொம்பனித்தெரு) **விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி)

**ஸ்ரீகிருஷ்ண** (திருக்கோணமலை) **மொடர்ன்** (பதுளை) **சம்ரொக்** (வென்னப்புவா) **ஜுப்பிட்டர்** (குருணகல)

★ ரஞ்சன்
★ ராஜநலா
★ ராஜசுலோசன
★ சௌகார் ஜானகி
★ சாரங்கபாணி
★ சூரியகலா
★ ராஜகோபால்
★ அங்கமுத்து
★ சாயிராம்


அனைவரும் சேர்ந்து திறம்பட நடித்த வீரச்சித்திரம்.

சில சிறந்த காட்சிகள் ஈஸ்மண்ட் கலரில் காண்பிக்கப்படும்.

பாடல்கள்: மருதகாசி

இசை அமைப்பு: விஸ்வநாதன் ராமமூர்த்தி

நடனம்: கோபாலகிருஷ்ணன்




---

மங்களகரமான **11**-வது வாரம்! **கிங்ஸ்லி** (கொழும்பு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

எண்ணற்ற ரசிகர்களின் இதயங்களைக் கவர்ந்த இன்பச்சித்திரம்!

# கல்யாண பரிசு

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ந் திகதி வெளியிடப்பெற்றது.